நாட்டின் தவிர்க்க முடியாத தேவை ஒரு மூன்றாவது அரசியல் சக்தி

லத்தீப் பாரூக்

கலண்டர் 2017

மீள்பார்வை

மீல்பார்வை

Registered as a newspaper in Sri Lanka
GPO-QD/63/NEWS/2016 - ISSN 2012-5038

Meelparvai Fortnightly
www.meelparvai.net

සමාජ වෙනසකට හඬන හඬ
சமூக மாற்றத்திற்கான குரல்

இதழ் - 357 • 02 டிசம்பர் 2016 வெள்ளிக்கிழமை • ரபீஉல் அவ்வல் 1438 • விலை 40.00

RI MOBILE
Wholesale Dealers in Mobile Phone Accessories
077-3050949
077-4843323
Tel: 011-2439470
151/11, Mumbai Plaza, 2nd Cross Street, Colombo - 11
Branch: 159/21, Green Arcade, Main Street, Colombo - 11
தேவையான பொருட்களை இருக்குமிடத்தில் இருந்தே மொத்தமாகவும் பெற்றுக்கொள்ள
அழையுங்கள் 0777 777 761
0777 674 941

ஆத்திரமூட்டுபவர்களுக்கு எதிராக சட்டத்தை கடுமையாக்க வேண்டும்

குறுகிய அரசியல் நோக்கத்துக்காக வெறுக்கத்தக்க பேச்சுக்கள் மூலம் இனங்களையும் மதங்களையும் இழிவுபடுத்தி அதனூடாக சமூகங்களுக்கிடையில் பிளவை ஏற்படுத்தும் முயற்சிகளுக்கு இடமளிக்க முடியாது என தேசிய ஒருமைப்பாட்டிற்கும் நல்லிணக்கத்திற்குமான அலுவலகத்தின் தலைவர் என்ற ரீதியில் முன்னாள் ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்க அறிக்கை விடுத்துள்ளார். இனங்களுக்கிடையில் பிரிவினையை ஏற்படுத்துவதற்காக இனவாத மற்றும் மதவாத அடிப்படையில் ஆத்திரமூட்டுபவர்கள் சம்பந்தமாக தாமதிக்காது சட்டத்தை கடுமையாக செயற்படுத்த வேண்டியுள்ளது என்றும் அவர் தனது அறிக்கையில் சுட்டிக்காட்டியுள்ளார். (பக்.14)

அபாயா இனவாதம் ஆசிரியர்களை நோக்கி நீள்கிறது

இனவாத, தீவிரவாத நடவடிக்கைகளுக்கு நாட்டில் இடமில்லை எனப் பிரதமர் கூறியபோதிலும் முஸ்லிம்களுக்கு எதிரான இனவாதச் செயற்பாடுகள் தொடர்ந்தும் கவனிக்கப்படாமலேயே இருந்து வருகின்றன. கடந்த ஆட்சிக் காலத்தில் பௌத்த தீவிரவாதிகளால் முன்னெடுக்கப்பட்ட அபாயாவுக்கு எதிரான தீவிரவாதச் செயற்பாடுகள் தற்போது கிழக்கிலங்கையில் தொடரப்படுகின்றன.

தேசிய கல்வியல் கல்லூரிகளில் கற்கை நெறிகளை முடித்தவர்களுக்கான ஆசிரியர் நியமனம் வழங்கப்பட்டபோது, கிழக்கு மாகாணத்தில் நிலவும் ஐயாயிரத்துக்கு மேற்பட்ட ஆசிரியர் வெற்றிடங்களை காரணங் காட்டி, கிழக்கு மாகாண ஆசிரியர்களுக்கு கிழக்கிலேயே நியமனம் வழங்கப்பட வேண்டும் என்று கிழக்கு மாகாண (பக்.14)

பலஸ்தீன் ஒருமைப்பாட்டுக்கான சர்வதேச தினம் கொழும்பில் அனுஷ்டிக்கப்பட்டது. சிரேஷ்ட ஊடகவியலாளர் மஹிந்த ஹத்தக, இலங்கை பலஸ்தீன பாராளுமன்ற நட்புறவுச் சங்கத்தின் தலைவர் அமைச்சர் ராஜித சேனாரத்ன, செயலாளர் பிமல் ரத்நாயக்க ஆகியோர் உரையாற்றினார். இந்நிகழ்வின்போது அமைச்சர் ராஜித சேனாரத்னவுக்கான நினைவுச் சின்னமொன்றை பலஸ்தீன தூதரகத்தின் கவுன்சிலர் ஹிஷாம் அபூ தாஹா வழங்கி வைத்தார்.

பூதங்களை அடக்க இறுக்கமான பேச்சுவார்த்தை

முஸ்லிம் சமூகத்திற்கு எதிராக கிளம்பியுள்ள பூதங்களை அடக்குவது தொடர்பில் ஜனாதிபதி மற்றும் பிரதமர் ஆகியோருடன் இறுக்கமாக பேசி வருகின்றோம் என நகர திட்டமிடல், நீர் வழங்கல் ,அமைச்சர் ரவூப் ஹக்கீம் தெரிவித்துள்ளார்.

இஸ்லாமிய தமிழ் இலக்கிய பொன் விழாவின் இரண்டாம் நாள் இறுதி நிகழ்வில் உரையாற்றும் போது தொடர்ந்தும் அவர் கருத்து தெரிவிக்கையில்,

நாட்டின் தற்போதைய சூழ்நிலையில் சமூகம் எதிர்நோக்கியுள்ள பிரச்சினைகளுக்கு தீர்வு காணும் பொருட்டு முஸ்லிம் அரசியல் தலைமைகள் கூட்டிணைந்து செயற்படுவதற்காக ஜம்மியத்துல் உலமா, சூரா சபை உட்பட புத்திஜீவிகளும் காத்திரமான பங்களிப்பை மேற்கொண்டுள்ளனர். (பக்.14)

இன, மதவாதம் பேசினால் விசேட பொலிஸ் பிரிவு மூலம் நடவடிக்கை

இனங்களுக்கும் மதங்களுக்கும் இடையிலான நல்லிணக்கத்தைக் குழப்பும் வகையில் செயற்படும் மற்றும் கருத்துகளை வெளியிடுபவர்களைக் கைதுசெய்து, அவர்களுக்கு எதிராகக் கடும் சட்ட நடவடிக்கை மேற்கொள்வதற்காக, விஷேட பொலிஸ் பிரிவொன்று உருவாக்கப்பட்டுள்ளது.

பொலிஸ் திணைக்களத்தில் இயங்கும் வகையில் உருவாக்கப்பட்டுள்ள இந்த பொலிஸ் பிரிவு, பிரதிப் பொலிஸ்மா (பக்.14)

தமிழர் அரசியல்: வடக்கும் மலையகமும் இணைகிறது

வடக்கு - கிழக்கு தமிழ் மக்களைப் பிரதிநிதித்துவப்படுத்தும் தமிழ்த் தேசிய கூட்டமைப்புடன் அரசியல் ரீதியாக இணைந்து செயல்படுவதற்கு மலையக மக்களை பிரதிநிதித்துவப்படுத்தும் தமிழ் முற்போக்கு முன்னணி தயாராகிவருவதாக அம் முன்னணியின் தலைவர்களில் ஒருவரான கல்வி இராஜாங்க அமைச்சர் வே. இராதாகிருஷ்ணன் தெரிவித்திருக்கின்றார்.

நுவரெலியா மாவட்டத்தில் இந்திய உதவி வீடுகளுக்கான அடிக்கல் நாட்டும் நிகழ்வில் கலந்து கொண்டு உரையாற்றிய அவர் வட, கிழக்கு போராட்டம் ஆரம்பிப்பதற்கு முன்பு (பக்.14)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இஸ்ரேல் தீ பற்றி எரிகின்றது

இஸ்ரேலின் நெருப்பால் முகநூல் பற்றி எரிந்து கொண்டிருக்கிறது.

இஸ்ரேல் மீது இரக்கம் காட்டுவோம் என்று ஒரு கூட்டம். நபிகளாரின் அன்பு, கருணை, இரக்க குணம், சகிப்புத்தன்மை, மன்னிக்கும் மனப்பாங்கு என்று ஹதீதுகளை அள்ளிவீசிக் கொண்டிருக்கிறார்கள்.

ஒருவர் ஒருபடி மேலே சென்று அவர்களுக்காகப் பிரார்த்தித்து வீதியில் இறங்கி பணம் சேர்க்கப் பிரேரித்திருக்கிறார். வாசித்தவுடன் உடம்பெல்லாம் புல்லரித்துவிட்டது.

- ராஷி முஹம்மத் ஐப்பார்

எப்படி ஒற்றுமையாக வாழனும்

காட்சி 01: இன்று ஒரு கூட்டம் நடந்துச்சு. பெரும்பான்மை மக்களோடு எப்படி ஒற்றுமையாக வாழனும்? அவர்களை எப்படி மதிக்கனும்? சுருக்கமாக- அவர்களை எப்படி கைக்குள்ள போடனும்? என்று சில ஐடியாக்கள் கிடைத்தன.

காட்சி 02: வீட்டுக்கு வந்துட்டு இருந்தேனா. நைட் 10 மணி இருக்கும். நம் வீட்டுக்கு முன்னாடி ஒரு மோட்டார் பைக் ஸ்டார்ட் நின்னுருக்கு. நடுத்தெருவுல ரெண்டு சிங்கள பொடியனுகள். என்ன செய்வதென்று தெரியாம தடுமாறுகிறார்கள்.

காட்சி 03: ஆஹா... என்ன அருமையான சந்தர்ப்பம். தொப்பி வேறு போட்டிருக்கேன். இப்போ போய் ஹெல்ப் பண்ணனும். நல்ல பேரு வாங்கனும். நிய்யத் வெச்சேன்.

காட்சி 04: அதற்குள் நம்ம நானாவும், இன்னொரு வாலிபரும் வந்து சேர்ந்தனர். ஆமா ஹெல்ப் பண்ணனும் என்று குரல் கொடுத்தனர். 'நம்ம கடைக்குள்ள பைக்க நிறுத்திட்டு ஆட்டோல வீட்டுக்கு போங்க தம்பி. காலைல வந்து எடுத்துக்கலாம்' என்று மஷூரா வும் சொன்னோம். அவங்களும் ரெடியாவிட்டாய்ங்க. நமக்கு மகிழ்ச்சி.

காட்சி 05: எதுக்கும் இன்னொரு தடவ ஸ்டார்ட் அடிச்சி பாரு மச்சான்னு ஒருத்தன் சொன்னான். அவனும் அடிச்சான். பட்டுருச்சு. உடனே ரெண்டுபேரும் டாட்டா காட்டிட்டு போயிட்டாய்ங்க.

காட்சி 06: அப்றம் என்னாச்சுனு கட்டாயம் சொல்லித்தான் ஆவனுமா? அந்தோ பரிதாபம். கைக்கெட்டியது வாய்க்கு எட்டவில்லை. feeling sadனு கௌம்பி போயிட்டோம்.

நாலும் தெரிந்த ஆட்டுக்காரன்!

ஜாவத்தைத் தெருவில் முச்சக்கர வண்டியொன்றில் நேற்றுமாலை 7.20 அளவில் நானும் நண்பர் நாச்சியாதீவு பர்வீனும் வந்து கொண்டிருந்தோம். முச்சக்கர வண்டி ஓட்டுனர் ஒரு பெரும்பான்மை இளைஞன்.

தூறல் மழை!

சிக்னலில் காத்திருந்த போது ஏறக்குறைய 20 வாகனங்கள் நின்றிருந்தன. எமது முச்சக்கர வண்டிக்கு முன்னால் ஒரு கார் நின்றிருந்தது. ஐந்து நிமிடத் தாமதத்துக்குப் பின்னர் முச்சக்கர வண்டியை எமக்கு முன்னால் நின்றிருந்த காரின் அருகே நகர்த்திய ஓட்டுனர் மூடியிருந்த கார் ஜன்னல் கண்ணாடியைத் தட்டி..

''இந்த மாதிரிச் சண்டித்தனங்களையெல்லாம் வைத்துக் கொள்ள வேண்டாம்'' என்று கத்தினான்.

பதிலுக்கு கார்க் கண்ணாடியை இறக்கி விட்ட காருக்குள்ளிருந்த ஒருவன் பதிலுக்குக் கத்தினான். ''உனது வேலையை நீ பார்த்துக் கொண்டு போ!'' எமக்கு எதுவும் புரியவில்லை.

சண்டை வலுத்தது. முச்சக்கர வண்டிச் சாரதியின் சத்தம் உயர்ந்தது. உரத்துப் பேசப் பட்ட வார்த்தைகளிலிருந்து விடயம் மொத்தமாகப் புரியவில்லை.

காருக்குள் இருவர். சாரதி ஆசனத்திலிருந்தவரின் கழுத்தை அருகே அமர்ந்திருந்தவன் இரு கரங்களாலும் நசித்திருக்கிறான். கிட்டத் தட்ட ஒரு கொலை முயற்சி.

முச்சக்கர வண்டிச் சாரதி பொறுக்காமல் இறங்கித் தெருவில் நின்ற பொலிஸ்காரரிடம் முறையிட்டு அவரை அழைத்து வந்து விட்டு முச்சக்கர வண்டியில் ஏறினான். காருக்குள் எட்டிப் பார்த்தேன். திக் என்றது.

சாரதி ஆசனத்தில் இருந்த அந்த முதியவருக்கு அதாவது கழுத்து நெரிக்கப்பட்ட வருக்கு 60 - 65 வயதிருக்கலாம். வெண்பஞ்சு தாடி. தலையில் தொப்பி. ஒரு முஸ்லிம்!

கழுத்தை நசித்தவன் 25 வயது மதிக்கத்தக்க இளைஞன். அநேகமாக அவரது மகனாக இருக்க வேண்டும்.

''எனக்கு எந்த இனம், மதம் என்ற கவலை கிடையாது. மனிதனை மனிதன் தாக்கக் கூடாது. இம்மாதிரி விடயங்களைக் கண்டால் இலகுவில் பார்த்து விட்டுக் கடந்து போக மாட்டேன்!'' என்று வழி நெடுகிலும் சொல் லிக் கொண்டு வந்த அந்தப் பெரும்பான்மை இளைஞன் வான்படையில் கடமையாற்றுபவன். இரவில் முச்சக்கர வண்டியோட்டுவது வழக்கம்.

இன்னும் இந்தச் சம்பவம் மனதை விட்டு அகலவில்லை.

ஒரு வேளை கழுத்து நெரிபட்டு அந்த முதியவர் மரணித்திருந்தால் இன்று காலை எங்கோ ஓரிடத்தில் அவரது சடலம் கண்டு பிடிக்கப்பட்டிருக்கும்.

முஸ்லிம் வயோதிபர் கொலை என்ற தகவலுடன் இன்று ஏற்பட்டிருக்கும் இனமுறுகலுடன் சம்பந்தப்படுத்தப்பட்ட, அல்லது தொடுக்கப்பட்ட செய்தி சமூக ஊடகங்களில் பரப்பப்பட்டிருக்கலாம்.

- அஷ்ரப் ஷிஹாப்தீன்

காஸ்ரோ எதனை சார்ந்து வாழ்ந்தார்

இடதுசாரி மரபில் ஆட்சிசார் விவகாரங்களில் குறைபாடுகள் இருப்பதை நான் மறுக்கவில்லை. ஆனால், அதனை ஐரோப்பிய மையவாத / ஏகாதிபத்திய அரசுகளின் நோக்கிலிருந்து பார்ப்பது தவறென்பதே எனது கருத்து. பல கட்சி ஆட்சி முறைமை ஜனநாயகத்தை காப்பதற்கான முக்கிய கருவி என்பதில் மாற்றுக் கருத்து இல்லை. ஒரு கருவியை அனைத்தையும் மதிப்பிடுவதற்கான அளவுகோலாக கொள்வது பொருத்தமான பார்வையாக அமையாது.

அந்தவகையில்தான் காஸ்ரோ எதனை சார்ந்து வாழ்ந்தார், எதற்காக போராடினார், உழைத்தார் என்பதைக் கொண்டே அவரை மதிப்பிட வேண்டும். கம்யூனிச சித்தாந்தம் பாட்டாளி வர்க்க சர்வதிகாரத்தினை ஆதரிக்கிறது என்பது உண்மை தான். அதனை கம்யூனிச / சமவுடமைச் சமுதாயத்துக்கான நிலைமாறும் காலகட்ட ஒழுங்காகவே கொள்கிறது என்பதனையும் நாம் மறந்து விடக் கூடாது.

- மனாசிர் சறூக்

தண்டப்பணம் அதிகரிப்பு

500 ரூபா தண்டம் இருக்கும்போதே குறைந்தது 200 ரூபா லஞ்சம் வாங்கினவர்களிடம் போய் இந்த பிச்சைக்காசை எல்லாம் நீங்க எடுக்கவேண்டாம் கொஞ்சம் டீசெண்டா வாங்கி எடுங்க என்று அரசே 25000 ஆக்கி விட்டிருக்கு.

உண்மையிலேயே நல்ல ஆட்சிதான் நடக்குது.

- ரஸானா மனாப்

நூல் வெளியீடு மற்றும் பரிசளிப்பு நிகழ்வு

OMSED அமைப்பின் ஏற்பாட்டில் நடைபெற்ற ''இளைஞர்களுக்கு மட்டும்'' நூல் வெளியீடு மற்றும் றமழான் வினா விடைப் போட்டியில் வெற்றி பெற்றவர்களுக்கான பரிசளிப்பு நிகழ்வு என்பன 30.11.2016 தபால் தலைமையக கேட் போர் கூடத்தில் OMSED அமைப்பின் தலைவர் அஷ்ஷெய்க் அஹ்சன் ஆரிப் தலைமையில் இடம்பெற்றன. இந் நிகழ் வில் பிரதம அதிதியாக அல் ஹாஜ் யாகூத் நளீம் கலந்து கொண்டார்.



கிராமிய பொருளாதார அலுவல்கள் பிரதி அமைச்சரும் அகில இலங்கை மக்கள் காங்கிரஸ் கட்சியின் தவிசாளருமான அமீர் அலி உலக பலஸ்தீன அல் குத்ஸ் மாநாட்டில் இலங்கை சார்பில் பங்கேற்றுள்ளார்.

சிறப்பு நல்லிணக்க பொலிஸ் பிரிவு ஸ்தாபிப்பதை பொதுபலசேனா எதிர்ப்பு!

(சிறாஜ் மஷ்ஹூர்)

புதிதாக அமைக்கப்படவுள்ள விசேட நல்லிணக்க பொலிஸ் பிரிவை வரவேற்போம். அது காலத்தின் தேவையாக உள்ளது. இது நேர்மையாகவும் வெளிப்படைத் தன்மையுடனும் இயங்க வேண்டும். அரசியல்வாதிகளின் அழுத்தங்களுக்குப் பலியாகக் கூடாது.

எல்லாவற்றையும் விட, சிறுபான்மை மக்களை சட்டத்தின் பிடிக்குள் இறுக்கும் கருவியாக இதனைப் பயன்படுத்தக் கூடாது.

சின்ன மீன்களைப் பிடித்து விட்டு, சட்டத்தின் ஓட்டைகளையும் அதிகாரத் [illegible] இருக்கின்றது' என்று தெரிவிக்கின்றனர்.

தும் பார்த்துக் கொண்டுதானே இருக்கிறோம். ஆனால், நாட்டின் பொலிஸ் துறையில் மலிந்து கிடக்கும் மனித உரிமை மீறல்கள், ஊழல், துஷ்பிரயோகம், பக்கச் சார்பு போன்ற பிரச்சினைகளிலிருந்து இந்தப் பிரிவு விடுபட முடியுமா? நம்புவதற்கு கஷ்டமாகவே உள்ளது.

சகோ. அப்துர் ராஸிக்கை கைது செய்வதில் இவர்கள் காட்டிய தீவிரம், அதைவிட பாரதூரமான தவறிழைத்தோர் விடயத்தில் அடங்கிப் போயிருப்பது ஏன்? சட்டத்தை தமக்கு வசதியாக வளைத்தெடுப்பதா சட்டவாட்சி?

அரசாங்கமொன்று sensitive ஆன விடயங்களை, கவனமாகக் கையாள வேண்டும்தான். அதற்காக பகிரங்கமாக சட்டவாட்சிக்கும், சமூக நல்லிணக்கத்திற்கும் சவால் விட்டுக் கொண்டிருக்கும் வன்முறையாளர்களையும் ஏஜண்டுகளையும் கொந்தறாத்துக்காரர்களையும் பொறுத்துக் கொண்டிருப்பது எப்படித் தகும்?

முடிச்சுக்கள் அவிழாத கல்ஹின்னை கொலை வழக்கு

(அனஸ் அப்பாஸ்)

அண்மையில் கல்ஹின்னை பகுதியில் துப்பாக்கியால் சுடப்பட்ட ஏ.எஸ்.எம். ரபீக் - எம்.வை.யூ. சலீமா தம்பதிகளின் மகன் முபீத் (23) கொலை வழக்கில் கைதான இரு சந்தேக நபர்களின் விசாரணை முடிவுகளின்படி பொலிஸ் தரப்பால் தனிப்பட்ட விவகாரம் காரணமாக வெளிநாட்டிலிருக்கும் ஒருவரால் பணம் கொடுத்து செய்யப்பட்ட திட்டமிட்ட கொலை அல்லது மோதல் ஒன்றின் பழிவாங்கல் செயற்பாடு என்றும் கூறப்படுவதாக ஊடகங்கள் செய்தி வெளியிட்டிருந்தன.

இது தொடர்பில் மீள்பார்வை பத்திரிகைக்கு தகவல் தெரிவித்த ஊடக பிரதியமைச்சர் கருணாரத்ன பரண விதான இது இனவாத செயற்பாடா? அல்லது வேறு தனிப்பட்ட காரணங்களாள் இடம்பெற்ற கொலையா? என்பது தொடர்பாக விசாரணைகள் தொடர்ந்தும் நடைபெற்றுவருவதாக தெரிவித்தார். கொலை செய்யப்பட்ட இளைஞனின் பெற்றோர் மீள் [illegible] கருத்து தெரிவிக்கையில் 'தமக்கும் கொலை தொடர்பான காரணம் குறித்து [illegible] இருக்கின்றது' என்று தெரிவிக்கின்றனர்.

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

பலஸ்தீன் போராட்டம் தோல்விக்கான போராட்டமொன்றல்ல

பலஸ்தீன் ஒருமைப்பாட்டுக்கான சர்வதேச தின நிகழ்வில், இலங்கை பலஸ்தீன பாராளுமன்ற நட்புறவுச் சங்கத்தின் செயலாளர்

பிமல் ரத்நாயக்க

சுதந்திரத்திற்காக வேண்டி உலக ஏகாதிபத்தியவாதிகளுக்கு எதிராக சிறிய தொரு கூட்டத்தினால் சரியான இலக்கில் போராடி வெற்றி பெற முடியும் என இந்நூற்றாண்டில் இலங்கைக்கும் பலஸ்தீனுக்கும் முன்மாதிரியை வழிகாட்டிய புரட்சியாளர் பிடெல் கஸ்ட்ரோ சகோதரருக்கு எமது கௌரவங்கள் உரித்தாகட்டும்.

ஏகாதிபத்தியவாதிகளை பொருளாதார ரீதியிலும் இராஜதந்திர ரீதியிலும் தோற்கடிக்கலாம் என்பதை வியட்நாம், கியூபா போன்ற சோசலிச நாடுகள் எம்க்குக் கற்றுத் தந்துள்ளன. அமெரிக்க இராணுவம் இரண்டு சந்தர்ப்பங்களில் தோற்றுள்ளது. வியட்நாம், கியூபா ஆகிய நாடுகளாலேயே தோற்கடிக்கப்பட்டது. 1992 ஆம் ஆண்டு முதல் கடந்த வருடம் வரையில் கியூபாவுக்கு எதிராகடி ஐ.நா. சபைக்கூடாக அமெரிக்கா பல தீர்மானங்களை நிறைவேற்றியது.

140 நாடுகளின் ஆதரவை சிறிய பலஸ்தீனுக்காக வெற்றி கொள்ள முடிந்தமைக்கான காரணம் பலஸ்தீன சகோதரர்களின் பாரிய போராட்டத்தினாலாகும். இன்னும் எமக்கு 50 நாடுகளை மாத்திரமே வெற்றிகொள்ள வேண்டியிருக்கிறது.

நான் நினைக்கிறேன், எம் வாழ் நாளில் அந்நாடுகளையும் வெற்றி கொண்டு பலஸ்தீனுக்கு சுதந்திரத்தி ரத்தை பெற்றுக்கொடுக்க முடியும் என்று. இந்நிகழ்ச்சிக்கு மேலதிகமாக நாட்டு மக்களையும் தொடர்புபடுத்திக்கொள்ளும் வகையில் பலஸ்தீன் புரிந்துணர்வு நிகழ்ச்சிகளை டிசம்பர் 2,9 ஆம் திகதிகளில் நடாத்தவுள்ளோம். தற்பொழுது துருக்கியின் ஸ்தான்பூல் நகரில் பாராளுமன்ற உறுப்பினர்களின் பலஸ்தீன் ஒருங்கிணைவு மாநாடு இடம்பெறுகிறது.

எமது நாட்டை பிரதிநிதித்துவப்படுத்தி வசந்த சமரசிங்க அவர்கள் கலந்து கொண்டுள்ளார்கள். கட்சி என்ற வகையிலும் நாட்டின் பிரஜைகள் என்ற அடிப்படையிலும் வேறுபாடுகளை துறந்து பலஸ்தீன் பிரச்சினை தொடர்பில் ஒன்றாக பணியாற்றுகிறோம். பாராளுமன்றத்திலும் நாம் பலஸ்தீன் பற்றிய உரையாடல்களை முன்னெடுக்கிறோம். சுதந்திர பலஸ்தீனுக்காக வேண்டி நாம் ஒன்றாக போராடி வருகிறோம்.

மக்கள் விடுதலை முன்னணியின் உறுப்பினர் என்றவகையில் 1976 ஆம் ஆண்டு சிறையில் இரகசியமான முறையில் மக்கள் விடுதலை முன்னணி தயாரித்த முதலாவது கொள்கைத் திட்டத்தில் சுதந்திர பலஸ்தீனர்களுக்காக வேண்டி எமது நிலைப்பாட்டை முதலில் முன்வைத்துள்ளோம். ஒரு கட்சியென்ற வகையில் பலஸ்தீன் விடுதலை என்பது எமது கொள்கையாக உள்ளது. தென்னாபிரிக்காவின் முன்னாள் ஜனாதிபதி நெல்சன் மண்டேலா பலஸ்தீனுக்கு சுதந்திரம் கிடைக்காமல் தென்னாபிரிக்காவின் சுதந்திரம் பரிபூரணமாகாது எனத் தெரிவித்திருந்தார்.

பலஸ்தீன் பிரச்சினை இஸ்ரேலின் பிரச்சினையல்ல. இது இஸ்ரேல் மக்களின் பிரச்சினையல்ல. அவர்கள் பகடைக் காய்கள். இது அமெரிக்க கொள்கைத் திட்டத்தில் உள்ள பிரச்சினை. சுதந்திர பலஸ்தீன் கொள்கையை மதிக்கும் யூதர்கள் இஸ்ரேலில் உள்ளார்கள். நான் கடந்த அக்டோபர் மாதம் பலஸ்தீன் ஜனாதிபதியின் அழைப்பில் அங்கு சென்ற பாராளுமன்றக் குழுவில் அங்கம் வகித்திருந்தேன். நாம் அங்கு இஸ்ரேல் கம்யூனிஸ்ட் கட்சியையும், இடதுசாரிக் கட்சியையும் சந்தித்தோம். தொழிற்சங்கங்களையும் சந்தித்தோம். அவர்கள் யூதர்கள். ஆனால் ஏகாதிபத்திய எதிர்ப்பாளர்கள். பலஸ்தீன் விடுதலையை அவர்கள் ஆதரிக்கிறார்கள்.

பலஸ்தீன் போராட்டம் தோல்விக்கான போராட்டமொன்றல்ல. இஸ்ரேலிடம் எவ்வளவோ பலம் இருந்தாலும் ஒரு நாடாக பலஸ்தீன் துணிச்சலோடு முன்னகர்கிறது. பலஸ்தீன் ஒரு நாடு. அங்கு ஒரு ஜனாதிபதி உள்ளார். அங்கு பிள்ளைகள் பாடசாலை செல்கிறார்கள். 2015 ஆம் ஆண்டு பலஸ்தீன் பல்கலைக்கழக மாணவர்களின் எண்ணிக்கை 2 லட்சத்திற்கும் அதிகம். சுகாதாரத் துறைக்கு 11 வீத நிதி ஒதுக்குகிறார்கள். சுகாதார நிலைமைகள் உயர்மட்டத்தில் உள்ளன. 47 இலட்ச மக்கள் போராடிக் கொண்டு பிள்ளைகளை பாடசாலைக்கு அனுப்புகிறார்கள்.

இதனை இஸ்ரேல் அரசாங்கம் கொடுக்கவில்லை. அம்மக்கள் போராடியே இவற்றை பெறுள்ளார்கள். இது தொடர்பில் நாம் வியப்படைய வேண்டும். பலஸ்தீன் இதுவரையில் ஏராளமான தலைவர்களையும் சமூக செயற்பாட்டாளர்களையும் உருவாக்கியுள்ளது. பலஸ்தீன் இராஜதந்திரப் போராட்டத்தை (Diplomatic Struggle) வென்றுள்ளது. பல உயிர்கள் இழந்தாலும் ஒரு நாடு செய்யும் பணிகள் எவ்வித குறைபாடுகள் இல்லாமல் முன்னகருகின்றன. எனவே எமக்கு சுதந்திரமான பலஸ்தீனை உருவாக்க வேண்டியதன் தேவையே உள்ளது.

எமது நாட்டை எந்தெந்த கட்சிகள் ஆட்சி செய்தாலும் இலங்கை சுதந்திர பலஸ்தீன் கொள்கையை ஏற்றுள்ளதை இலங்கை பலஸ்தின் நட்புறவுச் சங்கத்தின் செயலாளர் என்ற வகையில் குறிப்பிட வேண்டியுள்ளது. அதை நாம் போற்ற வேண்டும். இலங்கை 1968ல் இருந்து இன்று வரை ஐ.நா. சபையில் பலஸ்தீனுக்கு எதிரான இஸ்ரேலின் குற்றச்சாட்டுக்கள் தொடர்பில் கண்டறியும் குழுவில் தலைமை வகித்து வருகிறது. 1975 ஜூலை 1 ஆம் திகதி இலங்கையில் பலஸ்தீன் தூதுவராலயம் உருவாக்கப்படுகிறது. 1988 இல் பலஸ்தீன் ஒரு சுதந்திர தேசம் என்பதை இலங்கை ஏற்றுக்கொண்டது. 1989 பெப்ரவரி 6ம் திகதி பலஸ்தீன் விடுதலை அமைப்பின் தூதுவராலயம் சுதந்திர பலஸ்தீனின் தூதவராலயம் என்பதாக ஏற்றுக்கொள்கிறது.

2007 இல் பலஸ்தீன் ரமல்லாவில் இலங்கையின் தூதுவராலயம் நிறுவப்படுகிறது. 2014 இல் இலங்கைக்கும் பலஸ்தீனுக்கும் இடையில் ஒருங்கிணைவு ஆணைக்குழுவொன்று (Join commision) நிறுவப்படுகிறது. பலஸ்தீன் பிரச்சினையில் எமது நாடு எப்பபொழுதும் தலையிட்டு வருகின்து.

அண்மையில் இஸ்ரேலிற்குள் அமைந்துள்ள பலஸ்தீனின் மத, கலாசார உரிமைகள் தொடர்பில் யுனெஸ்கோவினால் முன்வைக்கப்பட்ட தீர்மானத்திற்கு இலங்கை வெளிவிவகார அமைச்சு வாக்களிக்கவில்லை. இது தொடர்பில் எமது மக்களை விழிப்புணர்வூட்ட வேண்டும். எமது சர்வதேச தோழர்கள் எமது பலங்கள். ராஜதந்திர ரீதியில் நாம் பலமற்று வருகிறோம்.

இஸ்ரேலிற்குள் இருக்கும் பலஸ்தீன் மக்களின் மத வழிப்பாட்டுத் தளங்களில் வழிபட இஸ்ரேல் இடமளிப்பதில்லை. அதில் அல் அக்ஸாவும் ஒன்று. 1907 ஹேக்கில் நிறைவேற்றப்பட்ட கலாசார உரிமைகளை பாதுகாக்கும் பிரகடனம் முதல் இதுவரையில் அல் அக்ஸாவை பாதுகாக்க பல நாடுகள் ஐ.நா.வில் வாக்களித்துள்ளன. இன்று இஸ்ரேல் இதன் பெயரை மாற்ற முனைகிறது.

எமது வெளிவிவகார அமைச்சர் இங்கில்லை. நான் கவலைப்படுகிறேன். அவரின் செயல் தொடர்பில். அண்மையில் அவர் டெய்லிமிரர் பத்திரிகைக்கு வழங்கிய செவ்வியில் அக்ஸாவின் பெயரை டெம்பல் மவ்த் என்பதாக அறிமுகப்படுத்தியிருந்தார். ஆங்கிலேயர் கந்த என்ற பெயருக்கு கண்டி என்றார்கள். இதில் எவ்வித அர்த்தமுமில்லை.

எமது கலாசாரத்தை இவ்வகையில் சீரழித்தார்கள். கிழக்கில் பேதருதுடுவைக்கு ஆங்கிலத்தில் பருத்துறை என்கிறார்கள். இதன் அர்த்தம். பஞ்சுத் துறை முகம். இவ்வகையில் எமது கலாசாரங்கள் மற்றும் நாட்டின் பிரதேசங்களை சீரழித்தார்கள். எனவே இதுபோன்றே வெறளிவிவகார அமைச்சரின் கருத்தம் உள்ளது. இது வன்மையாக கண்டிக்கட வேண்டும்.

• லத்தீப் பாரூக்

நாட்டின் தவிர்க்க முடியாத தேவை ஒரு மூன்றாவது அரசியல் சக்தி

தற்போதைய அரசாங்கம், முந்தைய ஆட்சிக் காலத்தில் குற்றங்கள், ஊழல், சட்ட விரோதமாக பெரும் செல்வத்தை குவித்தல், நாட்டை கொள்ளையடித்தல், வீண்விரயம் போன்ற செயற்பாடுகளில் ஈடுபட்டவர்களை சட்டத்தின் முன் கொண்டு வருவதாக வழங்கிய தனது வாக்குறுதிகளை நிறைவேற்ற மறுப்பதால் பொதுவாக மக்கள் விரக்தியும் வெறுப்பும் அடைந்துள்ளார்கள்.

08 ஜனவரி 2015 இல், அவர்கள் பெரும் ஆர்வத்தோடு வாக்களித்தது, ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன மற்றும் பிரதம மந்திரி ரணில் விக்கிரமசிங்கா ஆகிய இருவரும், நாட்டின் செல்வத்தை சூறையாடியவர்கள் தண்டிக்கப்படுவார்கள் என அவர்கள் வழங்கிய தேர்தல் சுலோகங்களை நேர்மையாக நிறைவேற்றுவார்கள் என்கிற நம்பிக்கையில்தான். எனினும் அனைத்து நம்பிக்கைகளையும் சிதறடிக்கும் வகையில், தனது வாக்குறுதிகளை நிறைவேற்றுவதற்குப் பதிலாக ஊழல்கள் மற்றும் விரயம் போன்ற அதே தீமைகளைப் புரிவதாக அரசாங்கத்தின் மீது பரவலான குற்றம் சுமத்தப்படுகிறது. அதேவேளை திருடர்கள், குற்றவாளிகள் மற்றும் பல்வேறு குற்றங்களை புரிந்ததாகச் சொல்லப்படுபவர்கள் சுதந்திரமாக நடமாடுவதுடன் வெளிநாடுகளுக்கும் கூட பயணம் செய்கிறார்கள்.

நாட்டின் மனநிலை சோர்வடைந்த நிலையில் உள்ளது. நாடு சுதந்திரம் அடைந்ததிலிருந்து மாறி மாறி ஆட்சி செய்த ஐக்கிய தேசிய கட்சி மற்றும் ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சி ஆகிய இரண்டும் நாட்டை உலகிலேயே மிகவும் தவறான நிர்வாகம் நடைபெறும் நாடுகளில் ஒன்றாக மாற்றிவிட்டிருப்பதால், மூன்றாவது அரசியல் சக்தி ஒன்றின் சாத்தியம் பற்றிக்கூட சிவில் சமூக அமைப்புகள் கலந்துரையாடி வருகின்றன. இந்த இரு கட்சிகளினதும் குறுகிய பார்வையுள்ள இனவாத அரசியல், நாட் டிற்கு அழிவை அல்லாது வேறு எதையும் கொண்டுவரவில்லை என அவர்கள் உணர்கிறார்கள்.

எடுத்துக் காட்டாக ஸ்ரீலங்கா, சுதந்திரம் பெற்ற காலத்தில் மிகவும் ஸ்திரமான நாடுகளில் ஒன்றாக இருந்ததுடன், முழு மூன்றாவது உலக நாடுகளுக்கும் ஒரு முன்மாதிரியான நாடு என்று அடிக்கடி விபரிக்கப்பட்டு வந்துள்ளது. அப்போது இங்கு அரசியல் மற்றும் பொருளாதார ஸ்திரத்தன்மை, போதுமான வெளிநாட்டு கையிருப்பு, சுகாதார பாதுகாப்பு, கல்வி முறை, இன நல்லிணக்கம் மற்றும் சமாதானம் என்பன நல்ல நிலையில் இருந்தன.

அந்த நாட்களில் ஒருவர் மாத்தறையில் இருந்து யாழ்ப்பாணத்துக்கு வழிப்பறி பயமின்றி நடக்கக்கூடியதாக இருந்தது. ஒருவருக்கு இலவசமாக ஒரு கோப்பை தேனீரோ அல்லது ஒரு வேளை உணவோ கொடுத்து உபசரிக்கும் நிலையில் மானிடத்தின் மதிப்பு நேசத்துக்கு உரியதாக இருந்தது. உரிமைகளும் மற்றும் சலுகைகளும் அரசியலமைப்பில் போற்றப்பட்டது. மக்கள் ஒருவர் மற்றவருடைய மதம் மற்றும் கலாச்சார விழுமியங்களை மதித்து நடந்தார்கள். அரசியல்வாதிகள், [illegible] நிபுணர்கள், புத்திஜீவிகள் மற்றும் ஏனைய அனைவரும் சமூகத்தால் மரியாதை செய்யப்பட்டார்கள். ஊழல் மற்றும் குற்றங்கள் தொடர்பாக ஒப்பீட்டளவில் யாரும் பெரிதாக அறிந்திருக்கவில்லை.

அங்கு ஒரு சுதந்திரமான நீதித்துறை மற்றும் காவல்துறை இருந்தன. இப்படியாக அனைவருக்கும் சிறப்பான எதிர்காலத்தை உறுதிசெய்து நாடு முன்னோக்கி நகர்வதற்குத் தேவையான அனைத்து வளங்களாலும் நாடு ஆசீர்வதிக்கப்பட்டிருந்தது. எனினும் இனவாத அரசியலுக்கு அப்பால் சிந்தித்து நாட்டை வழிநடத்தக் கூடிய தொலைநோக்குப் பார்வையுடைய ஒரு அரசியல் தலைவரை பெரும்பான்மை இனத்திலிருந்து உருவாக்குவதற்கு இலங்கை தவறிவிட்டது.

அதன் விளைவாக கிட்டத்தட்ட சுதந்திரம் அடைந்து ஏழு தசாப்தங்கள் கடந்துவிட்ட இன்று, உலகிலேயே மிகவும் தவறான நிர்வாகம் நடைபெறும் நாடு [illegible] இலங்கை மாறியுள்ளது.

யார் இதற்கு பொறுப்பு? ஐ.தே.க மற்றும் ஸ்ரீ.ல.சு.க என்பனவற்றின் அழிவுப் பாதையிலான இனவாத அரசியல் தானே இதற்கு காரணம் இல்லையா, அவை இந்த தீவை ஆசியாவின் மோசமான கொலைக் களமாக மாற்றிவிட்டன. இனவாத அரசியல் வெகு காலத்துக்கு முன்பு 1930 லேயே சில அரசியல்வாதிகள் தங்கள் சொந்த சுயநல அரசியல் நலன்களுக்கு வேண்டி, சிங்களவர்களின் நலன்களை முன்னேற்றத் தொடங்கியபோதே ஆரம்பமாகிவிட்டது. உதாரணமாக அரச சபைகளின் காலமான 1930 இல் காணி மற்றும் காணிக் குடியமர்வு அமைச்சராக இருந்த டி.எஸ்.சேனநாயக்கா, தமிழர்களும் மற்றும் முஸ்லிம்களும் தங்கள் பாரம்பரிய தாயகம் எனக் கோரும் கிழக்கின் பொலன்னறுவ, பதவிய, மற்றும் இங்கினியாகல ஆகிய இடங்களில் சிங்கள குடியேற்றத்தை தொடக்கி வைத்தார்.

எரியும் நெருப்புக்கு எண்ணெய் வார்ப்பது போல, அரசியல்வாதிகளும் இது சிங்கள பௌத்த நாடு என்று கோரிக்கையிட்டு சிறுபான்மையினரை புறந்தள்ள ஆரம்பித்தார்கள். இரண்டாந்தர குடிமக்களாக இருக்க விரும்பாத சிறுபான்மையினர்கள் சம உரிமைகளையும் மற்றும் நாட்டின் விவகாரங்களில் சம உரிமைகளையும் கோரியதுடன் தங்கள் விதியை தாங்களே தீர்மானிக்க விரும்பினார்கள்.

இனவாத மனப்போக்குடைய ஒரு தொகை அரசியல்வாதிகள் இருப்பதை உணர்ந்த பிரித்தானிய காலனித்துவவாதிகள் சோல்பரி அரசியலமைப்பில் சிறுபான்மையினரின் உரிமைகளை பாதுகாக்கும் ஒரு பாதுகாப்பு வாயிலைப் போல ஒரு விசேட ஏற்பாட்டை பிரிவு 29 ஏ யில் சேர்த்தார்கள். சில சிங்களத் தலைவர்கள் சுதந்திரத்துக்கு முன்பும் சரி அதற்குப் பின்பும் சரி இனவாதத்தை தூண்டிவிடுவதை தொடர்ந்தும் ஓரளவு வெளிப்படையாகவே செய்து வருகிறார்கள். அவர்கள் வெளிப்படையாகவே சிங்கள தேசியவாதத்தை இலங்கை தேசியவாதத்துடனும் மற்றும் பௌத்தத்துடனும் சமத்துவப்படுத்தி, அவர்களின் இனவாத நிகழ்ச்சி நிரலை இரக்கமின்றி நடத்தி வருகிறார்கள். அவர்கள் நாட்டை ஒரு இரத்தக் களரியில் அமிழ்த்துவதை உணராமல் உள்ளார்கள்.

சிங்களவர்களின் மனநிலையை சாதகமாகப் பயன்படுத்துவதற்கு ஏற்றதாக சட்டவாக்க சபை அங்கத்தவரான எஸ்.டபிள்யு.ஆர்.டி பண்டாரநாயக்கா சிங்கள மகா சபை என்கிற அமைப்பை உருவாக்கினார். அது சிங்களவர்களை பிரதான நீரோட்ட அரசியல் காட்சியில் இருந்து தனிமைப்படுத்தியது.

ஐக்கிய தேசியக் கட்சியின் வருடாந்த மாநாட்டில் ஜே.ஆர். ஜெயவர்தனா சிங்களம் மட்டும் தீர்மானத்தை முன்மொழிந்தார். எஸ்.டபிள்யு.ஆர்.டி. பண்டாரநாயக்கா ''24 மணி நேரத்துக்குள் சிங்களம் மட்டும் சட்டத்தைக் கொண்டு வருவதாக'' அழைப்பு விடுத்து அதிகாரத்தை கைப்பற்றுவதற்காக இனவாத சுலோகங்களை அள்ளி வீசி தேர்தலைச் சந்தித்தார். அரசியல்வாதிகளும் கூட தமிழர்கள்மீது அடிக்கடி வன்முறைத் தாக்குதல்களை மேற்கொண்டு மரணத்தையும் மற்றும் அழிவையும் ஏற்படுத்தி சிங்கள ஏகாதிபத்தியத்தின் எழுச்சியை ஊக்குவித்தார்கள்.

எனினும் தனது இனவாத அரசியலின் பின் விளைவுகளைப் பற்றி விரைவிலேயே உணர்ந்த திரு. பண்டார நாயக்கா, பண்டாரநாயக்கா - செல்வ நாயகம் ஒப்பந்தம் (பி-சி ஒப்பந்தம்) போன்ற அழிவைக் கட்டுப்படுத்தும் நடவடிக்கைகளை மேற்கொண்டார். (பக்.14)

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

EDITORIAL
49, Sri Mahinda Dharma Mawatha (Perth Road), Colombo-09.
Tel: 0112 691258 077 222 7569
E-mail: meelparvai@gmail.com, Web: www.meelparvai.net

நீதியை எங்கு தேடுவது ?

எமது நாட்டில் தனபாலன் பிச்சையெடுக்கிறான், சத்திய பாலன் பொய்யுரைக்கிறான் என்றொரு சிங்களப் பாடல் இருக்கிறது. இந்தத் தொடரில் நீதி அமைச்சரிடம் நீதியைத் தேட வேண்டியிருக்கிறது என்பதையும் சேர்த்துக் கொள்ள வேண்டியிருக்கிறது.

நீதி அமைச்சர் விஜேதாச ராஜபக்ஷவின் பாராளுமன்ற உரை நீதி அமைச்சையே நகைப்புக்கிடமானதாக மாற்றியிருக்கிறது. நீதி அமைச்சரே நாட்டில் குழப்பத்தை விளைவிக்கும் வகையில் கட்டுக் கதைகளை பரப்புவதென்றால் நல்லாட்சியின் இயக்கத்தின் மீது மக்களது நம்பிக்கை குன்றிவிடுவது ஒன்றும் எதிர்பாராத விடயமல்ல. மக்களது நம்பிக்கையை வெல்லாமல் எந்தச் சின்னத்தில் நல்லாட்சி வந்தாலும் அது நிலைக்கப் போவதில்லை.

இலங்கையில் ஐஎஸ் தீவிரவாதிகள் இருப்பதாக இனவாதிகளால் மீட்டப்பட்டு வருகின்ற புனைதலை இலங்கைப் புலனாய்வுப் பிரிவு பல தடவைகளிலும் மறுத்திருந்தது. உலகிலே மிகவும் சிறந்த புலனாய்வுப் பிரிவாக நாட்டிலே கருதப்படுகின்ற இலங்கைப் புலனாய்வுப் பிரிவின் தகவல்களின் அடிப்படையிலேயே இலங்கை அரசாங்கத்தின் செயற்பாடுகள் அமைகின்றன. அவை வழங்குகின்ற தகவல்களே நம்பகத்தன்மையில் உயரிடத்தை வகிக்கிறது.

இந்தப் புலனாய்வுப் பிரிவினர் வழங்கிய தகவல்களைப் பொய்ப்படுத்தும் விதமாகவே நீதியமைச்சரின் பாராளுமன்ற உரை அமைந்திருந்தது. இந்த உரைக்குப் பின்னர் நடைபெற்ற அமைச்சரவைத் தீர்மானங்களை அறிவிக்கும் ஊடகவியலாளர் மாநாட்டில் அமைச்சரவைப் பேச்சாளர் ராஜித சேனாரத்னவும் நீதியமைச்சரின் கூற்றில் உண்மையில்லை என்று மறுத்திருந்தார். இப்படிப் பல கோணங்களில் இருந்தும், நீதியமைச்சர் கட்டுக் கதைகளை நாட்டிலே பரப்பி வருகின்றார் என்பது நிரூபணமாகியுள்ளது.

தனக்குத் தெரிந்தவர்கள் வழங்கிய தகவல்களின் அடிப்படையிலேயே தான் இதனைத் தெரிவித்ததாகவும் விரும்பியவர்கள் இதனை ஏற்றுக் கொள்ளலாம் என்றும் தொலைக்காட்சி நிகழ்ச்சியொன்றில் பங்கு பற்றிய வேளையில் நீதியமைச்சர் ராஜபக்ஷ தெரிவித்திருந்தார். இலங்கையில் ஐஎஸ் தீவரவாதிகள் இருப்பதாக பௌத்த தீவிரவாதிகளே கதை பரப்பி வருகின்றார்கள். இவர்களைத் தவிர வேறு யாரும் இது தொடர்பில் கருத்துக்களை வெளியிடவில்லை. அப்படியானால் இவர்கள் வழங்கிய தகவல்களைத் தான் நீதியமைச்சர் பாராளுமன்றத்தில் கக்கினாரா, இவர்களின் ஊது குழலாக இவர் பாராளுமன்றத்தில் செயற்பட்டாரா என்ற கேள்விகள் எழுகின்றன.

இதனைத் தொடர்ந்து பௌத்த தீவிரவாத அமைப்புக்களுடன் நீதியமைச்சரும் புத்த சாசன அமைச்சருமான விஜேதாச ராஜபக்ஷ நடத்திய பேச்சுவார்த்தைகள் வெற்றிகரமாக முடிவடைந்ததாக பொதுபல சேனாவின் கலகொடஅத்தே ஞானசார தேரர் தெரிவித்திருந்தார். அமைச்சர் நடத்திய பேச்சுவார்த்தை என்ன, இதில் பௌத்த தீவிரவாத அமைப்புக்கள் பெற்ற வெற்றி என்ன என்பது இதுவரை புரியாத புதிராகவே இருக்கிறது.

இந்த நிலையில் நீதியமைச்சரின் செயற்பாடுகள் மீதான சந்தேகங்கள் நாட்டு மக்களிடையே வளர்வது நியாயமானதாகும். நீதியமைச்சராகவும் புத்த சாசன அமைச்சராகவும் நியமிக்கப்பட்டுள்ள அமைச்சர் விஜேதாச ராஜபக்ஷ நீதியை எந்தப் பக்கத்துக்கு நிலைநாட்டுவார் என்ற அச்சத்தை அவரது செயற்பாடுகள் மக்களிடையே விதைத்து வருகின்றன.

நாட்டில் இனங்களுக்கிடையே தூண்டப்பட்டு வருகின்ற இனத் துவேஷங்கள் ஒரு இனக்கலவரமாக வெடிப்பதற்கான கருமேகங்கள் சூழ்ந்துள்ள நிலையில், நீதியமைச்சரின் பக்கச்சார்பான நிலைப்பாடு மக்களை கிலி கொள்ள வைத்திருக்கிறது. இந்த அச்சத்தைப் போக்குவதற்கு நல்லாட்சி அரசாங்கம் நடவடிக்கை எடுக்க வேண்டும்.

நாட்டில் இனங்களுக்கிடையே பரஸ்பர நம்பிக்கையை கட்டியெழுப்பும் விதத்தில் அரசு கலந்துரையாடல் அமைச்சுக்களையும் நல்லிணக்க அமைச்சுக்களையும் உருவாக்கி நல்லிணக்கத்துக்காக உழைத்து வருகிறது. இதற்கு மறுதலையாக அரசாங்கத்தின் வேறு சில அமைச்சுக்கள் செயற்படுமானால், சிகரட் பாவனையையும் வளர்த்து விட்டு புற்று நோய் சிகிச்சைக்கான நிவாரணங்களையும் அதிகரிப்பது போலத் தான் அமையும்.

இனங்களுக்கிடையில் நம்பிக்கையீனத்தை விதைத்து விடுவது புற்றுநோயை விட ஆபத்தானது.

ஊடக அடக்குமுறையும் ஜனநாயகமும்

• குசல் பெரேரா

பாராளுமன்ற விவகாரம் மற்றும் ஊடக அமைச்சின் செயலாளர் தனியார் தொலைக்காட்சியொன்றுக்கு அச்சுறுத்தல் விடுத்திருந்தார். நீதியமைச்சர் பாராளுமன்ற வரப்பிரசாதங்களின் கீழ் வெப்தளமொன்றை விமர்சித்திருந்தார். பிரதமர் ரணில் விக்ரமசிங்க சில காலமாக ஊடகங்கள் நடந்துகொள்ள வேண்டிய ஒழுங்குமுறைகள் குறித்து கருத்துத் தெரிவித்து வருவதுடன், கடந்த வாரம் ஆங்கிலப் பத்திரிகையொன்றை டொய்லட் பத்திரிகையளவுக்கு இழிவுபடுத்தி கடுமையாக குற்றம் சுமத்தியிருந்தார்.

அரசியலமைப்பில் குறிப்பிடப்பட்டுள்ள கருத்துத் தெரிவிக்கும் சுதந்திரம் மற்றும் ஊடக சுதந்திரத்திற்கு நல்லாட்சி அரசாங்கம் அவ்வகையிலேயே பதிலளித்து வருகிறது.

இந்நிலையில் ஆசிய வலயத்தில் மனித உரிமைகளைச் சிறந்த முறையில் உறுதிப்படுத்துகின்ற அரசியலமைப்பு, நல்லாட்சி அரசாங்கம் தயாரித்து வரும் இலங்கையின் புதிய அரசியலமைப்பாக இருக்கும் என பீ.பீ.சீ சங்தேஷயவுக்கு அளித்த பேட்டியில் கலாநிதி ஜயம்பதி விக்ரமரத்ன தெரிவித்திருந்தார். அவர் குறிப்பிடுவதன் படி, தற்பொழுதுள்ள கருத்துத் தெரிவித்தல், ஒன்றுகூடுதல், தான் விரும்பிய மதத்தை பின்பற்றுதல் போன்ற அடிப்படை உரிமைகளுக்கும் அப்பால் சென்று, பொருளாதார, சூழலியல், கலாசார உரிமைகளையும் அங்கவீனர்களின் உரிமைகளையும் உறுதிப்படுத்துகின்ற சட்ட வரைவொன்றை தயாரித்திருப்பதாக அவர் தெரிவித்திருந்தார்.

ஆனாலும் உண்மையான பிரச்சினை என்னவெனில் எழுத்து மூலமான அரசியலமைப்புக்கும் அரசாங்கத்தின் அரசியல் போக்கிற்குமிடையில் பரஸ்பரம் எதிரும் புதிருமான தன்மைகள் இருக்க முடியாதா என்பதாகும். அது தொடர்பில் வரலாற்று உதாரணங்களை மேற்கோள் காட்ட முடிகிறது. பிரதான இரு அரசியல் கட்சிகளும் யாப்பை மீறியுள்ளன. பல்வேறுபட்ட வழிமுறைகளில் அது அரங்கேற்றப்படுகின்றது.

ராஜபக்ஷ காலப்பகுதியை போன்று ஊடகங்கள் மீது வலுக் கட்டாயமான முறையில் வன்முறைகள் கட்டவிழ்த்து விடுவது ஒரு வழிமுறையாகக் காணப்படுகிறது. அதனால், அரசாங்கத்திற்கு எதிராக எவ்வித நியாயமான விமர்சனங்களையோ எதிர்ப்புக்களையோ தெரிவிப்பதற்குரிய இடமொன்று வழங்கப்பட மாட்டாது.

மறுபுறத்தில் சட்டபூர்வமாக ஊடகங்களையும் எதிர்ப்புக்களையும் கட்டிப்போடும் தேவையும் அரசாங்கத்திற்கு உள்ளது. அதற்கானதொரு கருத்தை உருவாக்க வேண்டும். அதனாலேயே ஊடக ஒழுங்கு குறித்த விமர்சனங்களை அரசாங்கமே முன்வைக்கிறது.

அண்மையில் பிரதமர் பிஸ்னஸ் டுடே விருது விழாவில் உரையாற்றும் பொழுது இம்மாதம் முதல் வாரத்தில் வெளியான ஆங்கிலப் பத்திரிகையொன்றில் ஹம்பாந்தோட்டையில் சில நிலப்பகுதிகளை சீன நிறுவனமொன்றுக்கு வழங்கியமை மற்றும் உயர்தர மாணவர்களுக்கு டெப் வழங்கியமை உள்ளிட்ட கல்வி தொடர்பான வரவு செலவுத் திட்ட முன்மொழிவுகளை ஆய்வு ரீதியில் விமர்சனத்திற்கு உட்படுத்தியமை தொடர்பில் பிரசுரமான இரண்டு கட்டுரைகளை மேற்கோள் காட்டி கடுமையாகச் சாடியிருந்தார்.

ஹம்பாந்தோட்டை துறைமுகம் மற்றும் மத்தளை விமானநிலையத்தை அண்டிய அரசாங்கத்தின் விசாலமான நிலப்பகுதிகளை சீன நிறுவனமொன்றுக்கு வழங்கிய ஒப்பந்தம் குறித்து முதலாவது கட்டுரை திறனாய்வுக்கு உட்படுத்தியிருந்தது. ஹொங்கொங்கில் நடைபெற்ற 15 ஆவது ஆசிய பசுபிக் வலய மாநாட்டில் உரையாற்றிய பிரதமர் ஹம்பாந்தோட்டை துறைமுகம் மற்றும் மத்தளை விமான நிலையம் தொடர்பில் கூறிய கருத்துக்களை அடிப்படையாக கொண்டே மேற்படி கட்டுரை எழுதப்பட்டிருந்தது.

சீனாவின் மேற்படி இரண்டு திட்டங்கள் தொடர்பில் அக்கட்டுரையில் உட்பொதிந்திருந்த தகவல்கள் நாட்டின் பிரஜைகளுக்கு மிக முக்கிய விடயங்களாகும். 1100 மில்லியன் டொலர் கடனை அடைப்பதற்கு துறைமுகத்தினதும் விமான நிலையத்தினதும் பங்குடைமையிலிருந்து 8 வீதமும் 12,500 ஏக்கர் நிலத்தையும் சீன அரசாங்கத்திற்குச் சொந்தமான சைனா மர்சன்ட் ஹோல்டிங்ஸ் நிறுவனத்திற்கு வழங்குவதற்குரிய பேச்சுவார்த்தையில் அரசாங்கம் ஈடுபட்டிருந்ததாகவும், அந்நிலப்பகுதியில் தொழில்பேட்டையொன்று [illegible] இருந்ததாகவும்

அதற்கான நிபந்தனைகள் என்ன என்பதை வெளிப்படுத்தப்படவில்லை என்பதாகவும் மேற்படி கட்டுரையில் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.

அக்கட்டுரையில் அவர் பல முக்கியமான பிரச்சினைகளை மேற்கோள் காட்டுகிறார். அதில் முக்கிய பிரச்சினையொன்றாக இருப்பது, துறைமுகத்தை அண்டிய வகையிலுள்ள 12,500 ஏக்கர் நிலப் பிரதேசங்களை சூழல் பிரச்சினைகளின்றி எவ்வகையில் வழங்க முடிகிறது என்பதாகும்.

கல்விச் சீர்திருத்தம் மற்றும் அரசாங்கத்தின் கல்விச் செலவு தொடர்பில் மற்றுமொரு விரிவான கட்டுரையையும் பிரதமர் விமர்சித்திருந்தார். வரவு-செலவுத் திட்டத்தில் முன்மொழியப்பட்ட உயர்தர மாணவர்களுக்கும் ஆசிரியர்களுக்கும் டெப் வழங்கும் தீர்மானத்தை கட்டுரையாளர் சிறு பந்தியில் விமர்சித்திருந்தார்.

டெப் வழங்குவது நகைப்புக்கிடமான விடயம் என அவற்றைப் பெறும் கிராமிய பெரும்பான்மை குறிப்பிடும். அத்தோடு கல்விப் பிரச்சினைகள் குறித்ததான விடயங்களும் அக்கட்டுரையில் ஆராயப்பட்டிருந்தன. தர்க்கங்கள் முன்மொழிவுகள் தொடர்பில் கருத்து முரண்பாடுகள் இருக்கலாம். இச்சந்தர்ப்பத்தில் கல்வி தொடர்பில் முன்னேற்றகரமான பலமிக்க சமூக உரையாடலொன்று அவசியப்படுகிறது. அதனால் அது கலந்துரையாடலுக்கு உட்படுத்தப்பட வேண்டியுள்ளது.

இவ்வகையில் முக்கியமான சிறந்த விமர்சனங்களையும் திறனாய்வுகளையும் சகித்துக் கொள்ள முடியாத பிரதமரின் ஜனநாயகம் எதுவென்கின்ற சிக்கல் எழுகிறது. அரசாங்கத்தின் கொள்கைத் திட்டங்கள் மற்றும் வரவு செலவுத் திட்ட விமர்சனங்களையும் எதிர்ப்புக்களையும் சகித்துக் கொள்ளும் சம்பிரதாயமொன்று பிரதமருக்கும் அரசாங்கத்திற்கும் இருக்க வேண்டும். அப்படியொன்று தனக்கில்லை என்பதை அவர் நிரூபித்துக் கொண்டுள்ளார்.

இவ்வாறே அரசியலமைப்பு சார்ந்த அடிப்படை உரிமைகளை இவ்வரசாங்கத்தின் கீழும் ஊகித்துக் கொள்ள முடிகிறது. நாம் சுதந்திரம் பெற்ற வேளையில் காணப்பட்ட சோல்பரி யாப்பில் சிறுபான்மையோர் உரிமைகளைப் பாதுகாக்கும் காப்பீடொன்று யாப்பில் 29 ஆம் ஷரத்தில் ஏற்படுத்தப்பட்டிருந்தது. இதனை பாராளுமன்றத்தில் மூன்றில் இரண்டு பெரும்பான்மையினாலோ அல்லது சீர்திருத்தம் ஒன்றின் மூலமோ செல்லுபடியற்றதாக்கி விட முடியாத வகையில் எழுதப்பட்டிருந்தது.

நாட்டின் சகல சிறுபான்மையினரின் உரிமைகளையும் கௌரவத்தையும் பெரும்பான்மை மக்கள் பலத்தினால் அடிமைப்படுத்தி விடமுடியாது என்பதே அவ்வேற்பாடுகளின் சாராம்சமாக உள்ளது. சோல்பரி யாப்பில் தமக்கு பூரண பாதுகாப்புக் கிடைக்கும் என்ற நம்பிக்கையின் காரணமாகவே சுதந்திரம் கிடைக்கும் பொழுது தமிழ் தலைவர்கள் அவ்வரசியலமைப்பை ஏற்றுக்கொண்டார்கள்.

ஆனாலும் சோல்பரி யாப்பின் 29 ஆவது ஷரத்தை மீறும் வகையில், அப்பொழுது 100 வருடங்களாக இந்நாட்டின் பொருளாதாரத்தின் பிரதான பங்காளர்களாக வாக்குரிமையையும் பிரஜாவுரிமையையும் பெற்றிருந்த மலைநாட்டு தமிழர்களின் பிரஜாவுரிமை சுதந்திரத்தின் பின்னர் டீ.எஸ். சேநானாயக்க அரசாங்கத்தினால் பறிக்கப்பட்டது. அது போன்று 1956 இல் சிங்களம் மாத்திரமே அரசகரும மொழியாக்கப்பட்டதும் யாப்பின் 29 ஆவது ஷரத்தை மீறும் செயலாக உள்ளது.

56 அரச மொழிச்சட்டம் அரசியலமைப்பின் 29ஆவது சரத்தை மீறும் விடயம் என எஸ். கோடீஸ்வரன் என்னும் அரச ஊழியர் 1962 இல் அரசாங்கத்திற்கு எதிராக வழக்குத் தொடுத்தார். அவ்வழக்கின் தீர்ப்பை வழங்கிய நீதிபதி ஓ.எல். டிக்கெரஸ்ட் அரச மொழிச் சட்டம் யாப்பின் 29ஆவது ஷரத்தை மீறுகிறது என்பதை ஏற்றுக்கொண்டார்.

அதற்கெதிராக அரசாங்கம் மேன்முறையீடு செய்தபோது உச்ச நீதிமன்றம் யாப்பிலுள்ள விடயங்களை கவனத்திற் கொள்ளவில்லை, அப்போது எமது மேன்முறையீட்டு நீதிமன்றமாக பிரித்தானியாவின் பிரீவீ கவுன்ஸில் காணப்பட்டது. உயர் நீதிமன்றின் தீர்ப்பை எதிர்த்து கோடீஸ்வரன் மேன்முறையீடு செய்தார்.

இந்நாட்டின் உயர் நீதிமன்றத் தீர்ப்பை மறுதலித்து 1969 ஆம் ஆண்டு பிரீவீ கவுன்ஸில் தனது தீர்ப்பை வெளியிட்டது. ஆனாலும் 1970 இல் ஆட்சிக்கு வந்த சிரிமாவின் தலைமையிலான சோசலிஸ - கம்யூனிஸ கூட்டரசாங்கம் 1971 ஆம் ஆண்டு 44 ஆம் இலக்க சட்டத்தின் மூலம் பிரீவீ கவுன்ஸிலின் சகல மேன்முறையீடுகளையும் செல்லுபடியற்றதாக்கியது.

சோசலிஸ தலைவரொருவரான கலாநிதி கொல்வின் ஆர்.டீ. சில்வாவின் தலைமையில் வரையப்பட்ட 1972 முதலாம் குடியரசு யாப்பில் சோல்பரி யாப்பின் சிறுபான்மையோர் காப்பீடு 29 ஆம் ஷரத்து நீக்கப்பட்டது. குடியரசு யாப்பில் அவ்வாறான ஏற்பாடுகள் இருந்த போதிலும் சிறுபான்மையோருக்கு அதனால் எவ்வித (பக்.14)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

திருத்தத்தை வேண்டி நிற்கும் முஸ்லிம் தனியார் சட்டம்

• தொகுப்பு : மிப்றாஹ் முஸ்தபா

அண்மையில் CDR அமைப்பின் ஏற்பாட்டில் இடம்பெற்ற முஸ்லிம் தனியார் சட்டத் திருத்தம் தொடர்பான கலந்துரை யாடல் நிகழ்வில் கொழும்பு பல்கலைக் கழகத்தின் சட்ட பீட சிரேஷ்ட விரிவுரையாளர் எம்.ஏ.எம். ஹக்கீம் அவர்களால் நிகழ்த்தப்பட்ட உரையின் தொகுப்பு இங்கே தரப்படுகின்றது.

முஸ்லிம் தனியார் சட்டத் திருத்தம் தொடர்பான கருத்தாடல்கள் வலுப்பெற்றிருக்கும் இந்நேரத்தில், முஸ்லிம் தனியார் சட்டம் என்னென்ன விடயங்களை உள்ளடக்கி இருக்கின்றது, எந்தெந்தப் பகுதிகளில் திருத்தங்கள் செய்யப்பட வேண்டும் போன்ற விடயங்களில் முஸ்லிம் சமூகம் இன்னும் தெளிவற்ற நிலையிலேயே காணப்படுகின்றது.

கடந்த 28 ஆம் திகதி முன்னாள் பிரதம நீதியரசர் சலீம் மர்சூப் தலைமையிலான குழுவின் சிபாரிசுகள் அடங்கிய அறிக்கை சமர்ப்பிக்கப்பட இருந்த நிலையில், புத்திஜீவிகளின் ஆலோசனைகளுக்கமைய மேலும் பல புதிய திருத்தங்களையும் உள்ளடக்கிய பூரணப்படுத்தப்பட்ட இறுதி அறிக்கை எதிர்வரும் டிசம்பர் மாதம் 13 ஆம் திகதி சமர்ப்பிக்கத் திட்டமிடப்பட்டுள்ளதாக முன்னாள் நீதியரசர் சலீம் மர்சூக் தெரிவித்துள்ளார்.

பல சமயங்களும், இனங்களும் வாழ்கின்ற ஒரு பன்மைத்துவ நாடு என்ற வகையில் இலங்கையில் பல்வேறு சட்டங்கள் காணப்படுகின்றன. மக்களின் அடிப்படை உரிமைகளைப் பாதுகாப்பதற்காகவும், அவற்றை உத்தரவாதப்படுத்துவதற்காவும் பொதுவான அரசியலமைப்பு ஒன்று நாட்டில் காணப்படுவதோடு, பொதுவாக இரண்டு வகையான சட்டங்களும் காணப்படுகின்றன.

1. **பொதுச்சட்டம்:** உரோமன், டச்சு சட்டம், ஆங்கிலச் சட்டம்.
2. **விஷேட சட்டம்/ தனியார் சட்டம்/ வழக்காற்றுச் சட்டம்:** - கண்டியர் சட்டம், தேச வழமைச் சட்டம், முஸ்லிம் தனியார் சட்டம்

இலங்கை முஸ்லிம் தனியார் சட்டம் 3 விடயங்களைக் கொண்டுள்ளது.

1. *1931 ஆம் ஆண்டின் முஸ்லிம் சொத்துறுதியற்ற வழியுரிமைக் கட்டளைச் சட்டம்.* (Intestate successsion)
2. *1951 ஆம் ஆண்டின் முஸ்லிம் விவாக மற்றும் விவாகரத்துச் சட்டம்.* (Marriage and Divorce)
3. *1956 ஆம் ஆண்டின் முஸ்லிம் பள்ளிவாயல்கள் மற்றும் தர்ம நம்பிக்கைகள் - வக்புச் சட்டம்* (Mosques and Public Charity)

அதேபோன்று முஸ்லிம் தனியார் சட்டத்தில் குடும்பச் சட்டம் தொடர்பான இரண்டு சட்டவாக்கங்கள் காணப்படுகின்றன.

1. ***1931 ஆம் ஆண்டின் முஸ்லிம் சொத்துறுதியற்ற வழியுரிமைக் கட்டளைச் சட்டம்:*** இதனோடு தொடர்பான வழக்குகள் மாவட்ட நீதிமன்றத்தில் பொது நடைமுறைகளுக்கேற்ப விசாரணை செய்யப்படுகின்றன.
2. ***1951 ஆம் ஆண்டின் முஸ்லிம் விவாக, விவாகரத்துச் சட்டம்:*** இதனோடு தொடர்பான வழக்குகள் காதி நீதிமன்றத்தில் விசேட நடைமுறைகளுக்கேற்ப விசாரணை செய்யப்படுகின்றன.

1951 ஆம் ஆண்டின் 13 ஆம் இலக்க முஸ்லிம் விவாக மற்றும் விவாகரத்துச் சட்ட அம்சங்களை சுருக்கமாக இவ்வாறு வரையறுக்க முடியும்.

- *முஸ்லிம் திருமண மற்றும் விவாகரத்து ஆலோசனை சபை.*
- *முஸ்லிம் திருமணப் பதிவாளர் மற்றும் பதிவு நடைமுறைகள்.*
- *காதிமார் நியமனம் மற்றும் விடயங்கள்.*
- *காதிமார் சபை நியமனம் மற்றும் விடயங்கள்.*
- *முஸ்லிம் விவாகரத்து பதிவு மற்றும் விடயங்கள்.*
- *காதி விசாரணை நடபடிமுறைகள்.*
- *தவறுகளும் தண்டம் மற்றும் தண்டனைகளும்.*

1951 ஆம் ஆண்டின் முஸ்லிம் விவாக, விவாகரத்துச் சட்ட ஏற்பாட்டின்படி உருவாக்கப்பட்ட காதி நீதிமன்றங்கள் முஸ்லிம் திருமணப் பிணக்கு மற்றும் விவாகரத்து விவகாரங்கள் தொடர்பாக சட்ட அங்கீகாரம் கொண்ட தீர்ப்புக்களை வழங்கும் நீதிமுறைப் பணி புரிகின்ற அமைப்புகளாகும். அதன் நீதிபதிகள் காதி (Quazi) என அழைக்கப்படுகின்றனர். காதி நீதிமன்றத்தின் உத்தியோகத்தர்கள் நீதிச் சேவைகள் ஆணைக்குழுவினால் நியமிக்கப்படுகின்றனர். மேன்முறையீடுகள் காழிமார் சபைக்கும் அங்கிருந்து இலங்கையின் மேன்முறையீட்டு மற்றும் அதியுயர் நீதிமன்றத்துக்கும் செய்யப்படலாம்.



இலங்கையின் முஸ்லிம் குடும்பச் சட்டம் படிப்படியாக பொதுச் சட்டத்தின் செல்வாக்கை விட இஸ்லாமிய சட்ட விதிகளின் செல்வாக்கிற்கு உட்பட்டு வருகின்றது. பராமரிப்பு, பிள்ளைகளின் கட்டுக்காவல், வாரிசுரிமை மற்றும் நன்கொடை என்பன இலங்கையின் பொதுவான சட்டத்தின் செல்வாக்கிற்கு உட்பட்டு வருகின்றது. சுருக்கமாக சொல்லப் போனால் இலங்கையின் முஸ்லிம் குடும்ப விவகாரங்களைப் பொறுத்தவரை இலங்கையின் முறைசார் நீதிமன்றங்களின் ஈடுபாடு குறைந்தளவாகவே உள்ளது.

என்றாலும் பெண்களை அதிகம் பாதிக்கின்ற பாரபட்சமான சட்ட ஏற்பாடுகளும் நடைமுறைகளும் (தலாக், பராமரிப்பு) முஸ்லிம் குடும்பச் சட்டத்தில் காணப்படுவதானது பல்வேறு விமர்சனங்களைத் தோற்றுவித்திருக்கின்றது. பெண்களின் திருமண வயது தொடர்பாக எத்தகைய வரையறையும் முஸ்லிம் குடும்பச் சட்டத்தில் குறிப்பிடப்படாமையானது அதிகமான பெண்களின் குடும்ப வாழ்வு பாதிக்கப்படுவதற்குக் காரணமாக அமைந்திருக்கின்றது.

அதேபோன்று திருமணத்திற்கு பெண்களின் சம்மதம் தேவையான போதிலும் பதிவுப் புத்தகத்தில் பெண் கையொப்பமிடுவதற்கான சந்தர்ப்பம் வழங்கப்படாமையும் பெண்களுக்கு இழைக்கப்படும் அநீதியாகும். பலதார மணம் தொடர்பிலும் முஸ்லிம் குடும்பச் சட்டத்தில் பெண்களுக்கு அநீதியே இழைக்கப்பட்டுள்ளது.

முஸ்லிம் குடும்பச் சட்டத்தில் காணப்படும் கைக்கூலி என்ற பகுதி இஸ்லாத்திற்கு முரணானது. இந்த நடைமுறை முஸ்லிம் திருமணத்தை ஒரு கொடுக்கல் வாங்கல் செயன்முறையாக மாற்றியுள்ளது. அதேநேரம் கணவன் தனது மனைவியை விவாகரத்து செய்வதற்கு எத்தகைய காரணங்களையும் முன்வைக்கத் தேவையில்லை என்பதன் மூலம் பெண்கள் கடுமையாகப் பாதிக்கப்படுகின்றனர்.

விவாகரத்துப் பெற்ற பெண்ணின் பராமரிப்பைப் பொறுத்தவரையில் விவாகரத்துக் குரிய இத்தா காலம் வரை மட்டுமே கணவனிடம் தாபரிப்புக் கேட்கலாம். இதன் காரணமாக பொதுச் சட்டத்துடன் ஒப்பிடும்போது முஸ்லிம் பெண்கள் அதிகம் பாதிக்கப்படுகின்றனர்.

சட்டத்திற்கு முரணான அல்லது சட்டத்தினால் நெறிப்படுத்தப்படாத காதி நீதிமன்ற நடைமுறைகள் இலங்கை முஸ்லிம் குடும்பச் சட்டத்தில் காணப்படும் பிரதானமான குறைபாடுகளில் ஒன்றாகும். இலங்கை முஸ்லிம்களின் குடும்ப விவகாரங்கள் முறைசார் சட்ட நீதிமன்ற பரப்புக்குள் கொண்டு வரக்கூடிய தகுந்த சட்ட சீர்திருத்தங்கள் செய்யப்படாமை, காதி நீதிமன்ற செயன்முறையின் சீர்கேடுகள், காதி நீதிமன்றத்துக்குள்ள அதிகாரங்கள் மற்றும் வளங்களின் போதாமை, காதி நீதிபதிகளின் தகைமை என்பன காதி நீதிமன்ற நடைமுறைகள் இன்று கேள்விக்குட்படுத்தப்படுவதற்கான காரணங்களாகும்.

காதி நீதிபதிகளாகவும் திருமணப் பதிவாளர்களாகவும் ஆண்கள் மாத்திரமே நியமிக்கப்படுவதால் பெண்கள் அதிகம் பாதிக்கப்படுகின்றனர். காதி நீதிபதியிடம் பெண்கள் தமது தனிப்பட்ட பிரச்சினைகளைக் கூறத் தயங்குவதும் பல்வேறு பிரச்சினைகளுக்குக் காரணமாக அமைந்துள்ளது.

இது ஒருபுறமிருக்க, காதி நீதிபதிகள் விசாரணைகளின்போது நடந்துகொள்ளும் விதமும் பல்வேறு விமர்சனங்களைத் தோற்றுவித்திருக்கின்றது. அறிமுகமானவர்கள், அரசியல் செல்வாக்குடையவர்கள், உறவினர்கள், செல்வந்தர்கள் தொடர்பில் சலுகையுடன் சார்பாக செயற்படுத்தல், கையூட்டுக்களை பெற்றுக் கொள்ளுதல், தாபரிப்பு, பராமரிப்பு சேமிப்புகளை சொந்த செலவுகளுக்கு எடுத்தல், விசாரணைகளின் போது மிகவும் கடுமையாக நடந்து கொள்ளுதல், சடுதியான முடிவுகளை எடுத்தல், நேர மட்டுப்பாடுகள், தீர்ப்புக்கள் முறையாக நடைமுறைப்படுத்தப்படுகின்றதா என்பதை பரீசிலிக்காமை என்பன காதிகள் மீது . கூறப்படுகின்ற சில குற்றச்சாட்டுக்களாகும்.

65 வருடங்களுக்கு முன் கொண்டுவரப்பட்ட 1951 ஆம் ஆண்டு சட்டத்தைத் திருத்தம் செய்வதற்காக அரசாங்கத்தினால் கடந்த காலங்களில் பல்வேறு முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டிருக்கின்றன. அவையாவன:

- *1956 ஆம் ஆண்டு திருமண மற்றும் விவாகரத்து ஆணைக்குழு (அரசாங்கம்)*
- *1973 ஆம் ஆண்டு பாரூக் குழுவும் சீர்திருத்த ஆலோசனைகளும் (சுயாதீன)*
- *1984-1986 ஆம் ஆண்டு நீதியரசர் வணசுந்தர குழு (அரசாங்கம்)*
- *1990-1992 ஆம் ஆண்டு கலாநிதி சஹாப்தீன் குழு (அரசாங்கம்)*
- *முஸ்லிம் சட்டத்தரணிகள் சங்கம் - பஸ்லட் சஹாப்தீன் குழு (சுயாதீன)*
- *2008 முஸ்லிம் பெண்கள் ஆராய்ச்சி செயல் முன்னணி (சுயாதீன)*
- *2009 ஆம் ஆண்டு நீதியரசர் சலீம் மர்சூப் குழு (நீதி அமைச்சு)*

அந்த வகையில் 2009 ஆம் ஆண்டு நீதி அமைச்சராக இருந்த மிலிந்த மொரகொட [illegible] நியமிக்கப்பட்ட நீதியரசர் சலீம் மர்சூப் தலைமையிலான குழு ஏற்கனவே முஸ்லிம் தனியார் சட்டத்தில் உள்ள குறைபாடுகளை நிவர்த்திக்கும் வகையில் சீர்திருத்த முன்மொழிவுகளை உள்ளடக்கிய அறிக்கை ஒன்றை சமர்ப்பிக்கும் என எதிர்பார்க்கப்படுகின்றது.

முஸ்லிம் குடும்பச் சட்ட ஆலோசனை சபை, காதி நீதிமன்ற மறுசீரமைப்பு, காதியார் சபை மறுசீரமைப்பு, திருமண வயது, திருமணப் பதிவு, பலதார மணம், பெண்ணின் சம்மதம், தலாக் நடைமுறை மறுசீரமைப்பு, பெண் சார்பான விவாகரத்து நடைமுறைகள், விவாகரத்தின் பின்னரான பராமரிப்பு தொடர்பான சிக்கல்கள், திருமணக் கொடுக்கல் வாங்கல் (கைக்கூலி), காதி நீதிமன்றத்தில் சட்டத்தரணியின் பிரசன்னம், பெண் காதி நீதிபதிகள் போன்ற பகுதிகளில் திருத்தம் செய்வதற்கான ஆலோசனைகள் முன்வைக்கப்பட்டுள்ளன.

பல்வேறு இனங்களும், சமயங்களும் வாழ்கின்ற பன்மைத்துவ நாடான இலங்கையில் முஸ்லிம் சட்டத்தின் பல்வேறு பகுதிகள் இலங்கையின் அரசியலமைப்புக்கு முரணாகக் காணப்படுகின்றது. 1993 ஆம் ஆண்டின் இலங்கையின் பெண்கள் பட்டயம் பெண்கள் தொடர்பான பாதுகாப்பு ஏற்பாடுகளைக் குறிப்பிட்டிருக்கின்றது. பெண்களது விவகாரங்கள் பின்வரும் 7 தராதர நியமங்களில் நோக்கப்படுகின்றன.

1. அரசியல் குடியியல் உரிமைகள்.
2. குடும்பத்திற்குள்ளான உரிமைகள்.
3. கல்விக்கும் பயிற்சி பெறுவதற்குமான உரிமைகள்.
4. பொருளாதார செயற்பாடுகள் மற்றும் நன்மைகள் எனபவற்றுக்கான உரிமைகள்.
5. சேமநலன் மற்றும் ஊட்டம் தொடர்பான உரிமைகள்.
6. சமூக பாரபட்சங்களிலிருந்து பாதுகாப்பு பெறுகின்ற உரிமை.
7. பால்நிலைசார் வன்முறையிலிருந்து பாதுகாப்பு உரிமை.

இலங்கை முஸ்லிம் விவாக, விவாகரத்து சட்டத்தில் திருமணம் முடிப்பதற்கான வயதெல்லை வரையறுக்கப்படாமையானது பல்வேறு பிரச்சினைகளுக்கு மூலகாரணமாக அமைந்துள்ளது. இளவயதுத் திருமணங்களால் முஸ்லிம் பெண் பிள்ளைகள் பல்வேறு அசௌகரியங்களுக்கும், உடல், உள ரீதியான பாதிப்புக்களுக்கும் முகம் கொடுக்கின்றனர். எனவே, திருமண வயது அல்லது தகுதி என்ற பகுதி கட்டாயம் திருத்தம் செய்யப்பட வேண்டுமென்பது சமூகத்தின் முக்கிய கோரிக்கைகளில் ஒன்றாகக் காணப்படுகின்றது.

சில நாடுகளில் காணப்படும் திருமண வயது தொடர்பான தகவல்கள் கீழே தரப்பட்டுள்ளது.

நாடு	ஆண்	பெண்
பங்களாதேஷ்	21	18
துருக்கி	15	18
உஸ்பெகிஸ்தான்	18	17
தஜிகிஸ்தான்	17	17
ஜோர்தான்	18	18
மொரோக்கோ	18	18
அல்ஜீரியா	19	19
டியூனீஸியா -	20	17
பிஜி	21	21
காம்பியா	21	21
இந்தோனேஷியா	21	21
நைஜீரியா	21	21
பாக்கிஸ்தான்	18	16
எகிப்து	18	16
மலேசியா	18	16
ஈரான்	15	13
இலங்கை	--	12 (காதி அனுமதியுடன்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மழுங்கடிக்கப்படும் ஜனநாயகம்

இன்று மேற்கின் பலம் பொருந்திய ஊடகங்களும் தீவிர வலதுசாரிப் போக்குடைய அரசியல் கட்சிகளும் இஸ்லாத்தையும் முஸ்லிம் மக்களையும் குற்றவாளிக் கூண்டினுள் நிறுத்தியிருப்பதை காணமுடிகிறது. அடிப்படைவாதம், தீவிரவாதம், பயங்கரவாதம் என்பதாக இம்மக்கள் மீது பல்வேறு குற்றச்சாட்டுக்களை சுமத்தியிருப்பதை காண முடிகிறது. 2 ஆம் உலக மகா யுத்தத்தின்போது ஜேர்மன் நாட்டின் நாசிஸ வாதிகள் யூத இன அழிப்பிற்கு முன்னர் அம்மக்களை இலக்கு வைத்து பல்வேறு வழிமுறைகளுக்கூடாக மேற்கொண்ட தாக்குதல்கள் என் நினைவுக்கு வருகின்றன.

கனடாவின் பிரதமர் ஜஸ்டின் புரூடோவும் ஜேர்மன் நாட்டின் சான்ஸலர் மேர்கல் ஆகியோரும் இவ்வெதிர் கூட்டணி அலையில் சிக்குறாமல் நல்லதொரு வழியில் பயணித்து வருவதைக் காண முடிகிறது. ஜனநாயக உரிமைகளை வெல்வதற்காக இவர்கள் மேற்கொள்ளும் போராட்டத்தைப் பார்க்க முடியுமாக இருப்பது மகிழ்ச்சிக்குரிய விடயமாக உள்ளது.

இஸ்லாமிய உலகத்தை குற்றவாளிக் கூண்டில் நிறுத்தியிருப்பது மாத்திரமல்லாமல், அம்மக்கள் மத்தியில் பிளவுகளை ஏற்படுத்தி, பிரிவினர்களாவும் எதிரிகளாகவும் கூறுபோட்டிருப்பதையும் காண முடிகிறது. முஸ்லிம்கள் அவர்களுக்கு மத்தியிலேயே சச்சரவுகளில் ஈடுபட்டுக் கொண்டிருப்பது உண்மையிலேயே கவலைக்குரிய விடயமாகும். சர்வதேச ரீதியில் முஸ்லிம்களுக்கு எதிராக இடம் பெற்றுக் கொண்டிருக்கும் ஒடுக்குமுறைகள் இன்றளவும் குறைந்தபாடில்லை. அதன் தாக்கம் இலங்கையிலும் தற்பொழுது அதிகரித்து வருவதைக் காண முடிகிறது.

சாமுவெல் ஹண்டிங்டன் நாகரிகங்களுக்கிடையிலான மோதல் குறித்து எழுதிய நூலில், ஆசியா ஆபிரிக்கா கலாசாரங்கள் தொடர்பில் மேற்கத்தேய தீவிரவாதப் பார்வையில் விமர்சனங்கள் முன்வைக்கப்பட்டிருந்தன. இவ்விமர்சனங்களுக்கு மேற்கேற்தேய நாடுகள் நடைமுறை ரீதியான பின்னணியை ஏற்படுத்தியிருந்ததை வரலாற்று வாயிலாக காண முடிந்தது. ஜனநாயக சமூகங்களுக்கு விடுக்கப்பட்ட அச்சுறுத்தல்களாகவே இதனைப் பார்க்க வேண்டியுள்ளது. பல் கலாசார நிலவுகையை Multi Culturelism முற்றாக சிதைத்து மேற்கத்தேய கலாசாரங்களை புகுத்திய போராட்டமாகவே இதனை வர்ணிக்க வேண்டியுள்ளது.

மேற்கத்தேய ஏகாதிபத்தியம் நிறுவப்படும் அமெரிக்க ஜனாதிபதித் தேர்தல் முடிவுகளும் பிரித்தானியாவின் பிரக்சிட் பெறுபேறுகளும் அவ்வாதிக்கத்தின் நீட்சியையே காண்பிக்கின்றன. முஸ்லிம்கள், கறுப்பினத்தவர்கள், இலத்தீன் அமெரிக்கர்கள், ஆசிய ஆபிரிக்க நாடுகளிலிருந்து குடிபெயர்ந்தவர்கள் அனைவர் மீதும் விடுக்கப்படுகின்ற அச்சுறுத்தல்கள், அழிவுகள், இன ரீதியான கோபப் பேச்சுக்கள், தாக்குதல்கள் தற்பொழுது மெல்லப் படிப்படியாக மேற்கில் விருத்தியடைந்து வருவதை காண முடிகிறது. பகையை பகையால் அல்லாமல் அன்பாலும் முன்மாதிரியினாலும் சிதைப்பதற்கு எமது மார்க்கம் எம்மைப் போதித்துள்ளது.

நாம் எமது உரிமைகளை மாத்திரமல்லாமல் அயலவர்கள், நாடு, சமூகம் குறித்தும் கவனம் செலுத்தும் மக்களாக வாழ வேண்டும் என்றே இஸ்லாம் எம்மை போதிக்கின்றது. முஸ்லிம்கள் சுயநலமிகளாக இருக்க முடியாது. எமது மார்க்கம் சுயநலமிகளாக இருக்குமாறு கூறவில்லை. நடத்தைகள் செயற்பாடுகள், உரையாடல்களுக்கூடாக முன்னையோர் எமக்குக் காண்பித்த முன்மாதிரிகள் ஏராளம். அவ்வழிமுறையை நாமும் பின்பற்ற வேண்டும். அம்முன்மாதிரி மிக்க பண்பாடுகளை ஏனையொரும் பின்பற்றியதனாலேயே உலகில் கூடுதலான மக்கள் இஸ்லாத்தை பின்பற்றி வருகிறார்கள்.

இன்று உலகில் இஸ்லாத்தை ஏற்பவர்களின் தொகை அதிகரித்து வருகிறது. அமெரிக்காவின் பீவ் ஆராய்ச்சி மையம் நடத்திய ஆய்வறிக்கையில் 2050 ஆம் ஆண்டாகும் போது உலகில் முஸ்லிம் சனத்தொகை 2.76 வீதமாக உயரும் என்பதோடு கிறிஸ்தவர்களின் எண்ண்ணீக்கை 2.92 ஆக இருக்கும். 2010 ஆம் ஆண்டு கணக்கெடுப்புகளின் படி உலக முஸ்லிம் சனத்தொகை 1.6 பில்லியனாக இருக்கும்போது கிறிஸ்தவர்கள் 2.17 பில்லியனாக இருந்தார்கள். முஸ்லிம்களின் எண்ணிக்கை கிட்டத்தட்ட உலக கிறிஸ்தவர்களின் எண்ணிக்கையுடன் நெருங்கிவிடும் என்று அவ்வாராய்ச்சி மையம் குறிப்பிடுகிறது.

உலக சனத்தொகையில் அடுத்த 40 ஆண்டுகளில் ஹிந்துக்கள் 3ஆவது இடத்தில் இருப்பார்கள். அப்போது அவர்கள் உலக சனத்தொகையில் 14.9 வீதமாக இருப்பார்கள். 2050 ஆம் ஆண்டில் உலகில் அதிக முஸ்லிம் சனத்தொகை கொண்ட நாடாக இந்தியா மாறிவிடும் என்றும் இந்த ஆய்வு குறிப்பிடுகின்றது. ஐரோப்பிய சனத்தொகையில் முஸ்லிம்களின் எண்ணிக்கை அடுத்த 40 அண்டுகளில் 10 வீதமாக இருக்கும் என்று கணிப்பிடப்பட்டுள்ளது.

முஸ்லிம்களாகிய நாம் எமது நடவடிக்கைகள் மற்றும் இஸ்லாமிய வழிமுறைகளுக்கூடாக எதிரிகள் எமக்கு மத்தியில் மூட்டி வருகின்ற பிணக்குகளை தவிடுபொடியாக்க முன்வர வேண்டும். நாம் சகல விடயங்களிலும் முன்மாதிரி மிக்க சமூகமாக வாழ முற்பட வேண்டும். பல காலங்களுக்கு முன்வர வேண்டிய மாற்றம் காலம் பிந்தி வருவதற்கான காரணம் எம்மிடம் முன்மாதிரிகள் குறைந்திருப்பதாகும்.

சிறுபான்மையின் உரிமைகளைப் பாதுகாக்கும் சர்வதேச சட்டங்கள்

• எம்.எம். ஸுஹைர்
முன்னாள் தூதுவர் ஜனாதிபதி சட்டத்தரணி



வேடுவர்கள் என அடையாளப்படுத்தப் படுகின்ற இலங்கையின் ஆதிவாசிகள் தமக்கே உரித்தான வாழ்வை இன்றும் தாழ்வு மனப் பான்மையின்றி திருப்தியோடு அனுபவித்து வருவதை அவதானிக்கலாம். அவர்கள் தமது பாரம்பரிய பழக்க வழக்கங்களையும் வழக்காறுகளையும் இன்றும் கூட பேணி வருகின்றனர்.

இந்நாட்டின் ஏனைய மக்கள் அனுபவிக்கின்ற நவீன சொகுசு வாழ்வை அவர்கள் அவதானிக்கின்ற போதிலும் தமக்கேயுரிய வாழ்க்கை முறைமையைக் கைவிட்டு நவீன வாழ்க்கை அமைப்பினுள் பிரவேசிக்க அவர்கள் முயற்சிக்கவுமில்லை. அதேநேரம் வெளியிலிருந்து வருகின்ற மாற்றத்திற்கான அழுத்தங்களை அவர்கள் ஏற்றுக் கொள்ளவுமில்லை.

சர்வதேச சட்டங்கள் -குறிப்பாக சர்வதேச மனித உரிமைகள் சட்டங்கள்- ஆதிவாசிகளின் உரிமைகளைப் பாதுகாப்பதற்காக பெரிதும் உதவி வருகின்றன. அதனால் அவர்கள் விரும்பும் காலம் வரையும் அவர்களது பாரம் பரியங்களையும் வழக்காறுகளையும் அவர்களால் பேண முடிந்துள்ளது. அவர்களுக்கு வெளியில் இருந்து வருகின்ற பாதிப்புக்களையும் அழுத்தங்களையும் தவிர்ப்பதற்கும் இச்சட்டங்கள் பங்களிக்கின்றதன.

இப்பிரகடனங்களும் சமவாயங்களும் இல்லாதிருந்திருந்தால், நவீனம் என்கின்ற முறைகளை செயற்படுத்தும்போது இந்த வேடுவ சமூகம் முழுமையாக அழிந்திருக்கும். அவர்கள் மத்தியில் காணப்படும் சாதாரண வாழ்க்கையமைப்பைக் கைவிட்டு வளர்ச்சியடைந்தது என்று கருதப்படுகின்ற, மனித சமூகம் ஏற்றுக் கொண்டிருக்கின்ற வேலைப் பளு நிறைந்த, நிம்மதியற்ற வாழ்க்கை முறைக்குள் பிரவேசிப்பதில் இவ்வேடுவ சமூகத்திற்கு இச்சட்டங்கள் எவ்விதத்திலும் தடையாக இருக்காது. அத்தோடு சுய விருப்பின் பேரில் அவர்களது தற்போதைய வாழ்க்கையமைப்பைக் கைவிடுவதிலும் எவ்வித தடைகளும் ஏற்படாது.

ஆதிவாசிகளின் உரிமைகளைப் பாதுகாக்கும் சர்வதேச சமவாயங்களில் ''ஆதிவாசிகளின் உரிமைகள் தொடர்பான பிரகடனம்'', ''ஆதிவாசிகள் அல்லது கோத்திர சமூகத்தின் உரிமைகள் தொடர்பான பிரகடனம்'' மற்றும் ''தேசிய இனம், மதம் அல்லது மொழி ரீதியான சிறுபான்மையினரின் உரிமைகள் தொடர்பான பிரகடனம்'' என்பன உள்ளடக்கப்பட்டுள்ளன. இவை சர்வதேச மனித உரிமைகளைப் பாதுகாக்கும் பிரகடனமாகவும், சிவில் மற்றும் அரசியல் உரிமைகளுக்கான சர்வதேச சமவாயமாகவும் கருதப்படுகின்றன.

ஒவ்வொரு பிரிவினரும் தத்தமது தனித்துவம் மிக்கதும் பாரம்பரியதுமான வாழ்க்கையமைப்பை பேணிப் பாதுகாப்பதற்குரிய உரிமைகளைப் பாதுகாப்பதே இந்த சர்வதேச மனித உரிமைகள் பிரகடனங்களின் நோக்கமாகும். ஆதிவாசிகளின் உரிமைகள் தொடர்பான பிரகடனத்தில், ''அவர்களுக்கேயுரிய வாழ்க்கையமைப்பை பாதுகாக்குமாறும், அவர்களது பல்வகைமையையும் வித்தியாசங்களையும் மதித்து நடக்குமாறும் குறிப்பிடப்பட்டுள்ளது. அவர்களுக்குரிய வழக்காறுகளையும் பழக்க வழக்கங்களையும் பேணுவதற்குரிய உரிமைகளைப் பாதுகாக்குமாறும் இவற்றின் ஊடாக அறிவுறுத்தல் வழங்கப்பட்டுள்ளது.

இது 2007 ஆம் ஆண்டில் ஐக்கிய நாடுகள் சபையில் 143 மேலதிக வாக்குகளால் நிறைவேற்றப்பட்டது. இதற்கு எதிராக அவுஸ்திரேலியா, கனடா, நியூசிலாந்து மற்றும் ஐக்கிய அமெரிக்கா ஆகிய 04 நாடுகள் மாத்திரமே வாக்களித்தன. இந்த ஏற்பாடு மனித உரிமைகளைப் பாதுகாப்பதற்கு பங்களிப்பு செய்தாலும் கூட சகவாழ்வையும் ஒற்றுமையையும் பாதுகாப்பதற்கு பங்களிக்கும் முக்கிய அம்சமாகும்.

ஐக்கிய நாடுகள் சபையின் சமவாயங்களும் பிரகடனங்களும் சர்வதேச சட்டங்களுக்கு சமமானவையாகக் கருதப்படுகின்றன. ஒரு சமவாயத்தில் [illegible] விதி மற்றொன்றில் உள்ளடக்கப்பட்டுள்ள[illegible] ஒழுங்கு விதிக்கு அப்பால் செல்ல முடியாது. அவ்வாறு இல்லாவிட்டால் வேடுவர்கள் போன்ற ஆதிவாசிகளின் உரிமைகளைப் பாதுகாப்பதற்குரிய சட்டம் மற்றொரு சமவாயத்தின் ஊடாக இரத்தாக முடியும். என்றாலும் ஒரு சமவாயத்திலுள்ள ஒழுங்கு விதிகள் கூட சம அந்தஸ்தைக் கொண்டிருக்கின்றன.

உதாரணத்திற்கு சர்வதேச மனித உரிமைகள் பிரகடனத்தின் 25(2) ஆம் ஷரத்தில், ''கர்ப்பிணித் தாய்மாருக்கும் சிறு குழந்தைகளுக்கும் விஷேட பாதுகாப்பும் பராமரிப்பும் வழங்கப்பட வேண்டும்'' எனக் குறிப்பிடப்பட்டுள்ள ஒழுங்கு விதியைச் சுட்டிக் காட்ட முடியும். கர்ப்பிணித் தாய்மாருக்கு விஷேட பாதுகாப்பு வழங்குதல் மற்றும் உதவியளித்தல் தொடர்பான இப்பிரகடனத்தின் 16(1) ஆம் ஷரத்தில் குறிப்பிடப்பட்டுள்ள திருமணத்தின் போது கணவன்-மனைவி இருவருக்கும் சம உரிமைகள் கிடைக்கப் பெற வேண்டும் எனச் சுட்டிக்காட்டப்பட்டுள்ள சட்டம் மீறப்படுகின்றது என்று ஒருவரால் விவாதிக்க முடியும். என்றாலும் உண்மையில் கர்ப்பிணித் தாயின் உடல் நிலைமையைக் கருத்தில் கொண்டு அவள் தொடர்பில் கணவருக்கு உள்ள உரிமைக்கும் அப்பால் வழங்கப்பட்டுள்ள விஷேட உரிமையானது, சமஉரிமை என்ற விடயத்திற்கு முரணானது என எவரும் வாதிக்க முடியாது.

இவ்வாறான விடயங்களில் ஆண்களுக்கும் பெண்களுக்கும் உடல் ரீதியிலான சம அசௌகரியங்கள் ஏற்படுவதில்லை என்பதைக் கருத்தில் கொள்ள வேண்டும். பெண்களுக்கு பாதுகாப்பும் உதவியும் அளிக்கப்பட வேண்டுமென வழங்கப்பட்டிருக்கும் அறிவுறுத்தல், இவ்விடைவெளியை நிரப்புவதற்கு வழிவகுக்கும். பெண்களின் உடல் நிலைமையைக் கருத்தில் கொண்டு அவளது உரிமைகளை கணவனின் நிலைமையுடன் சம்பந்தப்படுத்துவதற்கு இதனூடாக நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது.

அதேநேரம் தேசிய இனம், மதம், அல்லது மொழி ரீதியிலான சிறுபான்மையினரின் உரிமைகளைப் பாதுகாப்பதற்கான சர்வதேச பிரகடனத்தின் 8(3) ஷரத்தில் இவ்வாறு குறிப்பிடப்பட்டுள்ளது. அதாவது அப்பிரகடனத்தில் குறிப்பிடப்பட்டுள்ள உரிமைகளைப் பாதுகாப்பதற்கான ஒழுங்கு விதியைப் பாதுகாப்பதற்காக அரசாங்கம் மேற்கொள்ளும் நடவடிக்கைகள் சர்வதேச மனித உரிமைகள் பிரகடனத்தின் சம உரிமைகளைப் பாதுகாப்பதற்கான கொள்கைகளுக்கு முரண்பட்டதெனக் கருத முடியாது.

சமவாய அகராதியில் இடம்பெற்றுள்ள சமத்துவம் என்ற சொல்லுக்கு அளிக்கப்படும் விளக்கத்தோடு மாத்திரம் நின்றுவிடக் கூடாது என்பதையே நான் இங்கு குறிப்பிட முயற்சி செய்கின்றேன்.

உலகெங்கிலுமுள்ள நீதிமன்றங்களில் பயன்படுத்தப்படுகின்ற பலவித ஷரத்துக்களுக்கு சட்ட ரீதியில் விளக்கமளிக்கும் நூல்கள் உள்ளன. (இந்த விளக்கமளித்தல்கள் மிகக் தெளிவான சட்டக் கோட்பாடுகளை அடிப்படையாகக் கொண்டவை என்பதுடன் இதற்கு இணையானதும் சமமானதுமான விடயங்களுக்கு மிகச் சரியான விளக்கங்களும் அளிக்கப்பட்டுள்ளன).

அதேபோல் ஐக்கிய நாடுகள் சபையின் [illegible] ஒப்பந்தங்களுக்கு இணங்கியுள்ள நாடுகளில் வசிக்கும் நூற்றுக்கணக்கான இனங்களைச் சேர்ந்த மக்களின் திருமணச் சட்டங்களையும் உள்ளடக்கி தனியார் சட்டங்களுக்கு இப்பிரகட னங்கள் பாதுகாப்பு அளிக்கின்றன. இந்த சமவாயங்களின் நோக்கம், வெவ்வேறு இன மக்கள் அவர்களுக்கேயுரிய பழக்க வழக்கங்க ளிலும், சமய கலாசார செயற்பாடுகளிலும் ஈடுபடுவதற்குரிய உரிமைகள் வெளி அழுத்தங் களால் குறிப்பாக அரசாங்கங்களினால் ஏற்படும் அழுத்தங்களில் இருந்து பாதுகாப்ப தேயாகும்.

சர்வதேச சிவில் மற்றும் அரசியல் உரிமைகளுக்கான பிரகடனத்தின் 27 வது ஷரத்தில், சிறுபான்மையினர் தம் இனத்தினருடன் தமக்கே உரித்தான பழக்கவழக்கங்களில் ஈடுபடுவதற்கும், தமக்குரிய மொழியைப் பயன்படுத்துவதற்கும் கொண்டுள்ள உரிமைகளின் மீது அரசாங்கம் அழுத்தம் பிரயோகிக்க முடியாது என்பது தெளிவாக்கப்பட்டுள்ளது.

சிறுபான்மையினரின் இன, மொழி மற்றும் சமய விவகாரங்களைப் பாதுகாக்கும் பிரகடனத்தில் மேற்படி விடயங்கள் உறுதிப்படுத்தப்பட்டுள்ளன. அப்பிரகடனத்தின் 24 ஆவது ஷரத்தில் இவ்வாறு குறிப்பிடப்பட்டுள்ளது. அரசாங்கம் என்றால் நாட்டிலுள்ள பல இன மக்களின் சமய, கலாசார மற்றும் மொழி ரீதியிலான சுதந்திரத்தை பாதுகாக்க வேண்டும் என்பதுடன், அவற்றை மேம்படுத்தவும் அனுசரணை நல்க வேண்டும் என்றும் சுட்டிக் காட்டப்பட்டுள்ளது.

என்றாலும் இனங்கள் அல்லது தனிநபர்கள் தம் இனப் பிரிவில் மாற்றங்களை மேற்கொள்ள முடியாது என்று இவற்றின் ஊடாகக் குறிப்பிடப்படவில்லை. மாறாக அப்பிரஜைகள் தம் சுய விருப்பில் மாற்றங்களை மேற்கொள்வதற்கு இந்த சமவாயங்களில் அனுசரணைகள் அளிக்கப்பட்டுள்ளன. அந்த வகையில் இந்நாட்டில் காணப்படும் முஸ்லிம் விவாக மற்றும் விகாரத்து சட்டத்தின் சில ஷரத்துக்களில் திருத்தங்களைச் செய்ய வேண்டும் என்பதை இந்நாட்டு முஸ்லிம் சமூகம் ஏற்றுக் கொண்டுள்ளது.

1951 இல் தயாரிக்கப்பட்ட இச்சட்டத்தில் 1954, 1958, 1965, 1969, 1975 மற்றும் 2006 ஆகிய வருடங்களில் திருத்தங்கள் மேற்கொள்ளப்பட்டுள்ளன. 1972 - 2009 இடைப்பட்ட காலப் பகுதியில் தேசிய மட்டத்தில் ஏற்றுக்கொள்ளப்பட்ட நான்கு கமிட்டிகள், இச்சட்டத்தில் மேற்கொள்ளப்பட வேண்டிய திருத்தங்களை ஆய்வு செய்துள்ளது. இச்சட்டத்தை இறுதியாக ஆய்வு செய்த கமிட்டி, இச்சட்டத்தில் திருத்தங்கள் செய்யப்படவிருப்பதாக சுட்டிக் காட்டியுள்ளது.

இவ்வாறான நிலையில் 2009 இல் உச்ச நீதிமன்ற நீதியரசர் சலீம் மர்ஸூப் தலைமையில் நியமிக்கப்பட்ட கமிட்டி, இச்சட்டம் தொடர்பில் மேற்கொண்ட ஆய்வில் பெரும்பாலானவை முடிவுறும் தருவாயில் உள்ளது. சில விடயங்கள் மிகவும் உணர்வுபூர்வமானவை என்பதால், இக்கமிட்டி தம் பணிகளை சிறப்பான முறையில் மேற்கொள்வதற்காக மேலும் காலமும் வாய்ப்பும் அளிக்க வேண்டும். இஸ்லாம் அல்லது ஏனைய வாழ்க்கை முறைமைகள் குறித்து தர்க்கம் புரியாமல் பெண்களுக்கும் சிறுவர்களுக்கும் பாதிப்பை ஏற்படுத்தக் கூடிய பிரச்சினைகளை இத்திருத்தங்கள் மூலம் களைவதற்கு முன்னுரிமை அளிக்கப்பட வேண்டியது அவசியம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நேர்காணல்: ஹெட்டி ரம்ஸி

மக்களை கொந்தளிப்பான நிலைக்குள் தள்ளிவிட்ட அவப்பெயரை எமக்கு சுமக்க முடியாது.

முஹம்மத் அஸ்லம்
பொருளாளர் - சிறிலங்கா முஸ்லிம் காங்கிரஸ்

- **சிறி லங்கா முஸ்லிம் காங்கிரஸ் வீழ்ச்சியை நோக்கி பயணித்து வருகிறது. கட்சியின் துவக்க கால உறுப்பினர்கள் பலர் கட்சியிலிருந்து பிரிந்து வேறு கட்சிகளை அமைத்துள்ளார்கள். கட்சியின் இத்தகைய வீழ்ச்சிக்குரிய காரணம் எதுவென நீங்கள் கருதுகிறீர்கள்?**

அபிவிருத்தி என்ற மாயையில் எமது சமூகம் அகப்பட்டது. காலப்போக்கில் சிலர், நாம் வெறும் அரசியல் செய்வதில் பிரயோசனம் கிடையாது. ஆளும் கட்சியில் இருந்தால் தான் எதையும் சாதிக்க முடியும். அபிவிருத்தி வேண்டும் என்பதாக எமது கட்சியில் இருந்தவர்களுக்கு ஆசை காட்டினார்கள். அவற்றில் நம்பிக்கை வைத்து பலர் கட்சி தாவினார்கள். முஸ்லிம் காங்கிரஸில் போட்டியிட்டு வெற்றி யீட்டியவர்களை பிரித்தெடுக்கும் சூழ்ச்சிகளை பேரினவாத கட்சிகள் மேற் கொண்டன. அரசியலில் நிதானமற்ற எமது உறுப்பினர்கள் அவசரமாக பெரிய அரசியல்வாதிகளாகி விட வேண்டும். அபிவிருத்தி செய்து விட வேண்டும் என்கின்ற மாயைகளுக்கு அகப்பட்டார்கள்.

முஸ்லிம்களின் குரலாக இருக்கின்ற கட்சியை அழித்துவிட வேண்டும், அவர்களின் பலத்தை குறைத்து விட வேண்டும், அக்கட்சியை கூறு போடுவதன் மூலம் அவர்களது கோரிக் கைகளை குறைத்து விடலாம் என்ற நோக்கில் பல பிரிவுகளாக பிரித்தார்கள்.

கடந்த அரசாங்கக் காலப்பகுதியில், எங்களால் இதை தர முடியாது, ரிஷாத் விரும்புவதில்லை, அதாவுல்லா விரும்புவதில்லை என அவர்களைக் காண்பித்து எமது கோரிக்கைகளுக்கு அவ்வாட்சி பீடம் செவிசாய்க்கவில்லை. எமது உரிமைகளைத் தரவில்லை. அவ்வாறு பிரிந்திருப்பதனாலேயே முஸ்லிம் காங்கிரஸிற்கு வேலைத்திட்டங்களை முன்னெடுக்க முடியாமல் போயுள்ளது.

- **தற்பொழுது சிறி லங்கா முஸ்லிம் காங்கிரஸிற்குள் நிலவி வரும் உட்கட்சிப் பூசல் முடிவுக்கு கொண்டுவரப்பட்டுள்ளதா?**

முஸ்லிம் காங்கிரஸில் மாத்திரமல்ல இன்று நாட்டிலுள்ள சகல கட்சிகளிலும் உட்கட்சிப் பூசல்கள் இடம்பெற்றுக்கொண்டுள்ளன. முன்னாள் தலைவர் இருக்கும் காலத்திலும் கட்சிக்குள் பிரச்சினைகள் ஏற்பட்டன. ஒரு முறை மர்ஹூம் அஷ்ரப் அவர்கள், முஸ்லிம் காங்கிரஸ் என்ற வண்டி ஓடிக் கொண்டே இருக்கும். இதிலே ஏறுபவர்கள் இடையிலே பாய்வார்கள், பஸ் தரிப்பிலே நிறுத்தியவுடன் இறங்குவார்கள், இல்லையென்றால் ஓடிக்கொண்டு வந்து திருப்புகின்றபோது பாய்வார்கள். ஆனால் இந்தப் பயணம் தொடர்ந்து கொண்டிருக்கும் என்று கூறினார்.

தற்பொழுது உண்மையில் கட்சிக்குள் ஒரு சலசலப்பு உள்ளது. கட்சிக்குள் எல்லோரும் ஒற்றுமைப்பட வேண்டும் என்பதில் நாம் தெளிவாக உள்ளோம். சில விடயங்களில் விடாப்பிடியாக இருக்க முடியாது. விட்டுக் கொடுப்புக்களை கொடுத்துத்தான் ஆக வேண்டும்.

ஒரு கட்சி சமூகத்தின் கட்சி. காலத்திற்கு காலம் பதவிகள் மாறும். பஷீர் சேகுதாவூத் இன்னும் தவிசாளராக உள்ளார். செயலாளராக இன்னும் ஹஸனலி உள்ளார். இவருக்கு பணிகள் அதிகம் என்பதனால் மேலதிக செயலாளராக மன்சூர். ஏ. காதர் நியமிக்கப்பட்டுள்ளார்.

- **ராஜபக்ஷ காலப் பகுதியில் அரங்கேறிய இனவன்முறைகள் முஸ்லிம் காங்கிரஸ் பிரதிநிதித்துவப்படுத்தும் இவ்வரசாங்கத்தின் கீழாலும் முன்னகர்ந்து கொண்டுள்ளன. முஸ்லிம் சமூகத்திற்குள் நிலவி வரும் பெரும்பாலான பிரச்சினைகள் தொடர்பில் சிவில் சமூக அமைப்புக்களே குரல் எழுப்பி வரும் நிலையில், இப்பிரச்சினைகள் தொடர்பில் முஸ்லிம் காங்கிரஸ் எவ்வாறான அழுத்தங்களை அரசின் மீது பிரயோகித்துள்ளது?**

முஸ்லிம் காங்கிரஸ் பேச வேண்டிய இடங்களில் பேசுகிறது. ஏனைய கட்சிகள் அல்லது சிவில் சமூக அமைப்புக்கள் பேசுவதற்கும் முஸ்லிம் காங்கிரஸ் பேசுவதற்குமிடையில் வித்தியாசங்கள் உள்ளன. முஸ்லிம் காங்கிரஸ் சமூகத்திற்கான பணியை செய்வதில் பின்நிற்கவில்லை. முஸ்லிம் காங்கிரஸ் என்கின்ற அடிப்படையில், சில விடயங்களை செய்யும் போது நிதானமாகவும் வெளிப்படையாகவும் செய்கிறது.

இன்று நாட்டில் ஏற்பட்டிருக்கின்ற இனவாதப் போக்குகளை கருத்திற் கொண்டு அவற்றுடன் முட்டி மோதிப் போகும் பணியை செய்ய முடியாது. வெளிப்படையாக கருத்துக்களை தெரிவித்து இளைஞர்களை ஆவேசப்படுத்தவும் முடியாது.

மக்களை கொந்தளிப்பான நிலைக்குள் தள்ளிவிட்ட அவப்பெயரை சுமக்கவும் எமக்கு முடியாது. அமைதியான முறையில் முஸ்லிம் காங்கிரஸ் தனது பணிகளை செய்து கொண்டுள்ளது.

- **நாட்டில் இனவாதம் இன்னும் முற்றுப் பெறவில்லை. கடும்போக்குவாத சக்திகள் நாளுக்கு நாள் புத்துயிர் பெறுகிறார்கள். இனவாதத்தை ஒடுக்குவதில் உங்களது கட்சி எவ்வாறான திட்டங்களை அரசிடம் முன்வைத்துள்ளது?**

இது தொடர்பில் கடந்த தினம் பாதுகாப்பு அமைச்சுடனும் பாதுகாப்புத்துறை அதிகாரிகளுடனும் சிறுபான்மை கட்சிகள் ஒன்றிணைந்து பேச்சுவார்த்தைகளை நடாத்தியிருந்தன. இப்பேச்சுவார்த்தையின் போது முஸ்லிம் காங்கிரஸின் தலைவர், கடந்த அரசாங்கத்தில் இருந்தவர்கள் பொதுபலசேனா உள்ளிட்ட இனவாத அமைப்புக்களை வளர்த்தார்கள். அவர்களுக்கெதிராக நடவடிக்கை எடுக்காததின் காரணத்தினால் அவ்வரசாங்கத்திற்கு வீட்டுக்குச் செல்ல நேரிட்டது. இவ்வரசாங்கமும் இனவாத அமைப்புக்களுக்கு எதிராக எவ்வித நடவடிக்கைகளையும் எடுக்காவிட்டால் வீட்டிற்கு செல்ல நேரிடும் எனக் கூறியபோது திடீரென சம்பிக்க ரணவக்க எழுந்து, நீங்கள் ஏன் அவ்வாறு கூறுகிறீர்கள். நீங்கள் கூறுவது போன்று நாட்டிலுள்ள மதகுருமார்களை கைதுசெய்ய முடியாது என உரத்த குரலில் கூறினார். அதற்கு ரவூப் ஹக்கீம், எல்லா மதகுருமார்கள் பற்றி யும் நான் பேசவில்லை. குழப்பங்களை விளைவித்துக்கொண்டிருக்கின்ற மதகுருமார்களை பற்றியே நான் கூறுகிறேன் என்றார்.

எதிர்காலத்தில் என்ன நடைபெறும் என்று கூற முடியாத பயங்கரமான கால கட்டத்தில் நாம் உள்ளோம். பெரும்பான்மைச் சமூகத்தில் உள்ள ஒரு ஜனாதிபதி எல்லா விடயங்களிலும் சிறுபான்மையினர்களுக்கு சலுகைகளை கொடுக்க முடியாது. அவர்களுடைய பெரும்பான்மைச் சமூகத்தையும் அவர் பார்க்க வேண்டும். அவர் இந்நாட்டின் ஜனாதிபதியாக இருந்தாலும் அவர் பௌத்த மதத்தை சேர்ந்தவர். அவரது இனத்தையும் அவர் பாதுகாத்துக் கொண்டு, அந்த மக்களையும் அம்மதகுருமார்களையும் குழப்பியடித்து எல்லாவற்றையும் ஒரு பிரச்சினையாக மாற்றாமல் நிதானமாகப் பணியாற்றுகிறார்.

எதிர்காலத்தில் இனவாதத்திற்கு முற்றுப் புள்ளி வைக்கும் வேலைத்திட்டங்களை ஜனாதிபதியும் பிரதமரும் ஆரம்பித்திருக்கிறார்கள். இனவாதம் பேசுகின்றவர்களுக்கு ஒரு வருட கடுமிய சிறைத் தண்டனை வழங்கப்பட வேண்டும் என அண்மையில் ஜனாதிபதி தெரிவித்திருந்தமையும் இங்கு குறிப்பிடத்தக்கது.

- **கடுமையான முறையில் இனவாதக் கருத்துக்களை வெளியிட்டு வரும் தேரர்களுக்கெதிராக ஏன் சட்ட நடவடிக்கை எடுக்கப்படுதில்லை?**

பௌத்த சாசனத்திற்கு அரசியலமைப்பில் உயரியதொரு இடமுள்ளது. பௌத்த சாசனத்தின் கீழாலேயே அரசியலமைப்பு உள்ளது. நாம் ஏற்றுக்கொண்டாலும் ஏற்றுக்கொள்ளாவிட்டாலும் அவர்களுக்கான சலுகைகள் அனைத்தும் உள்ளன. எனவே இவற்றில் இனப் பிரச்சினை பூதாகரமாகக் கூடாது என்பதனை கருத்திற் கொண்டே அரசாங்கம் நிதானப் போக்கை கடைபிடித்து வருகிறது. ராஜபக்ஷ அரசாங்கம் ஞானசாரவை கைதுசெய்யவில்லை. இவ்வரசாங்கம் அவரை கைதுசெய்தது.

- **நீதியமைச்சர் விஜயதாச ராஜபக்ஷ கடந்த தினம் பாராளுமன்றத்தில் முஸ்லிம் அடிப்படைவாதம் குறித்து தெரிவித்த கருத்துக்கள் தொடர்பில் சிறிலங்கா முஸ்லிம் காங்கிரஸ் எவ்வாறான பதில்களை வழங்கியிருந்தது?**

எமது கட்சியின் தலைவர் அதற்கான பதிலை பாராளுமன்றத்தில் தெரிவித்திருந்தார். சபைப் பேச்சாளர் ராஜித சேனாரத்னவும் அது விஜயதாசவின் தனிப்பட்ட கருத்தென்றும் அது அரசாங்கத்தின் கருத்தல்ல என்றும் இலங்கையில் ஐசிஸ் இல்லை என்றும் தெரிவித்திருந்தார். அது எப்படி இருந்தாலும் ஒரு பொறுப்பு வாய்ந்த பதவியில் உள்ள புத்தசாசனம் மற்றும் நீதியமைச்சர் அவ்வாறான கருத்துக்களை தெரிவித்திருப்பதை நாம் வன்மையாக கண்டிக்கிறோம்.

கடந்த அரசாங்கத்தில் இருந்த ஒரு சிலரின் கருத்துக்களும் இவரின் கருத்துக்களோடு தொடர்புபடுகிறது. வெளிநாடுகளில் இருந்து வருகின்ற விரிவுரையாளர்கள் அடிப்படைவாதத்தை போதிக்கிறார்கள் என்று கூறிய வசனம் எமது மத்ரஸாக்களையே சுட்டிக்காட்டுகின்றன. கடந்த காலத்தில் இருந்தவர்களால் இவர் மூளைச்சலவை செய்யப்பட்டிருக்கிறார். அவ்வாறான பிழையான தகவல்களை இவருடைய சிந்தனையில் புகுத்தியுள்ளார்கள்.

யார் தவறிழைத்தாலும் தவறு தவறுதான். அது கண்டிக்கப்பட வேண்டிய விடயம். இவ்வாறான செயற்பாடுகள் முஸ்லிம்கள் மத்தியில் பீதியை ஏற்படுத்தியிருக்கின்றன. அவர் அதை ஒருவாறு சமாளித்திருக்கிறார்.

- **முஸ்லிம் தனியார் சட்டத் திருத்தங்கள் அரசாங்கத்தின் மறைமுக நிகழ்ச்சி நிரலொன்றுக்கு அமைய மேற்கொள்ளப்படுவதாக ஒரு குற்றச்சாட்டு உள்ளது. அது தொடர்பில்...**

அரசாங்கத்திலுள்ள பொது எதிரணியைச் சேர்ந்தவர்களால் ஆரம்பிக்கப்பட்டதொரு விடயமே இது. இது ஆங்கிலேயர் காலத்திலிருந்து வரும் ஒரு சட்டமாகும். இவற்றில் மாற்றங்களைக் கொண்டு வரவேண்டும். திருமண வயது மாற்றப்பட வேண்டும் என்றெல்லாம் கூறி வருகிறார்கள். ஜீ.எஸ்.பீயை எடுப்பதற்காக முஸ்லிம்கள் இதை செய்ய வேண்டும் என்கின்ற கருத்தைத் திணித்திருக்கிறார்கள்.

இதுபோன்ற கருத்துகள் ஏற்படின் முஸ்லிம் உலமாக்கள், கல்விமான்கள் கலந்துரையாட வேண்டும். பாராளுமன்றத்தில் அது தொடர்பிலான சட்டத் திருத்தங்கள் கொண்டு வரப்படுவதாக இருந்தால் அது தொடர்பில் முஸ்லிம் தலைவர்கள் பேசி அதை எதிர்ப்பதற்கான நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டும்.

- **வடக்கு கிழக்கு இணைப்பு குறித்த முஸ்லிம் காங்ரஸின் நிலைப்பாடுகள் என்ன?**

வடக்கும் கிழக்கும் பிரிந்துள்ளது. அவற்றில் மக்கள் எவ்வித பிரச்சினைகளும் இல்லாமல் வாழ்கிறார்கள். வடக்கு கிழக்கு இணைப்பு என்பது இலகுவானதொரு விடயமல்ல. வடக்கு கிழக்கு இணைக்கப்பட வேண்டும் என மேடைகளில் வாய் கிழியப் பேசலாம். ஆனால் அது சாத்தியப்படாது. வடக்கையும் கிழக்கையும் நாங்கள் நினைப்பது போன்று இணைத்து விட முடியாது. அரசியலமைப்புச் சட்டத்தின் படி அது நடைபெற வேண்டும்.

(பக்.14)

எழுவாய், பயமிலை

அபூ ஷாமில்

குகைக்குள்ளிருந்து நபிகளாரை மீட்டெடுத்தல்

சிறுபான்மை வாழ்வொழுங்கில் இருந்துதான் இஸ்லாமிய சாம்ராஜ்யம் வளர்ந்தது. முஸ்லிமல்லாதவர்கள் பெரும்பான்மையாக இருந்த மக்காச் சூழலில் அது வெற்றி பெற்று நின்று நிலைத்தது. இன்றும் பல்வேறு நாடுகளிலும் சிறுபான்மையாக வாழுகின்ற முஸ்லிம்களுக்கு இஸ்லாத்தின் தூதைச் சுமந்து வந்த ரஸூலுல்லாஹ் (ஸல்) வின் வாழ்வில் நிறைய முன்மாதிரிகள் இருக்கின்றன.

ரஸூலுல்லாஹ் (ஸல்) அவர்களின் பிறந்த தினம், இந்தச் சிறுபான்மை முஸ்லிம் நாட்டிலே கொண்டாடப்பட்டு வருகிறது. பள்ளிவாசல்களிலும் பொது மேடைகளிலும் ரஸூலுல்லாஹ்வின் முன்மாதிரிகள் பற்றியும் ரஸூலுல்லாஹ்வின் சிறப்புகள் பற்றியும் முழக்கங்கள் களைகட்டப் போகின்றன. நபிகளாரின் நற்பண்புகள், அன்னதானம் வழங்குவதில் நபிகளாரின் முன்மாதிரி, அண்ணலாரின் விருந்தோம்பல், பெருமானாரின் பொறுமை, மன்னிக்கும் மனப்பான்மை என பல்வேறு தலைப்புக்களிலும் ரஸூலுல்லாஹ் (ஸல்) புடம் போடப்படுவார்கள்.

ரஸூலுல்லாஹ்வின் தலைப்பாகை மாண்மியம், ரஸூலுல்லாஹ்வின் சிறுநீரின் சிறப்பு, வியர்வையின் மகிமை, எச்சிலின் மகத்துவம் என பல்வேறு சிறப்புகள் எடுத்துரைக்கப்படும். ரஸூலுல்லாஹ்வை தாண்டி, அவர்களது குடும்பத்தினர், அவர்களது குடும்பத்தில் இத்தனையாவது பரம்பரையில் தோன்றிய இமாம்கள் என ரஸூலுல்லாஹின் பெயரில் பல்வேறு அரசியல்கள் அரங்கேறும்.

தனிமனிதனாக அல்லது சற்று மேலே சென்று ஒரு குடும்பத் தலைவனாக ரஸூலுல்லாஹ்வின் சிறப்பும் முன்மாதிரியும் எப்படி அமைந்தன என்ற பேசுபொருளிலேயே உலகத் தலைவர் நினைவுபடுத்தப்படுகிறார். இதனைத் தாண்டி, ஒரு சிறுபான்மைச் சமூகத்திலே நபிகளார் எப்படி வாழ்ந்து காட்டினார்கள் என்பதை நடைமுறைப்படுத்திக் காட்டும் விதமாக நபிகளாரின் பிறந்த தினம் அனுஷ்டிக்கப்படும் அளவுக்கு நாங்கள் முன்னேற வேண்டும்.

சிறுபான்மைச் சமூகத்தில் நபிகளாரின் வாழ்வொழுங்கு எப்படி இருந்தது, எந்த விடயங்களை அவர்கள் முற்படுத்தினார்கள் என்ற ஒழுங்கில் இந்த மீலாதிலிருந்து நாங்கள் நடைமுறைப்படுத்திக் காட்டத் தொடங்கினால், அடுத்த மீலாதில் ரஸூலுல்லாஹ்வை ஞாபகப்படுத்துபவர்கள் அதிகமாக இருப்பார்கள்.

பூகொடை வாழ் முஸ்லிம்கள் இப்படியானதொரு நடைமுறையை செய்து காட்டியிருக்கிறார்கள். பூகொடையில் முஸ்லிம்கள் சிறுபான்மையினர். அங்கு ஒரு சிங்களத் தாய் மரணித்த வேளையில் முதலில் அங்கு போய் நின்றவர்கள் முஸ்லிம்கள். சவப்பெட்டியிலிருந்து மரண வீட்டுக்குத் தேவையான அனைத்தையும் அவர்கள் முன்னின்று செய்து கொடுத்திருக்கிறார்கள். சவப்பெட்டியை தூக்கிச் சென்றார்கள். வீட்டார் நல்லடக்கம் செய்யும் இடத்துக்குச் செல்வதற்கான வாகன வசதிகளை செய்து கொடுத்தார்கள். நல்லடக்கத்துக்குப் பின்னரும் வீட்டுக்குத் தேவைப்படும் பொருட்களை வாங்கிக் கொடுத்தார்கள். நல்லடக்க கிரியைகளின் போது ஒரு சிங்களப் பொதுமகன் ஒலிவாங்கியை வாங்கி முஸ்லிம்கள் மீது நட்புறவுடன் வாழ வேண்டிய அவசியத்தை வலியுறுத்தும் அளவுக்கு இந்த நிகழ்வு அவர்களில் பாதிப்புச் செலுத்தியிருக்கிறது.

ரபீஉல் அவ்வல் பிறை பன்னிரெண்டில் பள்ளிவாசல்களுக்குள் ரஸூல்லாஹ்வின் ஞாபகங்களை மூடி சாம்பிராணி பிடிக்காமல் பெரும்பான்மைச் சமூகத்துக்கு மத்தியில் ரஸூலுல்லாஹ்வை முன்வைக்க வேண்டும். இதன்போது அச்சடிக்கப்பட்ட பிரசுரங்களையோ, ஒலிபெருக்கியிலான உபந்நியாசங்களையோ, பொழுது போகாதவர்களின் சமூக ஊடகங்களையோ பயன்படுத்துவதற்கு அப்பால் நடைமுறை ரீதியான செயற்பாடுகளின் மூலமாக நாங்கள் ரஸூலுல்லாஹ்வை காண்பிக்க முடியுமாக இருந்தால், அதனூடாக மனித குலத்துக்கான இஸ்லாத்தின் தூதை முன்வைக்க முடியுமாக இருந்தால், அது தான் இம்முறைய மீலாதில் நாங்கள் செய்த மகத்தான பணியாக இருக்கும்.

மக்கா காலப்பிரிவில் ரஸூலுல்லாஹ் (ஸல்) அவர்கள் சந்தைக்கு வந்தவர்களுக்கு தண்ணீர் விநியோகித்திருக்கிறார்கள். மக்களது சொத்துக்களைப் பாதுகாத்துக் கொடுத்திருக்கிறார்கள். பிணக்குகளைத் தீர்த்து வைத்திருக்கிறார்கள். மக்கள் நலப் பணிகளை தனியாகவும், ஹில்ஃபுல் புழூல் என்ற சங்கத்தை உருவாக்கியும் செய்திருக்கிறார்கள். இப்படித் தான் சிறுபான்மையாக வாழ்ந்த காலப்பிரிவில் ரஸூலுல்லாஹ் (ஸல்) அவர்கள் வாழ்ந்து காட்டியிருக்கிறார்கள். இந்த நல்ல விடயங்களுக்கூடாகவே அவர்கள் மக்கள் மத்தியில் அறிமுகமாகியிருக்கிறார்கள். இவ்வாறான மனித நேயச் செயற்பாடுகளின் மொத்த உருவமான ரஸூலுல்லாஹ்வை நாட்டு மக்கள் அனைவருக்கும் அவரது செயற்பாடுகளை நடத்திக் காட்டுவதனூடாக முன்வைக்க வேண்டும்.

இதை விடுத்து ரஸூலுல்லாஹ்வை முஸ்லிம்களின் குகைக்குள்ளேயே ஒளித்து வைப்பதற்கு நாங்கள் முயற்சித்தால் அல்லாஹ்வின் ஒளியை மூடி மறைப்பதற்கு நாங்கள் செய்யும் ஒத்தாசையாகவே அது அமையும். யார் வெறுத்த போதிலும் அல்லாஹ் தனது ஒளியை பூரணப்படுத்தியே தீருவான்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பாகிஸ்தான்-இந்திய எல்லைப் புறத்தில் தொடர்ந்தும் மோதல்

கடந்த வாரம் இடம்பெற்ற தாக்கு தலில் காஷ்மீரிலுள்ள இந்திய இராணுவத் தலைமையகமான நக்ரோத்தாவில் ஆயுததாரிகளுக்கும் இந்தியப் படையினருக்கும் இடையில் இடம்பெற்ற மோதலில் 7 இந்தியத் துருப்பினர் கொல்லப்பட்டனர். அவர்களுள் இருவர் உயர் இராணுவ அதிகாரிகள் என்று தெரிவிக்கப்படுகின்றது.

இந்திய கட்டுப்பாட்டிலுள்ள காஷ்மீர் மற்றும் இந்திய எல்லைக் கட்டுப்பாட்டுப் பகுதியில் ஆயுததாரிகளுக்கும் இந்திய இராணுவத்திற்கும் இடையில் நடைபெற்று வரும் மோதலில் இது வரை 45 இற்கும் அதிகமோனோர் கொல்லப்பட்டுள்ளனர்.

செப்டம்பரில் உரி நகரில் இந்திய இராணுவத் தளத்தின் மீது மேற்கொள்ளப் பட்ட தாக்குதலுக்குப்பின்னர் இடம் பெற்ற பெரும் தாக்குதல் இது என இந்தியா தெரிவித்துள்ளது. இத்தாக்குதலுக்கு பாகிஸ்தானே பொறுப்பு என இந்திய வட்டாரங்கள் தெரிவிக்கின்றன. இதேவேளை, பாகிஸ்தான் இக்குற்றச்சாட்டுக்களை மறுத்துள்ளது.

1947 இல் பிரிட்டனின் கட்டுப்பாட்டிலிருந்து இந்தியாவும் பாகிஸ்தானும் தனித் தனி நாடுகளாக பிரிந்தது முதல் எல்லைத் தகராறுகள் நீடித்து வருகின்றன. கட்டுப்பாட்டு கோட்டுப் பிரதேசத்தில் இரு தரப்பினருக்கும் இடையில் அவ்வப்போது சமர் இடம் பெறுகிறது. மோடி அரசாங்கத்தின் வருகையின் பின்னர் இத்தாக்குதல்கள் தீவிரமடைந்துள்ளன.

சர்வதேசப் பார்வை

மொசூல் நகருக்கான நீர் வினியோகம் துண்டிப்பு

ஆறரை இலட்சம் மக்கள் பரிதாபம்

ஈராக்கின் மொசூல் நகருக்கான நீர் விநியோகம் துண்டிக்கப்பட்டுள்ளதால் ஆறரை இலட்சம் ஈராக்கியர்கள் பெரும் மனித அவலத்தை எதிர்கொண்டுள்ளனர் என எச்சரிக்கப்படுகின்றது. ஐசிஸ் பயங்கரவாதிகளின் கட்டுப்பாட்டிலிருந்து மொசூல் நகரை மீட்கும் ஈராக்கிய படையினரின் இராணுவ நடவடிக்கைகளால் இந்நகருக்கான நீர் விநியோகம் பாதிக்கப்பட்டுள்ளது.

ஐசிஸ் மற்றும் ஈராக்கிய அரச படையினருக்கிடையிலான குறுக்குச் சமரில் 40 வீதமான மொசூல் நகர மக்கள் பாதிக்கப்பட்டுள்ளனர். ஏற்கனவே அவர்களில் மிகப் பெரும் தொகையினர் வறுமைக் கோட்டின் கீழ் வாழ்கின்றனர். தற்போது ஆறரை இலட்சம் மொசூல்வாசிகள் நீர் தட்டுப்பாட்டை எதிர்நோக்கியுள்ளதாக அறபு, இஸ்லாமிய ஊடகங்கள் தெரிவிக்கின்றன.

வடக்கு ஈராக்கிலுள்ள மொசூல் நகரம் 2014 ஆம் ஆண்டிலிருந்து ஐசிஸ் பயங்கரவாதிகளின் கோட்டையாகச் செயல்படுகிறது. குடிநீர் விநியோகத்தைத் துண்டித்தவர்கள் ஈராக்கிய படையினரா அல்லது தீவிரவாதிகளா என்பது தெளிவாகவில்லை என மொசூல் நகரவாசி ஒருவர் ஊடகங்களிடம் தெரிவித்துள்ளார்.

தற்போது 15 இலட்சம் மக்கள் இந்நகரில் சிக்கியுள்ளனர். அவர்களின் அடிப்படைத் தேவைகளான நீர், மின்சாரம், உணவு, சுகாதாரம் என்பன அவர்களுக்குக் கிடைக்கவில்லை என மக்கள் கவலை வெளியிடுகின்றனர்.

கடந்த ஒரு சில வாரங்களில் 2 இலட்சம் மக்கள் மாத்திரமே அங்கிருந்து அகதிகளாய் வெளியெறியுள்ளனர். மொசூல் சுன்னிகளை பெரும்பான்மையாகக் கொண்ட நகரம். இதனால் ஈராக்கிய

அரச படையினர் அவர்களை மனிதக் கேடயங்களாகப் பயன்படுத்தி வருகிறார்கள் என்று குற்றம்சாட்டப்படுகின்றது. மறுதலையாக ஐசிஸ் தீவிரவாதிகள் பொதுமக்களைக் கேடயங்களாகப் பயன்படுத்தி வருவதாக ஈராக்கிய அரச படை கூறி வருகின்றது. அரச படையினர் பெரும்பாலும் ஷீஆ சமூகத்தைச் சேர்ந்தவர்கள் என்பது குறிப்பிடத்தக்கது.

ஆறு வாரங்களுக்கு மேலாக மொசூல் நகரம் பாரிய மனிதாபிமான நெருக்கடியை எதிர்நோக்கி வருகின்றது. கடந்த ஒக்டோபர் 17 இல் அரசாங்கம் ஐசிஸ் பயங்கரவாதிகளுக்கு எதிரான தாக்குதலை ஆரம்பித்தது.

கிழக்கு அலெப்போவிலிருந்து 20,000 சிரியர்கள் வெளியேற்றம்

அலெப்போ மீது சிரிய அரச படையினர் மேற்கொண்டு வரும் வான்வழித் தாக்குதல்களை அடுத்து 20,000 மக்கள் அங்கிருந்து அகதிகளாய் இடம்பெயர்ந்துள்ளதாக சர்வதேச செஞ்சிலுவைச் சங்கம் தெரிவித்துள்ளது. காயமடைந்த மற்றும் நோய்வாய்ப்பட்ட அகதிகளுக்கு சிகிச்சை அளிக்கும் பணிகள் ஏற்கனவே தொடங்கி விட்டதாக அந்நிறுவனம் அறிவித்துள்ளது.

எனினும், கிழக்கு அலெப்போவிற்கான நுழைவாயில் அரச படையினரின் கட்டுப்பாட்டில் உள்ளதனால் நிவாரண உதவிப் பணிகளை மேற்கொள்வதில் பாரிய நெருக்கடி தோன்றியுள்ளதாக அந்நிறுவனம் தெரிவிக்கின்றது.

மனிதாபிமான அடிப்படையில் உணவு, மருந்துகள் மற்றும் ஏனைய வசதிகளை மக்களிடம் கொண்டு சேர்ப்பதற்கான வாய்ப்பை சிரிய அரசாங்கம் உறுதி செய்ய வேண்டும் என செஞ்சிலுவைச் சங்கம் வேண்டுகோள் விடுத்துள்ளது.

டொனால்ட் ட்ரம்ப் பதவியேற்பதற்கு முன்னர் அலெப்போவிலிருந்து கிளர்ச்சியாளர்களை முற்றாக வெளியேற்றும் அல்லது அழிக்கும் நடவடிக்கைகளில் சிரிய அரசாங்கமும் அதன் கூட்டணி நாடுகளும் தீவிரமாகச் செயல்படுகின்றன. ஆனால், இக்கூட்டணி தனது இலக்கை அடைவதற்கான வாய்ப்பு குறைவாகவே உள்ளது என்று அவதானிகள் நம்புகின்றனர்.

தீவிரமான தாக்குதல்கள் பொதுமக்களை அழிப்பதற்கே வழிகோலுகின்றது. இராணுவ இலக்குகள் அடையப் பெறுவது சாத்தியமற்றது என்று அரசியல் இராணுவ ஆய்வாளர்கள் சுட்டிக்காட்டியுள்ளனர்.

ஜெரூசலத்தைப் பாதுகாப்பது ஒவ்வொரு முஸ்லிமினதும் கடமையாகும்

- துருக்கிய ஜனாதிபதி அர்தூகான்

உலகிலுள்ள அனைத்து முஸ்லிம்களும் ஜெரூசலத்தைப் பாதுகாப்பதற்கு முன்வர வேண்டும் என துருக்கிய ஜனாதிபதி அர்தூகான் வேண்டுகோள் விடுத்துள்ளார். பலஸ்தீனம் முழு மொத்த முஸ்லிம்களினதும் சர்வதேச சொத்து என்ற வகையில் அதைப் பாதுகாக்கும் பொறுப்பை நாம் அனைவரும் ஏற்றிருக்கின்றோம். பலஸ்தீன சகோதரர்களைப் பாரபட்சமாக நடாத்துகின்ற, அடக்கியாள்கின்ற இஸ்ரேலின் சட்டங்கள் மனச்சாட்சியற்றவை என்று அர்தூகான் சாடியுள்ளார்.

ஜெரூசலம் தொடர்பான பாராளுமன்ற கருத்தரங்கில் கலந்துகொண்டு உரையாற்றுகையிலேயே அவர் இவ்வாறு தெரிவித்தார். கற்களை மாத்திரம் ஆயுதங்களாகக் கொண்டுள்ள சிறுவர்களிடம் மாத்திரம் அக்ஸாவை பாதுகாக்கும் பொறுப்பு விட்டு வைக்கப்படக் கூடாது. ஒவ்வொரு முஸ்லிமும் இந்தப் பொறுப்பை சுமக்க வேண்டும் என்று அர்தூகான் வலியுறுத்தினார்.

இஸ்ரேல் சமீபத்தில் நிறைவேற்றிய ஜெரூசலம் நகரிலுள்ள பள்ளிவாயல்களில் அதான் சொல்வதற்குத் தடைவிதிக்கும் சட்டத்தை அர்தூகான் அங்கு கண்டித்தார்.

பலஸ்தீன் குழந்தைகளை இஸ்ரேல் துஷ்பிரயோகம் செய்வது நிறுத்தப்பட வேண்டும்

அவுஸ்திரேலிய பாராளுமன்றத்தின் 20 வீதமாக அங்கத்தவர்கள் இஸ்ரேலிய இராணுவம் பலஸ்தீன் குழந்தைகள் தொடர்பில் நடந்துகொள்ளும் விதம் முற்றாக நிறுத்தப்பட வேண்டும் என வலியுறுத்தியுள்ளனர்.

51 பாராளுமன்ற உறுப்பினர்கள் ஒப்பமிட்ட அறிக்கை யொன்று கடந்த 29 ஆம் திகதி வெளியிடப்பட்டது. அதில் உலகிலேயே சிறுவர்களை இராணுவ நீதிமன்றத்தில் நிறுத்தும் ஒரே நாடு இஸ்ரேல் எனவும், வருடாந்தம் 700 பலஸ்தீனச் சிறுவர்கள் இஸ்ரேலிய இராணுவத்தினரால் கைது செய்யப்படுவதாகவும் சுட்டிக் காட்டப்பட்டுள்ளது.

திட்டமிட்டு, நிறுவனமயப்பட்ட வகையிலும் பரந்துபட்ட வகையிலும் 11 வயதுக்கும் குறைவான பலஸ்தீனச் சிறுவர்கள் பலர் இஸ்ரேலிய இராணுவத்தினரால் தடுத்து வைக்கப் பட்டுள்ளனர். 75 வீதமான சிறுவர்கள் உடல் ரீதியான சித்திரவதைகளை அனுபவிக்கின்றனர். இது உடனடியாக நிறுத்தப்பட வேண்டும் என அவ்வறிக்கை மேலும் தெரிவிக்கின்றது.

குவைத் பாராளுமன்றத் தேர்தலில் இஸ்லாமியக் கட்சிகள் வெற்றி

குவைத்தில் சமீபத்தில் நடைபெற்ற பாராளுமன்ற (மஜ்லிஸுல் உம்மா) தேர்தலில் இஸ்லாமிய கட்சிகளை உள்ளடக்கிய எதிர்க்கட்சியினர் வெற்றி பெற்றுள்ளனர். சுமார் 50 வீதத்திற்கும் அதிகமான ஆசனங்களை எதிர்க்கட்சியினர் கைப்பற்றியுள்ளனர். 26 ஆம் திகதி இடம் பெற்ற பொதுத் தேர்தலில் 24 ஆசனங்களை எதிர்க்கட்சி கைப்பற்றியுள்ளது.

முன்னைய பாராளுமன்றங்களைப் போலல்லாது, இம்முறை எதிர்க்கட்சிகளின் பலம் அதிகரித்துள்ளதை தேர்தல் முடிவுகள் காட்டுகின்றன. இது அரச ஆதரவு அமைச்சர்களுக்கு பலத்த அடியாகும் என்று தெரிவிக்கப்படுகின்றது. பலர் மீண்டும் பாராளுமன்றத்திற்கு தெரிவுசெய்யப்படவில்லை.

ஸபா அல் ஹாஷிம் எனும் ஒரேயொரு பெண்மணி பாராளுமன்ற ஆசனத்தைக் கைப்பற்றியுள்ளார். இத்தேர்தலில் [illegible] பெண்கள் களமிறங்கியமை [illegible] தக்கது. 52 வயதான ஸபா, கடந்த பாராளுமன்றக் காலத்தில் பதவி விலகியமை குறிப்பிடத்தக்கது.

ஊழல் குற்றச்சாட்டு குறித்து முன்னாள் பிரதமர் ஷெய்க் ஜாபிர் முபாரக் அஸ்ஸபாவை விசாரணை செய்வதற்கு குவைத் பாராளுமன்றம் மறுப்புத் தெரிவித்ததை அடுத்து பல அங்கத்தவர்கள் பதவி விலகினர். அவர்களுள் ஸபாவும் ஒருவர். கடந்த தேர்தலில் 70 வீதமான வாக்குகள் பதிவாகியுள்ளன.

2006 இல் இருந்து 6 முறை பாராளுமன்றம் அமீரினால் கலைக்கப்பட்ட நிலையிலேயே 2016 நவம்பர் தேர்தல் [illegible]

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

இஸ்ரேலின் தீ அரசியலில் கருகிப்போனது எது?

• ஸியாப் முஹம்மத்

உலக அரசியலின் மையமாக மத்திய கிழக்கு எப்போதுமே எரிந்து கொண்டு வருவதை முழு உலகுமே அவதானித்து வருகின்றது. இறுதி இஸ்லாமியத் தூதை சுமந்து வந்த நபி முஹம்மத் (ஸல்) அவர்களுக்கும் அன்னவர்களைத் துயர்ந்தவர்கள் மீதும் தொடுக்கப்பட்ட போர் இன்று முழு அரபுப் பிராந்தியத்தையும் எரிக்கும் அளவுக்கு உக்கிரம் பெற்று எரிந்துகொண்டிருக்கிறது. இது இந்தியா, இலங்கை, பர்மா என ஆசியாவில் துவங்கி, ஆஸ்திரேலியா, ஆப்ரிக்கா, ஐரோப்பா, அமெரிக்கா என கொஞ்சம் கொஞ்சமாக விரிவாக்கம் பெற்று வருவதை நிலைமைகளை அவதானிக்கும் எவரும் இலகுவில் காண்பர்.

மத்திய கிழக்கு தொடர்ந்தும் உக்கிரமாக எரிந்துகொண்டிருக்கும் பின்னணியில், இஸ்லாமிய உலகின் முதன்மையாகத் தீர்க்கப்பட வேண்டிய தலையாய பிரச்சினையாக பலஸ்தீன விவகாரமே இருந்து வருகின்றது. பலஸ்தீனப் பிரச்சினை தீர்க்கப்பட்டு முடிவு காணப்படுமாக இருந்தால் முஸ்லிம்களது பிரச்சினைகள் முழுமையாகத் தீர்க்கப்பட்டுவிடும் என அரசியல் நிபுணர்களும் சர்வதேச இஸ்லாமிய அறிஞர்களும் கூறுவர்.

முஸ்லிம்களின் முதலாவது கிப்லா, யாத்திரை செய்யத்தகு மூன்றாவது புனிதஸ்தலமான மஸ்ஜிதுல் அக்ஸா இன்று ஆக்கிரமிக்கப்பட்டுள்ளது. அதனோடு இணைத்து பலஸ்தீன பூமியும் ஆக்கிரமிக்கப்பட்ட நிலமாகக் காட்சி தருகிறது. பலஸ்தீனப் பூமியை நம்மிடமிருந்து பிடுங்கி விடுவதானது நமது அகீதாவிலிருந்து ஒரு பகுதியைப் பிடுங்கிக் கொள்வதற்கு ஒப்பானது என்று நமது அறிஞர்கள் விளங்கப்படுத்துவர். இதனால்தான் பலஸ்தீனப் போராட்டம் வெறும் நிலத்துக்கான போராட்டமாக அன்றி நமது அகீதாவுக்கான போராட்டமாகவே கொள்ளப்பட்டு இஸ்லாமிய உலகின் முதன்மை விவகாரமாகப் பார்க்கப்படுகிறது.

பலஸ்தீனப் பிரச்சினையை வெறும் காணிப் பிரச்சினையாகக் கடந்துபோக விட்டுவிடாது இஸ்லாமிய உலகில் தீர்க்கப்பட வேண்டிய முதன்மைப் பிரச்சினையாகக் காட்டுவதில் சர்வதேச இஸ்லாமிய இயக்கம் கூடிய சிரத்தை எடுத்தது. ஆக்கிரமிக்கப்பட்ட பலஸ்தீன பூமி பூரணமாக ஓர் அங்குலம் கூட விட்டுக் கொடுக்கப்படாமல் மீட்கப்பட வேண்டும் என்ற கருத்தைத் தொடர்ந்தும் வலியுறுத்தி வருகின்றது.

பலஸ்தீன பூமியை ஆக்கிரமித்து அங்கு குடியேறியிருக்கும் ஆக்கிரமிப்பு யூதர்கள் ஒவ்வொருவருமே இராணுவப் பயிற்சி பெற்றவர்களாக இருக்கும் நிலையில், அவர்கள் ஒவ்வொருவரும் கொல்லப்படுவதில் அநியாயம் காண முடியாது என்ற கோணத்திலேயே பலஸ்தீனிய எதிர்ப்புப் போராட்டம் குறித்த தனது நிலைப்பாட்டில் இஸ்லாமிய இயக்கம் இருந்து வருகிறது. அவ்வகையிலேயே ஹமாஸ் உள்ளிட்ட பலஸ்தீன விடுதலைப் போராட்டக் குழுக்கள் நிகழ்த்தி வந்த 'ஷஹாதத்' தாக்குதல்களையும் இஸ்லாமிய அறிஞர்கள் சரி காண்கின்றனர்.

இத்தனை அறிமுகமும் எதற்கெனில், கடந்த வாரங்களில் ஆக்கிரமிக்கப்பட்ட பலஸ்தீன பூமியில் -குறிப்பாக இஸ்ரேலிய ஹைபா நகரம் உள்ளிட்ட பல பாகங்களில் பற்றியெரிந்த இஸ்ரேல் குறித்த நமது நிலைப்பாடு எவ்வாறு அமைதல் வேண்டும் என முக்கியமாக சமூக வலைத்தளங்களில் எழுந்த வாதப் பிரதிவாதங்களினடியாக என்பதேயாகும்.

பலஸ்தீனை ஆக்கிரமித்துள்ள யூதர்கள் அனைவரும் நமது எதிரிகள் என்ற வகையில் அவர்களுக்கு ஏற்பட்டுள்ள இழப்புக்கள் நாம் மகிழ்ச்சி கொள்ளத் தக்கவையே என்ற வகையில் ஒரு சாரார் கருத்துக்களை பகிர்ந்து வந்தனர். இவர்களில் மூன்றில் ஒரு பிரிவினர் முஸ்லிம்கள் அல்லாதவர்கள் என சில கருத்துக் கணிப்புக்கள் வெளியாகியும் இருந்தன. சிலர் ஒரு படி முன் சென்று இது இஸ்ரேலுக்கு அல்லாஹ்விடமிருந்து கிடைத்த தண்டனை என்ற கருத்தையும் சொல்லியிருந்தமை அவதானிக்கக் கூடியதாக இருந்தது.

இஸ்லாமிய உலகின் புகழ் பூத்த அறிஞர் கலாநிதி அலி கரதாகி, தனது ட்விட்டர் பதிவில் 'தீ என்பது அல்லாஹ்வின் படைகளில் ஒன்று. அது அறியாத காலம் முதல் கியாம நாள் வரைக்கும் அநியாயக்கார சமூகங்களை வதம் செய்யும். ''உமது இரட்சகனின் படையை அவனைத் தவிர வேறெவரும் அறிய மாட்டார்கள்'' எனத் தெரிவித்திருந்தார்.

அடுத்து இந்நிகழ்வுகள் மனிதாபிமானப் பார்வையுடன் நோக்க வேண்டிய நிகழ்வுகள் என்று வர்ணித்தோரும் பெருமளவு உளர். இது குறித்து இஸ்லாமிய அறிஞர்கள் பலரும் மௌனம் காத்திருந்தனர். அல்லது மறைமுகமான செய்திகளையே வழங்கியிருந்தனர். மனிதனது உளவியல் தனக்கு எதிரான ஒன்றுக்கு சேதம் நிகழும் போது அதனை பொசிடிவ்வான உவகைத் தன்மையுடன் நோக்கும் தன்மை வாய்ந்தது. எனவே இந்த உணர்ச்சிபூர்வமான விடயத்தில் கருத்துக்களை முழுமையாக வெளியிடாது மௌனம் காத்திருக்க முடியும் என அனுமானிக்க முடிகிறது.

குறிப்பாக இந்நிகழ்வுகளை துருக்கியின் அர்துகான் அரசாங்கம் அணுகிய விதம் மூலம் அர்துகானைச் சாடுவதற்கு அவரது அரசியலை எதிர்ப்போர் பயன்படுத்தியதையும் அவதானிக்க முடிந்தது. அர்துகானின் அரசியலை அவரது ஆதரவாளர்கள் கூட முற்று முழுதாக விமர்சனங்களுக்கு அப்பாற்பட்டதாக நியாயப்படுத்தாத நிலையில், அவரை எதிர்ப்பவர்கள் விமர்சனம் என்ற பெயரில் அர்துகானை சாடுவதற்கு முயன்றமை மிகுந்த பாரபட்சம் நிரம்பியது.

மக்கா காலத்திலும் மதீனா காலத்திலும் தூதரது அவர்களது ஸீராவில் ஏராளம் உதாரணங்கள் நபி(ஸல்) அன்னவர்கள் இஸ்லாத்தை எதிர்த்தவர்களோடு எவ்வாறு நடந்து கொண்டார்கள் என்பதைக் காட்டி விரவிக் காணப்படுவதைக் காணலாம்.

தினந்தோறும் தன் மீது குப்பை கொட்டிய பெண்மணியின் உதாரணமும் தான் உதவிக்கு சுமைகளை சுமந்து சென்ற மூதாட்டியுடன் அவரது ஏசும் வார்த்தைகளுக்கு மத்தியிலும் இறுதி வரைக்கும் கனிவுடன் உரையாடிச் சென்றமை எல்லாமே நபிகளாரையொட்டி நமது மூலாதாரங்கள் தரும் செய்திகள்.

யூதனது ஜனாஸாவுக்கு எழுந்து நின்றமை, யூதர்களோடு ஒப்பந்தம் செய்து ஒன்றிணைந்த வாழ்வுக்காக இறுதி வரைக்கும் முயற்சி செய்து முன்னுதாரணமாக விளங்கியமை, மரணிக்கும் காலப் பகுதியிலும் யூதன் ஒருத்தனிடம் தனது கேடயத்தை அடகு வைத்து கொடுக்கல்-வாங்கல் செய்தமை என இன்னும் நீண்ட முன்னுதாரண பட்டியலை நமது மூலாதாரங்கள் தம்மிடத்தே வைத்திருப்பதை நாம் இலகுவாகக் காணலாம்.

அர்துகான் முதல் நமது அயல் வீட்டு உறவுகள் வரைக்கும் நமது கொடுக்கல்-வாங்கல்களில், பிணைந்து பழகுவதில் ஒரே ஒரு நிகழ்வு அல்லது ஒரே ஒரு ஒப்பந்தம், ஒரே ஒரு சரத்து, ஒரே ஒரு தத்துவம் மட்டுமே தாக்கம் செலுத்துவதில்லை. ஒன்றுடன் ஒன்று பின்னிப் பிணைந்த சர்வதேச உறவுகள், ஒப்பந்தங்கள், அரசியல்-இராஜதந்திரம், பொருளாதார இலாப-நட்டங்கள் என இன்னுமுள்ள அனைத்துக் காரணிகளுடனும் குறித்த சந்தர்ப்ப சூழலும் இணைந்துதான் முடிவுகளும் நகர்வுகளும் தீர்மானிக்கப்படும்.

'யூதர்கள் ஆக்கிரமிப்பாளர்கள்' என்ற ஒரே ஒரு அம்சம் மட்டுமே அர்துகானை இஸ்ரேலிய காட்டுத் தீ அனர்த்தத்தின்போது எந்த நகர்வை எடுப்பது என்ற முடிவெடுப்பதில் தங்கியிருக்கச் செய்திராது. அது குறைந்த பட்சம் ஒன்பது தசாப்தங்கள் பின்சென்று முஸ்தபா கமால் பாஷா என்ற துருக்கியின் முதலாவது மத எதிர்ப்புத் தலைமை வரைக்கும் செல்லும் என்பது மிகத் தெளிவு.

அக்காலத்திலிருந்து செய்து கொள்ளப்பட்ட உடன்படிக்கைகள், நிழல் அரசுகளின் ஊடுருவல்கள் என அனைத்துமே அர்துகானின் இன்றைய நிகழ்ச்சி நிரல்களில் தாக்கம் செலுத்தும் என்பது அரசியலின் அரிவரி அறியாதோருக்கும் கூட புரியும்படியான அம்சமே ஆகும்.

இந்நிலையில் ஒரு சகோதரர் கூறியது போன்று, சினிமா ஹராம் என்று சொல்வோரெல்லாம், அர்துகான் மட்டும் சினிமா ஹீரோ பாணியில் அதிரடி வெற்றிகளைக் குவிக்க வேண்டும் என்று எண்ணுவதெல்லாம் எங்ஙணமும் புத்திக்குட்பட்டதல்ல.

கட்டுரையைத் துவங்கியது முதலே இது அர்துகானது அரசியல் குறித்த கட்டுரையாகவோ அல்லது ஒரு ஃபத்வாக் கட்டுரையாகவோ ஆகிவிடக் கூடாது என்பதில் கூடிய சிரத்தை எடுக்கிறேன்.

இஸ்ரேலில் காட்டுத் தீ ஆரம்பித்த கடந்த (நவம்பர்) 23, புதன் காலை முதல் இஸ்ரேல் பொதுவான உதவிக் கோரிக்கைகளை இத்தாலி, சைப்ரஸ், துருக்கி, கிரீஸ் ஆகிய நாடுகளிடம் விடுத்திருந்தது. இந்நாடுகளோடு மேல திகமாக இன்னும் பல நாடுகளும் தீயணைப்பு நடவடிக்கைகளில் இணைந்து கொண்டன. கூறத் தக்கது என்னவெனில் பலஸ்தீனமும் இவ்வுதவிப் பணிகளில் இணைந்திருந்தது.

பிராந்தியத்தில் பல இஸ்ரேலின் அரபு நட்பு நாடுகளில் சிலதின் கருத்துக்கள் இதன் போது சியோனிஸத்துக்கு பிரார்த்திப்பதைப் பிரதிபலித்திருந்தன. இது அவர்களது அறிவு வறுமையைக் காட்டுகின்றது. அது அரசியல் இஸ்லாத்தை எதிர்க்கும் அரபு ஆட்சியாளர்களில் குறிப்பிட்ட ஒரு சாரார்ன் கருத்தாகும்.

இத்தகையோர் தான் பலஸ்தீனப் பிரச்சினையை வெறும் நிலப் பிரச்சினையாயாக கடந்த காலங்களில் பேசியோராவர். இத்தகைய இன்னொரு பிரிவினரே இந்த அவல சந்தர்ப்பத்தை மனிதநேயப் பார்வையுடன் நோக்குவதையும் ஏதோ யூத ஏஜண்டுகளின் வேலை போன்று பார்த்தவர்களாவர்.

எதிரிக்கும் மன்னிப்பையும் மனித நேயத்தையும் போதிக்கும்படி வழிகாட்டும் இஸ்லாத்திடமிருந்து மத்திமமான வழிகாட்டலையே பெறமுடியும். அது இஸ்ரேலுக்குப் பிரார்த்திப்பது போன்ற அறிவு காய்ந்து சருகாகிப் போன நிலைப்பாடாகவோ அல்லது ஒரு மனித அவலத்தில் மகிழ்ந்து பேருவகை கொள்ளுகின்ற இருவிதமான தீவிரப் போக்குகளை விட்டும் தவிர்ந்து தான் இருக்கும்.

இறுதி முடிவு எப்போதும் சத்தியத்துக்கானதாகத்தான் இருக்கும். அதனை அல்லாஹ்வே கூறுகிறான்: 'மேலும் குற்றமிழைத்தோர் வெறுத்த போதிலும், அல்லாஹ் பொய்யை அழித்து ஹக்கை-உண்மையை - நிலை நாட்டவே (நாடுகிறான்)' (அல் அன்ஃபால்) 'நமக்குப் பிரயோசமானதன்பால் கவனம் செலுத்தி, அல்லாஹ்வின்பால் உதவி தேடுவதும், நாம் இவ்வாறு செய்ததாலே இவ்வாறெல்லாம் நிகழ்ந்தது என்று கூறக்கூடாது என்பதும், அல்லாஹ்வின் சக்தியாலே அவன் நாடியது நடந்தது என்றே முஸ்லிம்கள் கூற வேண்டுமென்பதும்' நபிமொழிகள் தரும் உபதேசங்களாகும்.

ஒரு விவகாரத்திலே ஒருவரது நிலைப்பாடுகள், அவரது கல்வித் தரம், வாசிப்பு என்பவற்றுக்கு ஏற்ப மாற்றமடைவது என்பதே அவர் சிந்தனை சுதந்திரம் பெற்றவர்,

(பக்.14)

இஸ்ரவேல் எரிகின்றது ஏன்?

• ஏ.எம். றியாஸ் அகமட்

அந்நிய ஆக்கிரமிக்கும் தாவரங்களை (Invasiv Allien Species Plants) களை முன்வைத்து ஒரு பார்வை.

1) மண்ணின் மைந்தர்களான செவ்விந்தியர்களிடமிருந்து அவர்களின் நிலத்தை வாங்க அமெரிக்க அரசு கடிதம் எழுதிய போது அக்கடிதத்திற்குப் பதிலளித்து 'சீத்தல்' என்ற சிவப்பிந்தியத் தலைவன் எழுதிய கடிதம் வரலாற்றில் தனி இடத்தைப் பெற்றுள்ளது. ஆற்றாமையுடனும் இலக்கியச் சுவையுடனும் எழுதப்பட்ட அக்கடிதத்தின் ஒரு பகுதி வருமாறு:

பூமிக்கு என்ன நேரிடுகிறதோ அதே தான் பூமியின் மைந்தர்களுக்கும் நேரும். மனிதன் பூமியை எச்சில்படுத்தினால் அவன் தன் மேலேயே எச்சில் படுத்திக் கொள்கிறான். பூமி மனிதனுக்கு சொந்தமானதல்ல. மனிதன்தான் பூமிக்குச் சொந்தமானவன். இது எங்களுக்குத் தெரியும். இங்கு எல்லாமே ஒன்றுடன் ஒன்று பின்னிப் பிணைந்திருக்கின்றது.

பூமிக்கு என்ன நேர்கிறதோ அதேதான் மண்ணின் மைந்தர்களுக்கும் நேரிடுகிறது. உயிர்களின் வாழ்க்கை வலையை மனிதன் பின்னவில்லை. அதில் அவன் ஒரு இழை தான். எனவே அந்த வலைக்கு என்ன செய்கிறானோ அதை மனிதன் தனக்குத் தான் செய்து கொள்கிறான். வெள்ளை மனிதனும் பொது விதிகளிலிருந்து தப்ப முடியாது. முடிவாக நாம் அனைவரும் சகோதரர்களே என்பதைக் காணத்தான் போகிறோம். நம் அனைவரின் கடவுளும் ஒன்றே என்பது நாமறிந்த உண்மை. வெள்ளையருக்கும் ஒரு நாள் தொடரத்தான் போகின்றது. எங்கள் நிலத்தை சொந்தம் கொண்டாட எண்ணுகின்றீர்கள். ஆனால் அது முடியாது. கடவுள் எல்லா மனிதருக்கும் பொதுவானவர். அவரது அன்பு, செவ்விந்தியர்களுக்கும், ,வெள்ளையர்களுக்கும் பொதுவானது. இந்த பூமி கடவுளுக்கு விலை மதிப்பற்றது இதற்கு தீங்கு இழைத்தால் கடவுளை அவமதித்தது போலாகும்.

வெள்ளையர் காலமும் ஒரு நாள் முடியும். ஒரு வேளை மற்றைய மனித இனங்களை விட அது வேகமாகவும் இருக்கலாம். நீங்கள் உங்கள் படுக்கையை அசுத்தப்படுத்தினால் அந்தக் கழிவுப் பொருட்களாலேயே மூச்சுத் திணறி முடிவடைவீர்கள். எந்த கடவுள் உங்களை இந்நிலத்திற்கு கொண்டு வந்து [illegible] காரணத்திற்காக சிவப்பிந்தியரை வெற்றி கொள்ள வைத்திருக்கிறாரோ அவரது சக்தியாலேயே நீங்கள் அழிவீர்கள். எங்களை வெற்றி கொண்டு வாழ்வதை விதியெனக் கொண்டால் அந்த விதி எங்களுக்கு புரியாத புதிராகவே இருக்கின்றது.

ஏனெனில் எங்கள் எருமை மாடுகள் ஏன் கொலையுற வேண்டும்? ஏன் கானகக் குதிரைகளை நீங்கள் அடிமை கொள்ள வேண்டும்? காடுகள் எங்கும் உங்கள் மக்கள். மூலை முகடுகள் எல்லாம் தொலை பேசிக் கம்பிகள். புதர்கள் மறைந்துவிட்டன. இனிய வாழ்க்கை முடிந்து வாழ்க்கைப் போராட்டம் ஆரம்பமாகிவிட்டது.

2) நோம் எரிந்து கொண்டிருக்கும் போது பிடில் வாசித்த நீரோ மன்னன் அல்ல.எனக்கு கொள்கைகள்தான் பிரச்சினையன்றி யூதர்கள் அல்ல.

3) அந்நிய ஆக்கிரமிக்கும் இனங்கள் என்றால் என்ன என்ற வரைவிலக்கணத்தை சற்று உற்று நோக்கினால், இந்தக் கட்டுரைக்குள் நுழைவதற்கு இலகுவாக இருக்கும். அந்நிய ஆக்கிரமிக்கும் இனங்கள் [illegible] இனங்களாக அல்லது பூர்வீகமல்லாத இனங்களாக காணப்பட வேண்டும். அதாவது பிறிதொரு நாடு (புவியியல் எல்லைகளுக்கு அப்பால்), பிரதேசம் அல்லது சூழல் தொகுதியில் இருந்து ஒரு புதிய நாடு, பிரதேசம் அல்லது சூழல் தொகுதிக்கு கொண்டுவரப்பட்ட இனங்கள். இவ்வாறான ஆக்கிரமிக்கும் இனங்கள் இயற்கை உயிர்பல்வகைமைக்கு அச்சுறுத்தலாக அமைய வேண்டும். (இதனால் இவைகளைகள், பீடைகளில் இருந்து வேறுபடுகின்றன).

இவை பல்வேறு அழிவுகளை உண்டாக்குகின்றன. பூர்வீக இனங்களை நேரடியாக பாவித்தலும் அழித்தலும், வளங்களை பயன்படுத்துவதற்கான கடுமையான போட்டி, பூர்வீக இனங்களுடன் கலப்பில் ஈடுபடல், குறிப்பிட்ட சில நோய்களுக்கான காவிகளாக செயற்படல், இலகுவாக அறிமுகப்படுத்தப்பட்ட நாடுகளின் காலநிலைக்கு பாதிக்கப்படல் (உதாரணம் இலங்கையில் அறிமுகப்படுத்தப்பட்ட மானா அல்லது இலுக்கு புல் இலகுவில் தீப்பற்றக் கூடியது) போன்றன அவைகளில் சில வாகும்.

4) ஏன் இஸ்ரேல் எரிகிறது என்பதை ஒரு சூழலியலாளன் என்ற வகையில் எனது கருத்துக்களை தெரிவிக்கலாம் என்று நினைக்கின்றேன். மத்திய கிழக்கு பாலைவன நாடான இஸ்ரவேல், அந்த நாட்டுக்கு சற்றும் சம்பந்தம் இல்லாத பைன் மரங்களால் நிரம்பி வழிகிறது. இது ஐரோப்பிய நாட்டு மரமாகும். இந்த மரம், 1930 களில் யூதர்களின் தேசிய நிதியம் என்னும் அரச சார்பற்ற அமைப்பினால், நிலத்தை மீள மாற்றுகிறோம் என்ற அடிப்படையில் பலஸ்தீனிய நிலங்களில் அறிமுகப்படுத்தப்பட்டது. 1935 ஆம் ஆண்டு முடிவில், இந்த அமைப்பு, 17 இலட்சம் மரங்களை 1750 ஏக்கர் நிலப் பரப்பில் நாட்டியிருந்தது மிக முக்கியமான ஒன்றாகும்.

50 வருட காலத்திற்கும் மேலாக இந்த அமைப்பு 26 கோடி மரங்களை பிரச்சினைக்குரிய பலஸ்தீன பூமிகளில் நாட்டியுள்ளது. இது பலஸ்தீனர்களின் கிராமங்களின் அழிவுகளையும், இனச் சுத்திகரிப்பின் அடையாளத்தையும், அவர்களின் வரலாற்றையும் அழிப்பதற்கு செய்யப்பட்ட ஒரு திட்டமிடப்பட்ட முயற்சியாகும்.

கடந்த காலங்கில் யூதேநி மானது பலஸ்தீனர்களின், கடந்தகால நாகரிகத்துடன் உள்ள மத்திய கிழக்கு நாட்டுக்குரிய தன்மையை அழித்து, தாங்கள் கைப்பற்றிய பலஸ்தீன நிலத்திலிருந்த இஸ்ரவேலுக்கு ஒரு மத்திய கிழக்கு தன்மையை கொடுக்க முனைந்தது. பலஸ்தீனத்தை ஐரோப்பா போல நிலக்காட்சிகளில் மாற்ற நினைத்தது. இதன் காரணமாக

(பக்.13)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பலஸ்தீன் நிலமும் சமூகமும்

அறபு மூலம் : கலாநிதி முஹ்ஸின் முஹம்மது ஸாலிஹ்

தமிழில்: யூ.கே.றமீஸ் (விரிவுரையாளர், பாதிஹ்.)

கலாநிதி முஹ்ஸின் முஹம்மது ஸாலிஹ், பலஸ்தீன் வரலாறு மற்றும் அரசியல் துறையில் நிபுணத்துவம் பெற்றவர். பலஸ்தீனின் பண்டைய வரலாறு முதல் சமகால அரசியல் போக்கு வரை நீண்டு செல்லும் அவரது ஆய்வுகள் நான்கு பாகங்களைக் கொண்ட நூல்களாக வெளிவந்துள்ளன. 2002 இல் மலேசியாவின் கோலாலம்பூரில் மீள்பதிப்பைக் கண்ட அவரது நூலின் முதற் பாகம் இங்கு தமிழில் பெயர்க்கப்படுகின்றது.

குத்ஸ் நகரமும் இன்றைய நிலையும்

1948ம் ஆண்டு மேற்கு குத்ஸை யூதர்கள் ஆக்கிரமித்தார்கள். இது குத்ஸ் நகரத்தின் 84.1% ஆகும். குத்ஸ் நகரின் 85% நிலம் அரபிகளுக்கு உரியதாகும். அங்கு கட்டிடங்களை கட்டி, யூத குடியிருப்புகளை உருவாக்கி யூத மயப்படுத்தி விட்டார்கள். உதாரணமாக ''லப்தா'' என்ற கிராமத்தின் மீதுதான் யூத பாராளுமன்றமான ''கனீஸத்'' உம் பல அமைச்சுகளும் உருவாக்கப் பட்டுள்ளன. ஐனு காரிம், தியர் யாசீன், மாலிஹா போன்ற கிராமங்களும் இப்படி யூத மயப்படுத்தப்பட்டன. (ரபீக் நஷ்தா - தாரீகு மதீனதில் குத்ஸ் - 94. ஹென்ரி கெட்ன் பலஸ்தீன் பீ ழவ்கில் ஹக்கி வல் அத்ல் - 45)

1967ம் ஆண்டு கிழக்கு குத்ஸையும் யூதர்கள் ஆக்கிரமித்துக் கொண்டார்கள். இது மேற்குக் கரையின் (west Bank) ஒரு பகுதியாகும். மஸ்ஜிதுல் அக்ஸா இங்குதான் அமைந்துள்ளது. அன்றிலிருந்து கிழக்கு குத்ஸ் 27/06/1967ம் ஆண்டு கிழக்கு, மேற்கு குத்ஸ் பிரதேசங்கள் இணைக்கப்பட்டு இஸ்ரேலிய நிர்வாகத்தின் கீழ் கொண்டுவரப்பட்டன. 30/07/1980 ம் ஆண்டு இஸ்ரேலின் தலைநகராக குத்ஸ் நகரம் பிரகடனப்படுத்தப்பட்டது. (மௌஸூஅது பலஸ்தீனிய்யா, பாகம், 3, பக்கம் 522)

சியோனிச யூத சிந்தனை குத்ஸ் நகரை நோக்கிய மையப்படுத்தப் பட்டிருந்தது இதற்கான நியாயங்களாக மத, வரலாற்று காரணங்கள் முன்வைக்கப்பட்டிருந்தன. யூத நாடு உருவாக்கப்படுவதற்கு 50 வருடங்களுக்கு முன்னர் உலக சியோனிச அமைப்பின் ஸ்தாபகரான தியோடர் ஹேர்ஸல் ''நாம் குத்ஸ் நகரத்தை பெற்றுக் கொண்டு, நானும் உயிருடனும் சக்தியுடனும் இருந்தால் யூதர்கள் புனிதமாக கருதாத அனைத்தையும் நீக்கிவிடுவேன். பல நூற்றாண்டுகால அடையாள சின்னங்களை எரித்துவிடுவேன்'' என்று கூறினார். (தாரீகு மதீனதில் குத்ஸ்,பக்கம்-157)

இஸ்ரேலின் ஸ்தாபகரும் அதன் முதல் பிரதமருமான டேவிட் பென் கூரியன் ''குத்ஸ் நகரமற்ற இஸ்ரவேல் அரத்தமற்றது. ஹைகல் இல்லாத குத்ஸ் நகரமும் அர்த்தமற்றது'' என்றார்.

இஸ்ரேல் குத்ஸ் நகரின் எல்லையை படிப்படியாக விசாலிக்கிறது. மேற்கு கரையின் பகுதிகளை இதனுடன் இணைக்கிறது. திட்டமிட்டு பரந்த அடிப்படையில் குத்ஸில் சனத்தொகை கட்டமைப்பில் மாற்றத்தை ஏற்படுத்தி யூத மயப்படுத்துவதே இதன் நோக்கமாகும். 1967ம் ஆண்டு 6.5km² ஐ பரப்பாக கொண்டிருந்த கிழக்கு குத்ஸ் 1990ம் ஆண்டு 123km² ஆக மாறி விட்டது. பெரிய குத்ஸ் (Great Jeruselem) என்ற திட்டம் 840km² ஐ இலக்காக கொண்டதாகும். அதாவது மேற்கு கரையின் 15% ஐ குத்ஸுடன் இணைப்பதற்கான திட்டத்தை முன்னெடுத்துள்ளார்கள்.

சியோனிச இஸ்ரேல் கிழக்கு குத்ஸ் நகரை மையப்படுத்தி ஒரு வளையத்தை (Circle) ஏற்படுத்தி அதில் 11 குடியிருப்புகளை ஏற்படுத்தியுள்ளார்கள். இது பைதுல் மக்திஸ் உள்ளடங்கியுள்ள பழைய நகரை சூழ அமைந்துள்ளது. சுமாராக 190000 யூதர்கள் இங்கு வசிக்கின்றார்கள்.

இன்னொரு வளையத்தையும் ஏற்படுத்தியுள்ளார்கள். அது முதலாவதைவிட விசாலமானது. 17 யூத குடியிருப்புகள் அதில் உள்ளடங்கியுள்ளது. இது குத்ஸ் நகரை சூழ அமைந்துள்ளது. அரபு, இஸ்லாமிய சூழலிலிருந்து குத்ஸ் நகரை பிரித்துவிடுவதுதான் இதன் நோக்கமாகும். அத்தோடு இது குத்ஸ் நகரையோ, குத்ஸின் கிழக்கு பிரதேசத்தையோ பலஸ்தீனர்களுக்கு மீள ஒப்படைக்க முடியாது என்பதற்கான வலுவான காரணத்தை உருவாக்கும் முயற்சியுமாகும்.

2000ம் ஆண்டு மேற்கொள்ளப்பட்ட கணிப்பீட்டின்படி கிட்டத்தட்ட 650000 பேர் குத்ஸ் நகரம், அதன் மேற்கு, கிழக்கு பிரதேசங்களில் வாழ்கின்றனர். அவர்களில் 450000 பேர் யூதர்கள். 2 லட்சம் பேர் அரபிகள். (அனைத்து அரபிகளும் கிழக்கு பக்கமாகவே வாழ்கின்றார்கள்). குத்ஸ் நகரின் 86% மான நிலத்தை சியோனிச இஸ்ரேல் ஆக்கிரமித்துள்ளது. பலஸ்தீன அரபிகளிடம் 4% நிலம்தான் காணப்படுகிறது. 10% மான நிலங்களில் பலஸ்தீன அரபிகள் நுழைவது தடுக்கப்பட்டுள்ளது. சியோனிச திட்டங்கள் (Project) அங்கு நடைமுறைப்படுத்தப்பட்டுக்கொண்டு இருக்கிறது. 1918களில் பிரித்தானியா பலஸ்தீனை ஆக்கிரமித்தபோது குத்ஸ் நகரின் 90% நிலம் பலஸ்தீன அரபிகளிடமே காணப்பட்டது.

அடுத்து மஸ்ஜிதுல் அக்ஸா அமைந்துள்ள பிரதேசம் மிகவுமே பாதிப்புக்குள்ளான இடமாகும். 20ம் நூற்றாண்டின் 20களிலிருந்து இப்பிரதேசம் குறித்து யூதர்கள் தூண்டப்பட்டுள்ளார்கள். ஆரம்பத்தில் யூதர்கள் தமது கவனத்தை மஸ்ஜித் அக்ஸாவின் மேற்குப்புற சுவரான **''ஹாஇதுல் புராக்''** மீது குவித்திருந்தார்கள். இதனை ஆக்கிரமிப்பு யூதர்கள் ''ஹாஇதுல் மப்கி'' என்று அழைக்கிறார்கள். அந்த நிலமும், சுவரும் பிரதேசமும் வக்ப் செய்யப்பட்ட இடங்களாகும். இதனை உறுதிப்படுத்த பல ஆவணங்கள் காணப்படுகின்றன.

யூதர்கள் கிழக்கு குத்ஸை ஆக்கிரமித்ததன் பின்னர் மேற்குப்புற குடியிருப்பை அழித்துவிட்டார்கள். இது ஹாஇதுல் புராக்கிட்கு எதிர்ப்புரமாக அமைந்துள்ள குடியிருப்பாகும். இங்கு 135 வீடுகளும் இரு பள்ளிவாசல்களும் தமது வணக்கங்களை செய்வதற்காக இதனை இடித்து தரைமட்டமாக்கி விட்டார்கள். இந்த முழு ஊரும் வக்ப் சொத்தாகும்.

மஸ்ஜிதல் அக்ஸாவின் கீழாலும் அதனை சூழவும் அகழ்வாராய்ச்சி என்ற பெயரில் பல குழிகளை தோண்டியுள்ளார்கள். குறிப்பாக மஸ்ஜிதின் தெற்கு, மேற்கு பக்கமாக தமது கவனத்தை செலுத்தியுள்ளார்கள். அவர்களது சுலைமான் ஹைகல் இருந்தது என்பதை நிரூபிப்பதற்கான இவ்வகழ்வு மேற்கொள்ளப்பட்ட போதிலும் அங்கு கண்டெடுக்கப்பட்ட அத்தனை சிலாசனங்களும் அக்ஸாவின் முக்கியத்துவத்தையும் அதன் இஸ்லாமிய தனித்துவத்தையும் இன்னும் இன்னும் பலப்படுத்தியது. 1967முதல் 2000 வரையான காலப்பகுயில் 10 கட்டங்களில் அகழ்வுகள் மேற்கொள்ளப்பட்டன. இவ்வேலைகள் மிக முனைப்புடனும் மிக இரகசியமாகவும் மேற்கொள்ளப்படுகின்றன. ஆர்ப்பாட்டம் இன்றி அடுத்தவர்கள் விளங்க முடியாத அமைப்பில் இதனை அவர்கள் முன்னெடுக்கின்றார்கள்.

(தொடரும்)

கொழும்பில் பலஸ்தீன் ஒருமைப்பாட்டு தின நிகழ்வு



பலஸ்தீன மக்களுக்கான சர்வதேச ஒருமைப்பாட்டு தினம் என்றால் என்ன?

1977ஆம் ஆண்டு ஐ.நா. பொதுச்சபை பலஸ்தீன மக்களுக்கான சர்வதேச ஒருமைப்பாட்டுத் தினத்தை ஆண்டு தோறும் நவம்பர் மாதம் 29ஆம் திகதி அனுஷ்டிக்குமாறு அழைப்புவிடுத்தது. 1947ஆம் ஆண்டு மேற்குறிப்பிட்ட அதே தினத்தில் பலஸ்தீனின் பிரிவினைக்கான பிரேரணையையும் பொதுச்சபை ஏற்றங்கீகரித்திருந்தது.

பலஸ்தீனிய மண்: அது என்னவாக இருந்தது? அங்கு யார் இருந்தனர்? எவ்வளவு காலத்திற்கு?

பலஸ்தீன் குறித்து அறிந்துகொள்ள வேண்டுமெனில் கி.மு. 3000 ஆண் டுகள் பின்னோக்கிச் செல்ல வேண்டும். 1900 ஆண்டுகள் (கி.மு.3000-1100) கானானியர் என்றழைக்கப்பட்ட மக்களின் பூமியாக அது திகழ்ந்தது. அக்காலப்பகுதி முழுவதும், அதாவது கி.மு. 1200 இல் பிலிஸ்டைன்ஸ் மக்கள் அதனைக் கைப்பற்றும் வரை, எகிப்தியர்கள் அங்கு நிலைகொண்டிருந்தனர். பிலிஸ்டைன்ஸ் அதனைக் கைப்பற்றிய பின்னர் அவர்கள் இஸ்ரவேலர்களாலும் (கி.மு.1000-923: 77 ஆண்டுகள்), பீனீசியர்களாலும் (கி.மு. 923-700), அசிரியர்களாலும் (கி.மு.700-612),பாபிலோனியர்களாலும் (கி.மு.539 வரை), பாரசீகர்களாலும் (கி.மு.332 வரை), மசிடோனியர்களாலும் (கி.மு.63 வரை), உரோமானியர்களாலும் (கி.பி.636 வரை), அரேபியர்களாலும் (636 -1200: 564 ஆண்டுகள்), சிலுவைப் போராளிகளாலும் (1099- 1291), அய்யூபியர்களாலும் (1187- 1253), மம்லூக்கியராலும் (1253-1516), உஸ் மானிய ஆட்சியாளர்களாலும் (400 ஆண் டுகள்) பின்தொடரப்பட்டனர். இவை 1917ஆம் ஆண்டு (பல்போர் பிரகடன ஆண்டு) வரை தொடர்ந்து இடம் பெற்றவை. பின்னர் அது 1919 இல் பிரித்தானிய மேலாதிக்கத்தினால் கைப்பற்றப் பட்டு, 1922 இல் உத்தியோகபூர்வமாக வலுவுக்கு வந்தது.

பலஸ்தீனிய மண்ணில் குடியமர்ந்த பல இராச்சியங்களுள் ஒன்றுதான் யூத இராச்சியம் என்பது மேற்படி காலவரிசையிலிருந்து புலனாகின்றது. 7ஆம் நூற்றாண்டின் இறுதியில்தான் அந்நாடு மிகப் பிரதானமாக ஓர் அரபு (மற்றும் இஸ்லாமிய) நாடாக உருவாகியது. அரபு (முஸ்லிம் மற்றும் கிறிஸ்தவ) மற்றும் யூத கலாசாரங்களின் மிகையானதொரு கலப்புடன் அது 1516இல் உஸ்மானியப் பேரரசின் ஒரு மாகாணமாக உருவெடுத்தது. பலஸ்தீன் என்றழைக்கப்பட்ட பூமி தமக்கே உரித்தானதென இந்த மக்கள் தம்மனவில் நம்பினர்.

இறுதியில் பேரரசுகள் காணாமற் போன போது, இறைமையானது அந்த மண்ணைச் சேர்ந்த பழங்குடி மக்களின் இயற்கையான குறிக்கோளாக உருமாறியது. விட்டுச்செல்வதற்குக் காலனித்துவம் மறுத்த இடங்களிலெல்லாம், சுதந்திரம் அடையப்பெறும் வரை, உள்நாட்டு விடுதலைப் போர்கள் நடந்தேறின. ஆக்கிரமித்துக்கொண்ட சமூகத்தினர் பிரயோகித்த முரட்டுத்தன மான பலப்பிரயோகத்தினூடாக மக்கள் நிர்மூலமாக்கப்பட்ட அல்லது இனச்சுத்திகரிப்புச் செய்யப்பட்ட இடங்களில், அவ்விதம் ஆக்கிரமித்த சமூகங்கள் புதிய தேச அரசுகளாக உருவாகின.

முதலாம் உலகப்போரில் [illegible] வெற்றியீட்டிய நேச நாடுகள் மத்திய கிழக்கில் 1916ஆம் ஆண்டு கைச் சாத்திட்ட துரோகத்தனமான சைக்ஸ்-பிகொட் (Sykes & Picot) உடன்படிக்கைக் கமைய, பிரான்ஸ் மற்றும் பிரித்தானியாவுக்கு இடைப்பட்ட பிராந்தியத்தைப் பிரித்துக்கொண்டன. நாடுகளின் ஒன்றியத்தின் கீழ் (League of Nations) செயற்பட்ட பணிப்பாணை கொண்ட இந்த அரசுகள் தமது பணிப்பாணைக் காலப்பகுதி முடிவுக்கு வந்ததும், ஈற்றில் தேசியம்சார் அரசுகளாக பரிணாமம் அடைந்தன. நிச்சயமாக பலஸ்தீனைத் தவிர.

பலஸ்தீன பிரச்சினை குறித்து இந்தத் தலைவர்கள் என்ன கூறுகின்றனர்?

இந்திய சுதந்திர இயக்கத்தின் தலைவர் மகாத்மா காந்தி: ''எவ்வாறு ஆங்கிலேயர்களுக்கு இங்கிலாந்து உரித்தாக உள்ளதோ அல்லது பிரான்ஸியர்களுக்கு பிரான்ஸ் உரித்தாக உள்ளதோ, அவ்வாறே அரேபியர்களுக்கு உரித்தானது பலஸ்தீன். [illegible] பிழையானதும் மனிதப்பிமானமற்றதுமான செயற்பாடாகும். [illegible] அது புகழுடன் திகழும் அரேபியர்களைக் குறைப்பதற்காக இழைக்கப்படும் மனுக்குலத்துக்கு எதிரான குற்றமொன்றாகவே அமையும். அதன் காரணமாக, தமது தேசமாக இருக்கின்றபடியினால் யூதர்களிடமிருந்து பகுதியளவிலோ அல்லது முழுமையாகவோ பலஸ்தீன் மீட்கப்பட முடியும்''.

தென்னாபிரிக்காவில் நிறவெறிக் கெதிராகப் போராடிய கதாநாயகன் நெல்சன் மண்டேலா: ''பலஸ்தீன மக்களுக்கான சர்வதேச ஒருமைப்பாட்டுத் தினத்தை அங்குரார்ப்பணம் செய்வதற்கான பிரேரணையை 1977ஆம் ஆண்டு ஐக்கிய நாடுகள் சபை நிறைவேற்றிய போது, பலஸ்தீனில் அநீதியும் தொகையான மனித உரிமை மீறல்களும் நிகழ்ந்தேறி வந்தன எனும் அங்கீகாரத்தை உறுதிப்படுத்துவதாக அது அமைந்தது. அதே காலப்பகுதியில் நிறவெறிக்கு எதிராக வலுவான நிலைப்பாடொன்றை ஐக்கிய நாடுகள் சபை எடுத்திருந்ததோடு, இந்த அநீதிசார் முறைமையை முடிவுக்குக் கொண்டுவருவதற்கு உதவக்கூடிய சர்வதேச ரீதியிலானதோர் ஒருமித்த உணர்வு பல வருடங்களாகக் கட்டியெழுப்பப் பட்டது. என்றாலும், பலஸ்தீன மக்களுக்கான சுதந்திரம் இல்லாத நிலையிலும், கிழக்குத் தீமோர், சூடான் மற்றும் உலகின் ஏனைய பாகங்களில் காணப்படும் முரண்பாடுகள் தீர்க்கப்படாத நிலையிலும் எமக்குக் கிடைத்த சுதந்திரம் முழுமையான ஒன்றல்ல என்பதையும் நாம் நன்கறிவோம்''.

ஐ.நா. செயலாளர் நாயகம் பான் கீ மூன்: ''இன்று 136 நாடுகள் பலஸ்தீன அரசை அங்கீகரித்துள்ளதோடு ஐக்கிய நாடுகள் சபையில் அந்த உறுப்பு நாடுகளின் கொடிகளுக்குப் பக்கத்தில் பலஸ்தீன் அரசின் கொடியும் பறக்கின்றது. எவ்வாறாயினும், இந்த முன்னேற்றங்கள் காஸாவிலுள்ள குழந்தைகளினாலோ அல்லது நப்லுஸ், ஹெப்ரோன் மற்றும் கிழக்கு ஜெரூசலம் போன்ற பகுதிகளில் வசிக்கும் மக்களினாலோ உணரப்படுவதில்லை. இஸ்ரேல் மற்றும் பலஸ்தீன் மக்களுக்கு உகந்ததாகக் கருதப்படும் நீதியான சமாதானத்தைக் கொண்டுவருவதற்கான எமது அர்ப்பணிப்பை நாம் மீளவும் ஒருமுறை உறுதிப்படுத்திக் கொள்கின்றோம்''.

அல்-நக்பா அல்லது பேரழிவு

1800களின் பிற்பகுதியில் ''அரசியல் சியோனிஸம்'' என்றழைக்கப்பட்ட, கொள்கை வெறிபிடித்த சிறு இயக்கமொன்று ஐரோப்பாவில் உருவானது. உலகின் எதோவொரு பகுதியில் யூத அரசொன்றை நிறுவுவதே அதன் குறிக்கோளாக இருந்தது. புராதனமானதும் நீண்ட காலமாகக் குடியிருக்கப்பட்டு வந்ததுமான பலஸ்தீன மண்ணே இவ்வாறு நிறுவப்படுகின்ற அரசின் அமைவிடமாக இருக்க வேண்டுமென அதன் தலைவர்கள் தீர்மானத்திற்கு வந்தனர்.

சியோனிஸத்தின் தந்தை எனக் கருதப்படும் தியாடோர் ஹெர்ஸலின் (Theodor Herzel) தலைமைத்துவத்தின் கீழ் 1897இல் சுவிட்ஸர்லாந்தின் பேசெல் நகரில் முதலாவது சியோனிச காங்கிரஸ் கூட்டப்பட்டது. பலஸ்தீன மண்ணில் யூத மக்களுக்கான இல்லமொன்றை உருவாக்குவதே அதன் நோக்கமாக அமைந்தது. **(பக்: 12)**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஓநாய்களின் இரைக்காக தனித்தியங்கும் ஆடுகள்

• ஸலாஹுத்தீன்

இலங்கை முஸ்லிம் சமூகம், தான் எதிர்நோக்கியுள்ள பல்வேறு பிரச்சினைகளில் இருந்தும் தன்னைச் சுதாகரித்துக் கொண்டு எழும்பத் துவங்கியிருக்கிறது. இந்நிலையில் முஸ்லிம் சமூகத்தை யார் வழிநடத்துவது என்பது கண்டறியப் படாமலேயே அது தனது கட்டுக்கோப்பில் தொடர்ந்தும் இயங்கி வருகின்றது.

இவ்வாறான ஒரு தான்தோன்றித் தனமான கட்டுக்கோப்பு தொடர்ந்தும் நிலைத்திருக்கப் போவதில்லை என்பதை சமூகத் தளத்தில் விரிந்து செல்கின்ற சிவில் செயற்பாடுகள் புலப்படுத்துகின்றன.

இலங்கை முஸ்லிம்களுக்கு கிடைக்க வேண்டிய உரிமைகளை பெற்றெடுப்பது, இழந்து போன உரிமைகளை மீளப் பெறுவது எனப் பல உரிமைப் போராட்டங்கள் இந்தச் சமூகத்துக்குள்ளால் வேண்டப்படுகின்றன. இவற்றை அகிம்சை வழியில் பெற்றெடுப்பது இலங்கைச் சமூகத்தில் சாத்தியமில்லை என்று கருதியதனால் தான் தமிழ்ச் சமூகம் ஆயுதத்தை கையிலே தூக்கியது. ஆயதப் போராட்டத்தினால் தமது உரிமைகளை பூரணமாக வென்றெடுப்பது சாத்தியமாகா விட்டாலும், ஆயுதப் போராட்டத்துக்கு முந்திய அரசியலில் சாதித்ததை விட ஆயுதப் போராட்டத்துக்குப் பின்னரான சூழலில் தமிழ்ச் சமூகம் நிறையவே சாதித்து வருகிறது.

இலங்கை முஸ்லிம்களும் தமது உரிமைகளைப் பெறவும் தமது இருப்பை பலப்படுத்தவும் ஆயுதப் போராட்டத்தை ஒரு வழிமுறையாக எடுக்கக் கூடாது என்ற நோக்கில் முஸ்லிம்களுக்கென தனியான அரசியல் கட்சிகள் முஸ்லிம் அரங்கில் தோற்றுவிக்கப்பட்டன. சிங்கள தமிழ் அரசியல்வாதிகளில் சலுகைகளுக்காக தங்கி இருக்காது தமது உரிமைகளை வென்றெடுக்க தனியான கட்சி அவசியம் என்பது தான் தனிக்கட்சி அமைப்பதற்கான நியாயமாக கற்பிக்கப் பட்டது.

தனிக்கட்சியின் ஸ்தாபகர் அஷ்ரபுடைய மரணத்துக்கு முன்னர் இதனால் ஏதாவது சாதிக்கப்பட்டிருந்தால், அதைத் தவிர்த்து, முப்பது வருடகால முஸ்லிம் அரசியலில் முஸ்லிம் தனிக் கட்சிகள் முஸ்லிம்களின் உரிமைகள் தொடர்பில் சாதித்தவை என்ன என்பதை இரண்டு மில்லியன் மக்கள் இன்னமும் தேடிக் கொண்டிருக்கிறார்கள்.

முஸ்லிம்களின் உரிமைப் போராட்டத்துக்கான வழிமுறையாகத் தேர்ந்தெடுக்கப்பட்ட முஸ்லிம் தனிக்கட்சியான சிறிலங்கா முஸ்லிம் காங்கிரஸ், இன்று ஐந்தாறு கூறுகளாக பிளவுபட்டுள்ளது. இதிலொரு பிரிவு தாய்க் கட்சிக்கு சவாலாக தோற்றம் பெறும் அளவுக்கு பெருத்துப் போயிருக்கிறது.

இப்படிப் பிரிந்து செயற்படுகின்ற எந்தத் தனிக்கட்சியும் தனது சமூகத்துக்கான உரிமைப் போராட்டத்தைத் தொடரவில்லை என்ற வகையில் தற்போது இவை சமூகத்திலே இந்தியாவின் ஆயிரம் ரூபா நோட்டுகளாகி வருகின்றன. பாடசாலைச் சீருடைத் துணியில் முஸ்லிம் மாணவியருக்கு மேலதிகமாகத் தேவைப்படும் அளவுத் துணியை ஜேவிபி பாராளுமன்ற உறுப்பினர் விஜித ஹேரத் குரல் கொடுத்துப் பெற்றுத் தரும் அளவுக்கு முஸ்லிம் அரசியல் முஸ்லிம் சமூகத்தில் இருந்து தூரப் போயிருக்கிறது.

பிரதான தனிக்கட்சியிலிருந்து பிரிந்து போய் கட்சிகள் அமைத்தவர்களும் தத்தமது பதவிப் போராட்டத்தினால் பிரிந்து சென்றார்களேயல்லாமல் தனிக்கட்சி முஸ்லிம்களின் உரிமைக்காகப் போராடவில்லை என்ற காரணத்துக்காக பிரிந்து செல்லவில்லை. பிரிந்து சென்று கட்சி அமைத்தவர்களும் கூட வெவ்வேறு தரப்பிலிருந்து முஸ்லிம்களின் உரிமைப் போராட்டத்தை வலுப்படுத்துவதற்கான பலமுனைப் பலப்படுத்தல் வேலையை செய்யவுமில்லை.

அடுத்த கட்சியின் பலவீனங்களில் தம்மை பலப்படுத்திக் கொள்கின்ற நாறடிக்கும் சாக்கடை அரசியலில்தான் உரிமைகளை வென்றெடுக்க வேண்டிய முஸ்லிம் அரசியல் முங்கிக் கொண்டிருக்கின்றது. இந்த நிலையில் முஸ்லிம் அரசியல் முஸ்லிம் சமூகத்துக்கு எதனையும் பெற்றுத் தரும் என்ற நம்பிக்கை முஸ்லிம் சமூகத்துக்கு இனியும் இருக்கப் போவதில்லை.

இவ்வாறானதொரு சூழலில் முஸ்லிம் சமூகத்திலிருந்து தோற்றம் பெற்ற சிவில் அமைப்புக்களின் பணி முக்கியத்துவம் பெறுகிறது. முஸ்லிம் சமூகத்தைக் கைவிட்ட முஸ்லிம் கட்சி அரசியலை முஸ்லிம் சமூகம் கைவிட்டதன் பிற்பாடு சிவில் அமைப்புக்களின் பணி மீது தான் மக்களது அபிலாஷைகள் கட்டமைக்கப்பட்டிருக்கின்றன.

இதனால் இந்த சிவில் அமைப்புக்கள் முஸ்லிம்களது பிரச்சினைகளை உரிய இடங்களுக்கு நகர்த்தி தீர்வுகளைப் பெற்றுத் தரக் கூடிய அளவுக்கு தம்மைப் பலப்படுத்திக் கொள்ள வேண்டியிருக்கிறது. அடுத்ததாக தீர்வுகளை நோக்கி நகர்வதற்கான செயற்பாட்டுப் படிமுறைகளிலும் கவனம் செலுத்த வேண்டியிருக்கிறது.

முஸ்லிம் சமூகத்துக்குள்ளால் சிவில் அமைப்புக்கள் ஏராளமாக உள்ளன. களத்திலே இயங்குகின்ற ஒவ்வொரு சிவில் நிறுவனத்துக்கும் அவை முன்னுரிமைப்படுத்திச் செயற்படுகின்ற விடயங்கள் காணப்படுகின்றன. இவற்றுக்கப்பால் அனைத்துச் சிவில் நிறுவனங்களும் முன்னெடுக்க வேண்டிய சமூகத்துக்குப் பொதுவான சில விடயங்களும் காணப்படுகின்றன.

சமூகத்துக்குப் பொதுவான விடயங்களை முன்னெடுக்கின்ற போது சமூகத்துக்காக தனித்தனியாக உழைக்கின்ற அமைப்புக்கள் பொது வேலைத்திட்டம் ஒன்றின் பால் தம்மை பிணைத்துக் கொள்ள வேண்டிய தேவை ஏற்படுகிறது. ஒட்டு மொத்த சிவில் அமைப்புக்களும் அல்லது அவற்றில் பெரும்பாலானவை ஒரே குரலில் தமது தேவைகளை முன் வைக்கின்றபோது தான் அதற்குரிய வலிமை அதிகம். அல்லாத போது முன்னெடுக்கப்படும் விடயம் சமூகத்தின் நன்மைக்கானதாக இருந்தாலும் அது குறித்த போராட்டம் குறித்த அமைப்பின் சொந்த நலனை முற்படுத்தியதாகவே அமைய முடியும். தொடராக இந்த தனித்துச் செயற்படும் குழுக்களே சமூகத்தின் எதிர்ச் சக்திகளால் பயன்படுத்தப் படவும் முடியும்.

இலங்கையில் அண்மையில் நடைபெற்ற இவ்வகையான இரண்டு செயற்பாடுகள் எமக்கு இதனை உணர்த்துகின்றன. யாழ்ப்பாணப் பல்கலைக்கழக மாணவர்கள் இருவர் அண்மையில் பொலிஸாரின் துப்பாக்கிச் சூட்டுக்கு இலக்காகி கொல்லப்பட்டனர். இதனையொட்டி மாணவர்களின் படுகொலைக்கு நீதியான தீர்வு கிட்டும் வரை பல்கலைக்கழக செயற்பாடுகளை தவிர்க்கும் போராட்டமொன்று ஆரம்பித்து வைக்கப்பட்டது. யாழ்ப்பாணப் பல்கலைக்கழக மாணவர் ஒன்றியத்தின் பிரதிநிதிகள் இந்த இயங்கா மறுப்புப் போராட்டத்துக்கு அழைப்பு விடுத்திருந்தனர். இந்த அறிவிப்புக்கு பல்கலைக்கழக நிர்வாகமோ மாணவர் அமைப்புகளின் பிரதிநிதிகளோ எந்தவித மாற்று அபிப்பிராயங்களையோ மறுப்புக்களையோ தெரிவிக்கவில்லை.

இந்த நிலையில் நீதி கிடைக்கும் வரையான இந்த இயங்கா மறுப்புப் நடவடிக்கை வெற்றி அடையும் என்றே பொது வெளியில் எதிர்பார்க்கப்பட்டது. ஆனாலும் எதிர்பார்ப்புக்கேற்ற மாதிரி இந்த செயற்பாட்டு முடக்கம் நடவடிக்கை வெற்றியளிக்கவில்லை.

குறித்த விடயத்தில் ஒத்த கருத்தில் இருந்த பல்கலைக்கழக நிர்வாகம், ஏனைய மாணவர் அமைப்புக்கள் போன்றவற்றை இணைத்ததாக இந்த இயங்கா மறுப்புப் போராட்டம் அமையாமையே இதற்கு பிரதான காரணியாக அமைந்தது. அத்தோடு நாட்டிலுள்ள ஏனைய பல்கலைக்கழக மாணவர் அமைப்புக்களும் இந்தப் போராட்டத்துக்கு ஒத்துழைப்பு வழங்கத் தயாராக இருந்த போதும் இந்த ஒத்துழைப்பை பெறாமல் தனியாகச் செயற்பட்டதனால் இந்தப் போராட்டத்தை அனைத்துப் பல்கலைக்கழக மாணவர்களினதும் போராட்டமாக மாற்றி, நீதி கிடைக்கும் செயற்பாட்டை தர்க்கம் மிக்கதாக மாற்றும் வாய்ப்பு அற்றுப் போனது. பின்னர் இந்தப் போராட்டம் அரசியல் கட்சிகளால் காவு கொள்ளப்பட்டு, நீதி வேண்டும் போராட்டம் திசைமாறியது.

இரண்டாவது செயற்பாடு, ஜீஎஸ்பி ப்ளஸ் வரிச்சலுகைக்காக முஸ்லிம் தனியார் சட்டத்தை மாற்றக் கூடாது என்கின்ற SLTJ இன் ஆர்ப்பாட்டம். ஜீஎஸ்பி ப்ளஸ் வரிச்சலுகைக்காக முஸ்லிம் தனியார் சட்டம் மாற்றப்படக் கூடாது என்பதில் முஸ்லிம் சமூகத்தில் யாருக்குமே மாற்றுக் கருத்து இருக்கவில்லை. முஸ்லிம் சமூகத்தின் தலைமைகளான தேசிய சூறா சபை, அகில இலங்கை ஜம்மியதுல் உலமா, சிறிலங்கா முஸ்லிம் கவுன்ஸில் போன்றவை உட்பட பல தனிநபர்களும் அரசியல்வாதிகளும் ஆரம்பம் முதலே இது தொடர்பில் உரிய இடங்களுக்கு இது தொடர்பிலான அழுத்தங்களைக் கொடுத்து வந்தனர்.

இது தொடர்பில் பலரும் பல்வேறு மட்டங்களில் முயற்சிகள் எடுத்துவரும் நிலையிலேயே சிறி லங்கா தவ்ஹீத் ஜமாஅத் தன்னிச்சையாக ஆர்ப்பாட்டத்தில் இறங்கியது. களத்திலே தொழிற்பட்ட ஏனையோருடனும் இணைந்து இந்த ஆர்ப்பாட்டம் நடத்தப்பட்டிருந்தால் அது முறையானதொரு ஆர்ப்பாட்டமாக அமைந்திருக்கும். அதிலும் ஆர்ப்பாட்டத்துக்கு முன்னரான பல்வேறு சிவில் செயற்பாடுகள் தொடர்பிலும் கலந்துரையாடப்பட்டு செயற்பாடுகள் முன்னெடுக்கப்பட்டிருக்கும்.

ஒரே கருத்திலுள்ள ஏனைய சிவில் அமைப்புக்களையும் இணைத்து இந்தப் போராட்டம் அமையாமையால் இந்த ஆர்ப்பாட்டம் எதிர்மறையான பதிவுகளையே ஏற்படுத்தியது. ஆர்ப்பாட்டத்தை முன்னின்று நடத்தியவர்கள் முஸ்லிம் விரோத ஆட்சி நடந்த காலத்தில் அவர்களுக்கு முஸ்லிம்களைக் காட்டிக் கொடுத்தவர்கள் என்ற விடயம் அமைச்சரவைப் பேச்சாளர் ராஜித சேனாரத்னவினால் போட்டுடைக்கப்பட்ட பின்னர்தான், இந்த ஆர்ப்பாட்டமும் ஓநாய்களால் காவு கொள்ளப்பட்டிருப்பது சமூகத்துக்கு தெரிய வந்தது.

இதே குழியில் பகலிலும் விழுந்து விடக் கூடாது என்ற வகையில் சமூகத்தில் தனித்தியங்கும் ஆடுகளையிட்டு சமூகம் விழிப்பாக இருக்க வேண்டும். இன்றைய பன்மைத்துவ உலகில் தனித்தியங்கி பாரிய மாற்றங்களை ஏற்படுத்த முனைவது சாத்தியமாகாது என்பது விதியாகவே வரையப்பட்டுள்ளது. இந்த வகையில் யாரும் பொது விவகாரம் ஒன்றில் தனித்தியங்குவது என்பது அதன் பின்னால் இருந்து இயக்குகின்ற மறைகரங்களின் நன்மைக்கானதாகவே என்ற சந்தேகத்தை வளர்ப்பதாக அமையும்.

முஸ்லிம் சமூகத்தின் பொதுவெளியில் பரந்துபட்டுச் செயற்படுகின்ற சிவில் அமைப்புக்கள் சமூகத்தின் பொது விவகாரங்களில் தங்களுக்கிடையிலான கலந்துரையாடல்களை ஆரம்பித்ததாகத் தெரியவில்லை. இப்படியான உரையாடல்கள் நடக்கின்றபோதுதான் அவற்றை அடைந்து கொள்வதற்கான வழிமுறைகள் தொடர்பிலும் உடன்பாடுகள் எட்டப்பட முடியும்.

நீதியமைச்சரின் நீதி

நீதி மற்றும் புத்த சமய விவகார அமைச்சர் விஜயதாச ராஜபக்ஷ அவர்கள் தனது அண்மைய பாராளுமன்ற உரையில் ஐஸிஸ் அமைப்பில் இலங்கை முஸ்லிம்கள் 32 பேர் இணைந்துள்ளனர் என்ற பழைய செய்தியை மீண்டும் கூறியதோடு மத்ரஸாக்கள் என்ற சொல்லைப் பயன்படுத் தாமல் சர்வதேச பாடசாலைகள் என்ற சொல்லைப் பயன்படுத்தி எமது முக்கியமான மத்ரஸாக்கள் அமைந்திருக்கும் ஊர்களின் பெயர்களைக் குறிப்பிட்டு, அங்கு காணப்படும் சர்வதேசப் பாடசாலைகளில் வெளிநாட்டிலிருந்து வருகை தந்துள்ளவர்கள் தீவிரவாதக் கருத்துக்களை பரப்பி மாணவர்களை மூளைச் சலவை செய்கின்றனர் என்றும் கூறியமை முஸ்லிம்கள் மத்தியில் அதிருப்தியை ஏற்படுத்தியுள்ளது.

மேலும் இலங்கையில் இருக்கும் இஸ்லாமிய அமைப்புக்கள் நான்கின் பெயரைக் குறிப்பிட்டு அவற்றிற்கிடையில் பிரச்சினைப்பட்டு கொலைகள் இடம்பெறும் நிலைமைகள் உருவாகியுள்ளதாகவும் குறிப்பிட்டிருந்தார்.

நீதியமைச்சரினால் நிகழ்த்தப்பட்ட பாராளுமன்ற உரையை அவதானிக்கும்போது முஸ்லிம்களை இலக்கு வைத்து மேற்கொள்ளப்பட்டதொரு உரை போன்றுதான் அது விளங்குகின்றது. நீதியமைச்சரின் உரைக்கு பிரதான முஸ்லிம் சிவில் அமைப்புக்கள் பலவும் விரைவாக நடவடிக்கையெடுத்து கண்டனம் தெரிவித்திருந்தமை பாராட்டத்தக்க விடயமாகும்.

மூன்று வருடங்களுக்கு முன்னர் கூறப்பட்டு முஸ்லிம் அமைப்புக்களால் பதில் வழங்கப்பட்டதொரு விடயத்தை மீண்டும் இங்கு ஏன் அவர் குறிப்பிட வேண்டும் என கேள்வியெழுப்பி அவருக்கான பதில் முஸ்லிம் சிவில் அமைப்புக்களால் வழங்கப்பட்டிருந்தது.

நீதியமைச்சரின் உரை தொடர்பாக அமைச்சரவைப் பேச்சாளர் ராஜித சேனா ரத்னவிடம் கேட்கப்பட்டபோது குறித்த கருத்து நீதி அமைச்சரின் தனிப்பட்ட கருத்து என்றும் அரசாங்கத்தின் நிலைப்பாடு அல்ல என்றும் அவர் தெளிவாகக் குறிப்பிட்டு நீதியமைச்சரினால் கூறப்பட்ட தகவல்களும் உண்மைத் தகவல் அல்ல எனவும் அவர் குறிப்பிட்டார்.

நீதியமைச்சர் மேற்கூறிப்பிட்ட பாராளுமன்ற உரையை நிகழ்த்திய காலகட்டமானது நாட்டில் மீண்டும் முஸ்லிம்-சிங்கள இனங்களுக்கிடையிலான அசாதாரண நிலைமையொன்று காணப்பட்ட காலகட்டமாகும். அவ்வாறானதொரு சந்தர்ப்பத்தில் ஒரு பழைய தகவலை அவர் நீதியமைச்சராக இருந்து கொண்டு தெரிவித்தமையானது எரியும் நெருப்பில் எண்ணெய் வார்ப்பது போன்றதொரு செயற்பாடாக இருந்ததோடு, நீதியமைச்சரின் குறித்த உரையில் கூறப்பட்ட விடயங்களை சுட்டிக்காட்டி, நாட்டின் சில பகுதிகளில் முஸ்லிம்களுக்கெதிரான பெனர்களும் தொங்கவிடப்பட்டிருந்தமை இங்கு குறிப்பிடத்தக்கது.

இதற்கு முன்னரும் நீதியமைச்சர் 'அவன்ட்காட்' விவகாரத்தில் முன்னாள் பாதுகாப்புச் செயலாளருக்கு சார்பாக கருத்துத் தெரிவித்திருந்தமை மற்றும் 'அவன்காட்' நிறுவனத்தில் முக்கியமானதொரு [illegible] ரிக்காவில் சுற்றுலா சென்ற படங்கள் வெளியாகியமை என்பன இவர் கோத்தபாய ராஜபக்ஷவின் ஆதரவாளரா என்ற பலத்த சந்தேகத்தை எழுப்பியிருந்தது.

எனவே நீதியமைச்சரின் குறித்த கருத்தானது முன்னாள் அரசின் பாதுகாப்புச் செயலாளரின் தேவைக்கேற்ப குறித்த நேரத்தில் காணப்பட்ட அசாதாரண சூழலை மேலும் அதிகரிப்பதற்கு மேற்கொள்ளப் பட்ட ஒரு செயற்பாடா என்ற சந்தேகத்தை எமக்கு ஏற்படுத்துகின்றது.

லங்கா ஈ நியுஸ்

லங்கா ஈ நியுஸ் வெப்தளமானது கடந்த அரசாங்கத்தைக் கடுமையாக விமர்சித்து வந்தமையால், கடந்த அரசாங்க காலத்தில் தடைசெய்யப்பட்டிருந்த ஒரு வெப்தளமாகும். இவ்வெப்தளமானது ராஜபக்ஷ குடும்பத்தின் ஊழல் மற்றும் சட்ட விரோத செயற்பாடுகளை பகிரங்கப்படுத்திய முக்கியமானதொரு வெப்தளமாகும். அத்துடன் கடந்த ஆட்சி வீழ்வதற்கு [illegible] நல்லாட்சி அரசாங்கம் உருவாவதற்கும் இவ்வெப் தளமும் காரணமாய் அமைந்திருந்தது குறிப்பிடத்தக்கது.

அண்மையில் லங்கா ஈ நியுஸ் வெப் தளம் இரு நீதவான்கள் தொடர்பான முக்கியமான செய்திகளை கசியவிட்டிருந்தது. முதலாவது விடயம் நீதவான் ஒருவர் பேஸ்புக்கில் வெளியிடப்பட்டிருந்த விடயம் ஒன்றுடன் தொடர்பானது, மற்றையது மரண தண்டனைக் கைதியான துமிந்த சில்வாவை பெண் நீதவான் ஒருவர் சிறைச்சாலையில் சென்று சந்தித்தமை தொடர்பானது.

இந்த இரு நீதிபதிகள் தொடர்பான செய்திகளை தனது வெப்தளத்தில் பிரசுரித் தமை தொடர்பாக லங்கா ஈ நியுஸ் வெப் தளத்திற்கெதிராக நீதிபதிகளை விமர்சித்து நீதிமன்றத்தை அவமதித்து செய்திகளை வெளியிட்டதாகக் கூறி வெளிநாட்டில் வசித்து வரும் அதன் பிரதம ஆசிரியரை சர்வதேச பொலிஸாரின் உதவியைக் கொண்டு கைதுசெய்ய வேண்டுமென கம்பஹா நீதவான் நீதிமன்றத்தால் குறித்த செய்தியுடன் தொடர்பான நீதவானே கட்டளை பிறப் பித்திருந்தார்.

இந்தக் நீதிமன்ற கட்டளைக்குப் பின்னணியில் துமிந்த சில்வாவின் வழக் கறிஞர் ஹேமந்த வர்ண குலசூரியவும் நீதியமைச்சர் விஜயதாச ராஜபக்ஷவுமே உள்ளதாக பிரதியமைச்சர் ரஞ்சன் ராம நாயக்கா அவர்கள் பாராளுமன்றத்தில் தெரிவித்திருந்தார். அதே போல் அரசின் பல அமைச்சர்களும் குறித்த இந்த விடயத்திலும் நீதியமைச்சரின் இந்தப் போக்கை விரும்பவில்லை என்பதும் இங்கு குறிப்பிடத்தக்கது.

நீதியமைச்சரின் இவ்வாறான செயற்பாடுகளால் நல்லாட்சி அரசாங்கத்தின் நற்பெயருக்கு களங்கம் ஏற்படுகின்றது என்பதனாலும் நல்லாட்சி அரசின் மீதான சிறுபான்மை மக்களின் ஆதரவை எதிர்காலத்தில் இழக்கும் சந்தர்ப்பம் ஏற்படலாம் என்பதனாலும் அரசாங்கத்தின் முக்கியமான அமைச்சர்கள் தற்போது நீதியமைச்சர் தொடர்பாக எதிர்நிலைப்பாட்டில் உள்ளமையானது எதிர்காலத்தில் நீதியமைச்சரின் பதவி பறிபோவதற்கும் காரணமாக அமையலாம்.

-நுஸ்ரத் நிலாம்-

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சத்தியம் எங்கு இருந்தாலும் அதனை நாடி நிற்பவனே கொள்கைவாதி

• முஹம்மத் பகீஹுத்தீன்

கூட்டாக வாழும்போது கொண்ட கொள்கைக்காக சார்ந்திருக்கும் மனோ பலம் தேவை. இணைந்து பணியாற்றும்போது வித்தியாசமான கருத்துக்கள், வழிமுறைகள் தோன்றுவது தவிர்க்க முடியாதது. ஆனால் வேற்றுமைக்கு மத்தியில் ஒற்றுமை காண்பது கொள்கைக்காகப் போராடும் போராளியின் அழகிய நற்குணமாகும்.

நிலை தடுமாறும் தருணங்களில் தயங்காமல் தலைமைக்கே கட்டுப்படுவது கொள்கைவாதியின் அழகிய பண்பாகும். அவன் தன் கருத்தை இரண்டாம் தரமாகவே பார்ப்பான். வாழ்க்கை என்பது தனக்குரியது என்ற பார்வை அவனுக்கு இருக்காது. வாழ்வும் சாவும் இறைவனுக்கே என்று நாளாந்தம் ஐந்து தடவை மீட்டும் இறையடியான் சொந்தக் கருத்தை தூக்கிப் பிடிப்பதில்லை.

சத்தியம் எமது கொள்கை. நல்லவை எதுவானாலும் அதனை ஏற்பதும், முரண்பாடுகளின்போது புரிந்துணர்வோடு விட்டுக் கொடுப்பதும், கரைந்து போகாமல் கலந்து வாழ்வதும், ஆதிக்கம் செலுத்தாது சேர்ந்து வாழ்வதும் கொள்கைவாதியின் வழிமுறையாகும்.

உயர்ந்த ஒரு கொள்கைக்காக இணைந்து வாழும்போது கொள்கைக்காகவே எம்மை நாம் முழுமையாக அர்ப்பணிப்பதுதான் கொள்கை விசுவாசமாகும். அந்த கொள்கை விசுவாசம் கொண்டவர்கள் கூட்டாக இணைந்து செயற்படும் சமயத்தில் அதில் ஒரு படி மேலாகவே காணப்பட வேண்டும்.

கொள்கைப் பிடிப்புள்ளவன் தன் கருத்து எடுபட வேண்டும் என்பதற்காக அதனை முன்வைக்க மாட்டான். கொண்ட கொள்கை வாழ வேண்டும் என்பதே அவனது அவா. அன்பும் பண்பும் தான் அவன் வழிமுறையாக இருக்கும்.

தனது கருத்துக்கு அங்கீகாரம் வேண்டும் என்று நினைப்பவன் கருத்துக்காக வாதிடுவான். அங்கே கொள்கைக்காக என்ற நிலைப்பாடு மறைந்துவிடும். அதில் இறை திருப்தி நாடி நிற்பது போலியாகிவிடும். எனவேதான் அலி (ரழி) அவர்கள் ஒரு யுத்தத்தின்போது தன்மீது காரி உமிழ்ந்த எதிரியைக் கூட கொலை செய்யாமல் விட்டுவிட்டார்கள். அவன் துப்பியதன் காரணமாக ஆவேசம் வந்து கொலை செய்ததாக அமைந்தால் அது தூய்மையில்லாத கொள்கை பற்று என்பதே அதற்குக் காரணம்.

சத்தியம் எதிரியின் பக்கம் இருந்தால் கூட அதற்கு தலைசாய்ப்பவன்தான் கொள்கைவாதி. சத்தியம் எங்கு இருந்தாலும் அதனை நாடி நிற்பவன் கொள்கைவாதி.

சத்தியத்தை நேசிக்கும் கொள்கைப் பிடிப்புள்ள உழைப்பாளி இறைவனிடம் மாத்திரம்தான் கூலியை எதிர்பார்ப்பான். மனிதர்களின் நன்றி வார்த்தைகளுக்காக காத்திருக்க மாட்டான். அவன் பேசுவது, எழுதுவது, விமர்சிப்பது, எடுப்பது, கொடுப்பது அனைத்தும் தனக்காக அல்ல. தன்னைப் படைத்த ரப்புக்காகவே இருக்கும்.

அழியும் இவ்வுலகில் எது செய்தாலும் நாளை அதற்கான விசாரணை உண்டு என்று நம்பும் கொள்கைவாதி, தனது கருத்து சரியாக இருந்தாலும் அடுத்தவரின் கருத்து அதைவிட சரியாக இருக்கலாம் என்ற மனோ நிலையில்தான் அதனை வெளிப்படுத்துவான்.

ஒரு கொள்கையை அது சத்தியம் என்று ஏற்று வாழ்பவன் பச்சோந்தி மாதிரி வாழ மாட்டான். யாரையும் கோபிக்கக் கூடாது என்பதற்காக இருதரப்பிலும் நல்ல பெயர் வாங்க வேண்டும் என்ற புத்தி இருக்காது. இறைவனை திருப்திப்படுத்துவது மாத்திரமே அவனது இலக்காக அமையும்.

கொள்கை பற்றுள்ளவன் தனிநபர்களை விட தான் கொண்ட கொள்கையை, சிந்தனையை, தஃவாவைத்தான் உயர்ந்ததாக காண்பான். தனிநபர்கள் மரணித்து விடுவார்கள். சத்தியம் மரணிப்பதில்லை. அது வாழையடி வாழையாகத் தொடரும். நிலைத்து வாழும் ஒன்றுக்காக நிலையாமையை பற்றுவது அறிவுடமையாகாது.

கொள்கை விசுவாசம் இல்லாதோர் எப்படி இருப்பர்? அவர்கள் சுற்றியிருப்பவர்களிடம் சந்தேகங்களைக் கிளறிவிடுவார்கள். கூட்டத்தை விட்டுப் பிரிவதற்கான சில குற்றச்சாட்டுக்களை முன்வைத்து விடுவார்கள். அதுவே ஒதுங்கி வாழ்வதற்கும் காரணம் என ஓதுவார்கள். தான் சொல்வதுதான் சரி என்று அடம்பிடித்து நிற்பார்கள். நியாயங்களைத் தெளிவாக எடுத்துச் சொன்னாலும் ஏற்றுக் கொள்ளும் பக்குவம் அவர்களுக்கு இருக்காது. ஒரு கொள்கை விசுவாசி இந்த நோய் தொற்றாமல் எச்சரிக்கையாக இருக்க வேண்டும்.

கொள்கைக்காக இணைந்து வாழும் உழைப்பாளி பட்டம் பதவிகளுக்காக எதிர்பார்ப்பு வைக்க மாட்டான். அவனது ஒரே தாகம் தனது கொள்கை, சிந்தனை வாழ வேண்டுமே, தவிர தான் அதனால் வாழ வேண்டும் என்பதல்ல.

ஒரு கொள்கைவாதி சில நிலைப்பாடுகளில் தோன்றும் கருத்து வேறுபாடுகளை காரணமாக வைத்து தனது அணியை பிளவுபடுத்தவோ அல்லது அணியிலிருந்து வெளியேறவோ அல்லது அணிக்கு எதிராக சதி செய்யவோ அல்லது அணியை அவமானப்படுத்தும் காரியங்களில் இறங்கவோ அல்லது அணியை சார்ந்தவர்களை குறை கூறவோ ஒருபோதும் முனைய மாட்டான்.

உண்மையில் இது மிகக் கடிமான ஒரு கட்டம். இந்த இடத்தில்தான் கொள்கை விசுவாசம் அவனது ஆதார சுருதியாக செயற்பட வேண்டும். இல்லாவிட்டால் ஷைத்தானின் சூழ்ச்சிக்கு இரையாகலாம்.

இதனால்தான் இமாம் ஹஸனுல் பன்னா அவர்கள் கொள்கைக்கு விசுவாசமாக இருத்தல் என்றால் என்ன என்று விளக்கும்போது, 'நீ மனதார ஏற்றுக் கொண்டுள்ள சிந்தனைக்கு, கொள்கைக்கு மிகுந்த விசுவாசத்தோடு நடந்துகொள். ஏனைய கொள்கைகள் சித்தாந்தங்கள், தனிநபர்கள் கருத்துக்கள் பக்கம் சாய்ந்து விடாமல் கொள்கையில் தூய்மையோடு உறுதியாக இரு. காரணம் அது மிக உயர்ந்த கொள்கை. அனைத்தையும் மிகைத்து வாழும் கொள்கை. அத்தனை விடயங்களையும் பொதிந்த பரிபூரணமான கொள்கை. அது அல்லாஹ் உனக்கு அருளிய கொள்கை.''

ஆம், அதற்காக வாழும்போது அதன் பாதையில் இணைந்து செயற்படும்போது உனது கருத்துக்கள், உன்னைக் கவர்ந்தவர்களின் கருத்துக்களின் பின்னால் அள்ளுண்டு செல்வது கொள்கை விசுவாசத்திற்கு செய்யும் மோசடியாகும்.

சத்தியம் எமது கொள்கை. அது இறைவன் மனித குலத்திற்கு அருட்கொடையாக தந்த கொள்கை. மனித நேயத்தை வாழவைக்கும் கொள்கை. மக்கள் நலனை அடிப்படையாகக் கொண்ட கொள்கை. எனவே அதனை திருப்தியோடு ஏற்று அதற்காக இணைந்து பாடுபடும்போது யார் பக்கமும் சாய்ந்து விடலாகாது.

கொழுத்திவிடு சத்தியத் தீ கொழுந்து விட்டெரியட்டும். அதுவே நான் கொண்ட கொள்கை, அதில் அடைவேன் வெற்றி, அஞ்சேன் எவர்க்கும் என்று வாழத் துணிந்து விடு. இதில் யார் திருப்தியும் எனக்குத் தேவையில்லை என்றே உரத்துக் கூறு. வெற்றி நிச்சயம்.

கொழும்பில் பலஸ்தீன்... (10ம் பக்கத் தொடர்)

இக்காலகட்டத்தில் பலஸ்தீன சனத்தொகையில் சுமார் 96 சதவீதத்தினர் யூதர்களல்லாதோராகக் காணப்பட்டனர் (அடிப்படையில் முஸ்லிம்களாகவும் கிறிஸ்தவர்களாகவும் இருந்தனர்).

அடுத்தடுத்து வந்த தசாப்தங்களில் சியோனிசத் தலைவர்கள் பலஸ்தீனத்தைக் கைப்பற்றுவதற்கான தமது குறிக்கோளை நிறைவேற்றிக்கொள்ளும் வகையில் பல்வேறுபட்ட தந்திரோபாயங்களைப் பிரயோகித்தனர்.

''மக்களில்லாத நிலம், நிலமில்லாத மக்களுக்காக'' எனும் ஏமாற்றுக் கோஷங்களைப் புனைந்ததன் ஊடாக, பலஸ்தீன் நோக்கிய யூதர்களின் குடிவரவுகளைப் பகுதியளவில் ஊக்குவித்து வந்தனர். இருந்தபோதிலும், குறிப்பிட்ட அந்த மண்ணில் ஏலவே குடியிருப்புக்கள் அமையப்பெற்றிருந்ததோடு, அது உஸ்மானிய ஆட்சியின் கீழும் இருந்துள்ளது.

இச்செயன்முறையை ஆதரிப்பதற்கென பெரிய சக்திகளை நம்பவைத்தல்: மேலும் தங்களுடைய காரணங்களுக்காக உஸ்மானியர்கள், பிரித்தானியர்கள் மற்றும் அமெரிக்கர்கள் ஆகியோரை சியோனிசவாதிகள் அணுகினர். உஸ்மானியர்கள் அவர்களை நிராகரித்து விட்ட போதிலும், அமெரிக்கர்களும் பிரித்தானியர்களும் அவர்களை அங்கீகரித்தனர்.

அப்பாவி பலஸ்தீன் விவசாயிகளிடமிருந்து காணிகளைக் கொள்வனவு செய்தல்: இச்செயன்முறையானது ''நிலத்தை மீட்டெடுத்தல்'' என அழைக்கப்பட்டதோடு, றொத்சைல்ட்ஸ் (Roths childs) போன்ற செல்வந்த யூதக் குடும்பங்களினால் அதற்கான நிதியளிப்புக்கள் மேற்கொள்ளப்பட்டன.

பூர்வீக பலஸ்தீன் மக்களுக்கெதிராக வளர்ச்சியடைந்துவந்த வன்முறைகள் இஸ்ரேலை உருவாக்குவதை மையமாகக்கொண்டு 1947 - 49 இல் மேற்கொள்ளப்பட்ட இஸ்ரேலின் கொடூர பிரசாரத்தின் போது உச்சக்கட்டத்தை அடைந்தன. ஹகானா, ஏர்கான், லெஹி மற்றும் பல்மக் போன்ற ஐரோப்பிய யூத பயங்கரவாதக் குழுக்களால் பலஸ்தீனிய கிராமங்களில் 500 இற்கு மேற்பட்ட திடீர் சோதனைகள் முன்னெடுக்கப்பட்டன. இதன்போது நிகழ்ந்தேறிய எண்ணற்ற படுகொலைகளில் ஆயிரக்கணக்கான பலஸ்தீனியர்கள் கொல்லப்பட்டனர்.

1947ஆம் ஆண்டில் ஐக்கிய நாடுகளின் பிரிவினைத் திட்டத்தைத் தொடர்ந்து இஸ்ரேல் ஒரு சுதந்திர நாடாகப் பிரகடனப்படுத்தப்பட்டது. அதனையொட்டி 1948 ஆம் ஆண்டில் ஆண்கள், பெண்கள் மற்றும் சிறுவர்கள் என ஆகக்குறைந்தது 750,000 பலஸ்தீனர்கள் தங்களுடைய வாழிடங்களில் இருந்து வெளியேற்றப்பட்டனர். இந்தப் பாரிய மனிதப் பேரவலமே பேரழிவு அல்லது அரபியில் அல்-நக்பா என அறியப்படுகின்றது.

ஊடக... (04ம் பக்கத் தொடர்)

பிரயோசனங்களும் கிட்ட வில்லை. 1978 ஆம் ஆண்டு அரசியலமைப்பு, முதல் இரு அரசியலமைப்புகளையும் விடக் கூடுதலான உரிமைகளை உள்ளடக்கிய யாப்பாகக் காணப்பட்டது.

ஆனாலும் அரசியலமைப்பு காணப்பட்ட போதிலும் ஜே.ஆரின் அரசாங்கம் கொழும்பு பொருளாதார கொமிஷன் சபை சட்டத்தை நிறைவேற்றி சேவையாளர்களுக்கு தமது விருப்பத்தின் பிரகாரம் தொழிற்சங்கங்களை அமைக்கும் யாப்புரிமையை மூடி மறைக்கும் வகையில் சுதந்திர வர்த்தக வலயங்களை ஏற்படுத்தியது.

கருத்துத் தெரிவிக்கும் உரிமை ஒன்றிணைந்து எதிர்ப்பு தெரிவிப்பதற்குரிய உரிமை என்றபோதிலும் ராஜபக்ஷ காலப்பகுதியில் பல்வேறு எதிர்ப்புக்களை நீதிமன்ற உத்தரவுகளின் பிரகாரம் தடைசெய்வதற்கு பொலிஸாருக்கு முடிந்தது. நல்லாட்சி அரசின் கீழாலும் அது முன்னெடுக்கப்படுகிறது. அங்கவீனமுற்ற இராணுவ வீரர்களின் ஆர்ப் பாட்டத்தை தடுப்பதற்கும் பொலீஸார் நீதிமன்ற உத்தரவை பெற்றிருந்தார்கள். வங்கிச் சேவையாளர்களின் சங்கம் மேற்கொண்ட ஆர்ப்பாட்டமும் அண்மையில் நீதிமன்ற உத்தரவுப் பிரகாரம் தடுக்கப்பட்டது.

இவ்வரசாங்கம் யாப்பு ரீதியாக குறிப்பிடப்பட்டுள்ள அடிப்படை உரிமைகள் தொடர்பில் ராஜபக்ஷ வழிமுறைகளை பின்பற்றுகிறது. அதனால் அரசியலமைப்பிற்கும் ஜனநாயக முறைகளுக்குமிடையில் பாரியதொரு இடைவெளி உள்ளது.

அரசாங்கம் உள்ளூராட்சி மன்றத் தேர்தலையும் காலங்கடத்தி வருகிறது. அரசியலமைப்பின் படி, மக்கள் தங்களது வாக்கினால் பிரதிநிதிகளை தெரிவுசெய்து கொள்ளும் உரிமையுள்ளது. [illegible] அவசரகாலச் சட்டத்தின் கீழேனும் தேர்தலை காலங் கடத்த முடியாது. ஒரு வருட காலத்திற்கு மாத்திரமே மாகாண சபை தேர்தலை காலங் கடத்த முடியும். எதிர்வரும் ஜூன் மாதம் வரையில் காலங் கடத்தப்பட்டுள்ள மாகாண சபைத் தேர்தல் தற்பொழுது 02 வருடங்களுக்கும் மேலாக காலங்கடத்தப்பட்டு வந்துள்ளது.

அது தொடர்பில் பொறுப்பு வாய்ந்த அமைச்சர், எல்லை நிர்ணய குழுவின் அறிக்கை தொடர்பில் கூறி வரும் கதையை சுயாதீன தேர்தல் ஆணைக்குழு ஏற்றுக் கொண்டிருப்பது அவர்களது சுயாதீனத் தன்மையை கடுமையான முறையில் கேள்விக்குட்படுத்துகிறது. இரண்டு வருடங்களாக தேர்தல் தொகுதிகளை எல்லை நிர்ணயம் செய்துகொள்ள முடியாத ஆணைக்குழுவை உடனடியாகக் கலைக்க வேண்டும். எல்லை நிர்ணய ஆணைக்குழுவும் அரசியலுக்குள் சிக்குண்டிருப்பதனை, ஜனநாயக விரோதமான முறையில் இழுத்தடிக்கப்பட்டு வருவதன் மூலம் கண்டுகொள்ள முடியுமாகிறது.

அரசாங்கம் வரையவுள்ள அரசியலமைப்பில் பயங்கரவாத தடுப்புச் சட்டம் உட் புகுத்தப்படவுள்ளது. அதன் மூலம் [illegible] ஜனநாயக [illegible] மறுக்கமுடியாது. [illegible] மீறிப் பிட முடிகிறது. அச் சட்டமூலம் நிறைவேற்றப்பட்டால் அதை உடனடியாக நீக்க வேண்டும் என ஏற்றுக் கொள்ளும் அளவுக்கு நடப்பிலுள்ள பயங்கரவாத தடுப்புச் சட்டத்தையும் விட கடுமையானதொரு சட்டமாக இருக்கப் போகிறது. (பார்க்க ஞாயிறு லக்பிம- அக்டோபர் 23)

இவ்வரசின் அரசியல் தலைமைகள் அவர்களை தேர்தல் மூலம் தெரிவு செய்த மக்களை பிரதிநிதித்துவப்படுத்துவதற்கு பதிலாக அவர்களது பொருளாதார அடிப்படைத் திட்டங் களை முன்கொண்டு செல்கின்ற மோசடிக்கார வர்த்தகர்களுக்காக வேண்டி திட்டங்களை வகுப்பதற்கு கட்டுப்பட்டுள்ளது.

இவையனைத்திலிருந்தும் விளங்குவது என்னவெனில், எந்தளவு முக்கியத்துவம் கொடுத்து அரசியலமைப்பொன்றை வரைந்து பாராளுமன்றத்தில் நிறைவேற்றி கருத்துக் கணிப்பொன்றினால் அனுமதிக்கப்படுவதனால் மாத்திரம் நாட்டில் ஜனநாயகம் நிலைத்து நிற்பதில்லை. ஆட்சிக்கு தெரிவுசெய்யப்படுகின்ற அரசியல் தலைவர்களின் ஜனநாயக நடவடிக்கைகளுக்கூடாகவே ஜனநாயகம் தீர்மானிக்கப்படுகிறது.

சுருக்கமாகக் கூறுவதெனில், ஜனநாயக பயிற்சியை பெறக்கூடிய பலம் மிக்க ஜனநாயகக் கட்டமைப்பிற்குள் பயிற்சிகளைப் பெறாத அரசியல் தலைவர்களை நாட்டின் தலைவர்களாக தெரிவுசெய்வதினால் அரசியலமைப்பில் எழுதி வைக்கின்ற அடிப்படை உரிமைகளும் ஜனநாயக சமூக ஒழுங்கு முறைகளையும் பாதுகாத்துக் கொள்ள முடியாது. ஊடகச் சுதந்திரம் தொடர்பில் இவ்வரசாங்கம் காண்பித்து வரும் எதிர்ப்பு போக்குகள் அதன் வெளிப்பாடாகும். விமர்சனங்களை சகித்துக் கொள்வதற்கு முடியுமான ஜனநாயக அரசியல் நிலவுகையில் புடம்போடப்படாமையானது மிகவும் துரதிஷ்டமாகும்.

ஊடகங்களுக்கு எதிரான கூச்சல்கள், பரிந்துரை செய்யப்படுகின்ற கண்காணிப்புக்கள் மற்றும் கண்காணிப்பு நிறுவனங்கள், தேசிய பாதுகாப்புக்காக வேண்டி வரையப்படுகின்ற கொடிய பயங்கரவாத எதிர்ப்புச் சட்டம் போன்றவை அனைத்தும் ஜனநாயகம் இறுதியில் தீர்மானிக்கப்படுவது அரசியலமைப்பு விடயங்களால் அல்ல என்பதையும் ஜனநாயகம் தீர்மானிக்கப்படுவது அதனை அறியாத அரசியல் தலைமைகளின் பொருளாதார திட்டங்களின் பங்குதாரர்களுக்கு தேவையான இலாபங்களின் அடிப்படையிலாகும் என்பதையும் புரிந்துகொள்ள முடிகிறது.

- தமிழில் ஹெட்டி ரம்ஸி

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தாயின் இதயவறையிலிருந்து...

அண்மைக்காலமாக முஸ்லிம் இளைஞர்கள் இளவயதில் மரணிப்பது அவதானிக்கப்படுகிறது. 19 வயதில் தனது மகனை இழந்த ஒரு தாயின் உள்ளக் குமுறல், தாயின் அறுதலுக்காகவும், இளைஞர்களின் படிப்பினைக்காவும் இங்கு பிரசுரிக்கப்படுகிறது.

எம்மை விட்டுப் பிரிந்தும் எம்மனதை விட்டுப் பிரியாத அன்பு மகனே அக்ரம்!

எனது இதயத்தைப் பிழிந்து உனக்காகத் தருகின்ற இதமான ஸலாம், அஸ்ஸலாமு அலைக்கும் வரஹ்மதுல்லாஹி வபரகாத்துஹூ.

மகனே! உனக்கு சுவனத்தில் மேலான தோர் இடமும், அல்லாஹ்வின் ரஹ்மத்தும் என்றென்றும் கிடைக்க வேண்டுமெனவும், மறுமையில் எம்மையும் உன்னுடனேயே சேர்த்து வை என்றுமே இறைவனிடம் எப்போதும் இறைஞ்சுகிறேன். தினம், தினம் ஏங்குகிறேன்.

உதிரும் கண்ணீரில் உதிரத்தைக் கலந்து இம்மடலை வரைகிறேன். பிரிய மகனே அக்ரம்! உனக்கு எனது எழுத்தின் மீதும், என் மீதும் மிகுந்த பிரியம் இருந்ததை நான் பல தடவைகள் பார்த்திருக்கிறேன். ஆனால் ஒரு முறையேனும் உன்னைப் பற்றி எழுதி உன்னிடம் காட்டக் கிடைக்க வில்லையே என இப்போது நான் வருந்து கிறேன். அந்த ஆதங்கத்திலேயே இன்று நான் எழுதுகிறேன்.

அருமை மகனே அக்ரம்! 19 வருடங் களுக்கு முன் ஓர் வெள்ளிக்கிழமை மே 2ஆம் திகதி. அந்த நாள் நீ பிறந்த நாள். அந்த நாளைக்கூட நான் இன்னும் மறக்க வில்லை. அல்லாஹ் உனது தந்தையிடமும், என்னிடமும் உன்னை அமானிதமாகத் தந்த நாள் அது. அல்ஹம்துலில்லாஹ்.

2016 செப்டெம்பர் 2ஆம் திகதி. அதே போன்றதொரு வெள்ளிக்கிழமை. அந்த நாளை ஆயுள் உள்ளவரைக்கும் என்னால் மறக்க முடியாது. காரணம் அல்லாஹ் உன்னை எம்மிடமிருந்து எடுத்துக் கொண்ட நாள். யாரிடம் போய் முறையிடுவது...? யாரைத்தான் குறை சொல்வது...? அனைத் தினதும் சொந்தக்காரன் அவனாயிற்றே. இன்னாலில்லாஹி வஇன்னா இலைஹி ராஜிஊன்.

எனது செல்ல மகனே அக்ரம்! அன் றைய அந்த வெள்ளிக்கிழமையை நீயும், உனது நண்பர்களும் மிக, மிக ஆவலாய் எதிர்பார்த்திருந்தீர்கள் என்பது நானறிந் ததே. நல்ல முறையில் A/L பரீட்சையை எழுதி விட்டு, பல நாட்களாய்த் திட்டமிட்டு, ஆசிரியர்கள் சகிதம் நுவரெலியாவுக்குத் தயாரான சுற்றுலா நாளல்லவா அது.

அந்த நாள், நீ அதிகாலையிலேயே எழுந்து, தொழுகைகளை நிறைவேற்றி, நகம் வெட்டி, அழகிய முறையில் ஆடை யணிந்து சென்ற காட்சி எனக்கு இன்று போல் இருக்கின்றது. ''சென்று வருகிறேன் மமா'' என்ற உனது அழகிய வார்த்தை களை, நீ தந்து சென்ற அன்பு முத்தங்களை, நீ ஆட்டிச் சென்ற கையசைவுகளை (டாடா) என்னால் ஒருபோதும் மறக்க முடியாது மகனே! அதுவே இம்மை வாழ்வில் என்னுடனான இறுதியான விடைபெறுதல் என்பதை அப்போது நான் அனுவள வேனும் அறிந்திருக்கவில்லை மகனே!

அன்பு மைந்தனே அக்ரம்! அன்றைய தினம் மாலை நேரம் அக்குறணை நகரம் அழைப்பேசிகளால் அலைமோதியதாம் பலரும் சொன்னார்கள். அனைவருக்கும் உனது மரண விடயம் பகிரங்கமானது. வீட்டிலுள்ள எனக்கோ நீண்ட நேரம் வரை அது இரகசியமானது. நேரம் செல்லச் செல்ல படிப்படியாக உனது இறப்பு எனக்கு ஊர்ஜிதமானது. உள்ளம் எல்லாமே உடைந்து தூள், தூளான கண்ணாடி போன்றானேன் நான். அப்போது எனக்கு என்ன நடந்தது, என்ன நடக்கின்றது என்ற சரியான உணர்வில்லை. எல்லாமே ஒரு வகையான பிரமைப் போன்றிருந்தது.

சுயமாய் எதனையும் சிந்திக்கத் தோன்ற வில்லை. இதயம் கனமாய் இருந்தது. ஏதோ ஒன்று என்னை இறுக்கி வைத்து பொங்கி வந்த அழுகையைக்கூட கட்டுப் படுத்தியது. பொறுமையாய் இருக்கச் செய்தது. இது எப்படி சாத்தியமானது என எனக்கே ஆச்சரியமாய் இருந்தது. அன் றைய தினம் அனைவரும் அல்லாஹ்விடம் வேண்டிய பொறுமையின் பிரதிபலிப்போ அது என பின்னர் நான் எண்ணினேன்.

எது எப்படியோ அந்த இரு நாட்களை நான் ஒரு வாறாகக் கழித்து விட்டேன். ஆனால், சத்தியமாய் மகனே! தொடர்ந்து வருகின்ற இந்த நாட்கள் -மாதங்கள் இரண்டாகியும் கூட- ஒரு நாளாவது உன் ஞாபகம் இல்லாமலோ, கண்ணீரில்லா மலோ நகர மறுக்கின்றன. ஒவ்வொரு கண்ணீரின் பின்னரும் இறைவனின் நியதி இதுவெனவே முடிவுக்கு வருகின்றேன். என்றாலும் முடியவில்லை மகனே! எல் லாமே ஒரு வகையான கனவு போன்றும், கதை போன்றுமிருக்கிறது.

எனது பிரியத்திற்குரிய மகனே அக்ரம்! பிரசவ வலி எப்படி என்று யாராவது என்னைக் கேட்டால் அதனைச் சொல்வ தற்கு என்னிடம் சொற்கள் உள்ளன. உன் னையும், உனது சகோதரர்களையும் பெற்ற வள் என்பதால். ஆனால் உனது இறப்பின் வலி எப்படி என்று யாராவது என்னைக் கேட்டால் அதனை வர்ணிப்பதற்கு என் னிடம் வார்த்தைகள் கிடையாது. சொல் வதற்கு என்னிடம் சொற்களும் கிடையாது.

அந்த 'மரணவலி' ஓர் இதய வலி. அந்த வலி ஏற்படும் போதெல்லாம் அதனை முன்னே நகர்த்தவும் முடியாத, பின்னே இழுக்கவும் முடியாத ஓர் வகை உணர்வினைப் பெறுகிறேன். மெழுகாய் உருகிப் போகிறேன். இந்த நிலையை நான் அடிக்கடி பெறுகிறேன். இதே நிலை யைத்தான் உனது அன்புத் தந்தையிடமும், அருமைச் சகோதரன் Ashkar இடமும் காண நேரிடுகின்றது. எதுவுமே செய்ய முடியாத நிலையில் இறுதியில் இறைவ னிடமே தஞ்சமடைகிறோம். ஆம் எமது உடம்பு கூட எமக்குச் சொந்தமானதல் லவே. அல்லாஹ்விற்குரியதே என்று தெளி வடைகின்றோம்.

மகனே அக்ரம்! எனது வாழ்நாளில் நான் எத்தனையோ இறப்புகளைச் சந்தித் திருக்கின்றேன். அழுதிருக்கின்றேன். எனது அன்புத் தந்தையின் இறப்பு கூட என்னைப் பலமாகத் தடுமாறச் செய்ததுதான். ஆனா லும் இத்தகைய ஒரு வலியை இதுவே முதல் தடவையாக அனுபவிக்கின்றேன். இப்போது தான் உணர்கிறேன்... தாயன்பு என்பதை ஏகன் எவ்வளவு ஆழத்தில் வைத்திருக்கின்றான் என்று.

என்னைப் போலவே இன்று இன்னும் எத்தனையோ தாய்மார்கள் தமது பிள்ளை களின் இறப்பையிட்டு சோகங்களைச் சொந்தமாக்கிக் கொண்டிருக்கின்றார்கள். அவர்களது உரையாடல்களின் போதும் இந்த அன்பின் ஆழம் வெளிப்படுகின்றது. அனைவருக்கும் பொறுமையைத் தந்து, பழைய நிலைக்கு மீளச்செய்வதற்கு அல் லாஹ்வே போதுமானவன்.

எனவே, ஒரு தாயை விட எழுபது மடங்கு அன்புள்ள அந்த ரப்பிடம் நான் வேண்டுகிறேன். இணையற்ற இறைவா! ''எனது பிள்ளைக்கும், அங்குள்ள ஏனைய பிள்ளைகளுக்கும் நீ இங்குபோல் நல்ல உறவுகளையும், சிறந்த நண்பர்களையும் கொடுத்து சுவனத்து வாலிபர்களாய் வாழச் செய்து விடு நாயனே'' என்று தான் நித்தமும் கேட்கிறேன்.

மேலும் எனது அருமை மைந்தனே அக்ரம்! உனது பெயரின் பொருளுக்கேற்ப நீ இருந்ததை எண்ணி நாம் ஆச்சரியப் பட்டிருக்கின்றோம். நீ ஒரு சிறந்த பிள்ளை என்பதை நாம் ஏற்றுக்கொண்டிருக்கிறோம். ஆனாலும் உனது மரணத்தின் போதும், அதற்குப் பின்னரும் பலரும் ஏதாவதொரு நல்ல விடயத்தில் உன்னைத் தொடர்பு படுத்திக் கூறுகின்றபோது உண்மையில் நாம் மெய் சிலிர்த்துப் போனோம். உனது உம்மும்மா மற்றும் ஆன்டிமார், அங்கள் மார், அவர்களது பிள்ளைகள் என அனை த்து உறவினர்களும் கூட உனது சிறந்த குணாதிசயங்களையும், நல்ல நட்புறவை யும் ஞாபகப்படுத்தி அடிக்கடி கண்ணீர் சிந்துகின்றனர். உனது நண்பர்கள், மற்றும் அவர்களது பெற்றோரும் கூட தூய்மை யான, சினேகபூர்வமான அன்பை வெளிப் படுத்துகின்றனர். அல்ஹம்துலில்லாஹ். எல்லாப் புகழும் அவனுக்குரியதே.

இப்படியொரு பிள்ளைக்கு பெற்றோ ராய் இருப்பதை நினைத்துப் பூரிப்படை கிறோம். பெற்றோரின் திருப்தியில் அல் லாஹ்வின் திருப்தி இருக்கின்றது. எனவே, இத்தனைக்கு மத்தியிலும் நாம் இறைவ னிடம் வேண்டிக்கொள்வது என்னவென் றால் ''எமது இரட்சகனே! எமது பார்வை யிலும், மக்களின் பார்வையிலும் அக்ரம் ஓர் சிறந்த பிள்ளை. அவ்வாறே உனது பார்வையிலும் எமது மகன் சிறந்த ஓர் அடியானாகவும், மிக கண்ணியத்திற்குரிய வனாகவும் இருந்திருக்க வேண்டுமே என் பது தான். அதற்கு நீ கிருபை செய்வாயாக ரப்பே!! என்பதுதான்.

மகனே அக்ரம்! நீயும், உனது பாசமிகு நாநா Ashkar உம் எத்தனையோ விடயங் களில் ஒன்றுபட்டிருக்கின்றீர்கள். இந்த வயதிலும் என்னுடனும், தந்தையுடனும் நட்பாய் நடந்தீர்கள். பல நல்ல விடயங் களை, சிந்தனைகளை முன்வைத்துள்ளீர் கள். உங்களது உடன் பிறந்த, பிறக்காத சகோதர, சகோதரிகள் கூட சரியான வழியே சீரான வாழ்க்கையைத் தேடி வாழ வேண்டுமெனவே ஆசைப்பட்டீர்கள். தொழுகையிலும், ஏனைய நல்ல விடயங் களிலும் அலட்சியமாய் இருக்கும் மனிதர் கள் கூட திருந்தி, அல்லாஹ்விற்கு விருப்ப மான அடியார்களாக மாற வேண்டுமே என ஆதங்கப்பட்டீர்கள். அண்ணன், தம்பி பாசத்திற்கு முன்னுதாரணமாய் திகழ்ந்தீர் கள். இவற்றை என்றுமே நாம் பெருமை யாய்க் கருதுகிறோம். இதே வழியிலேயே உமது ஏனைய தம்பிமார்களான யூனுஸ், உமர், ஸாபிர் ஆகியோரும் வளர்ந்து, நல்லடியார்களாக வாழ வேண்டுமெனவே ஆசைப்படுகிறோம். அல்லாஹுதஆலா அதற்குக் கிருபை செய்வானாக!

மேலும் பிரியத்திற்குரிய மகனே அக்ரம்! உனது சகோதரர்களினதும், நண் பர்களினதும் உருவில் நான் உன்னைக் காண்கிறேன். எனவே, சுற்றுலா சென்ற அந்த நாளைப் பற்றி உனது நண்பர்களிடம் நாம் கேட்டபோது, அவர்கள் சொன்ன பதில் ''Aunty! வாகனத்தில் ஏறியதிலி ருந்தே நாம் அனைவரும் மிகவும் சந் தோஷமாகவே இருந்தோம். சுற்றுலாவுக்கே யுரிய ஆடல், பாடல், கிண்டல்கள், videos, Photos என மிகவும் சுவாரஷ்யமாகவே நேரத்தைக் கடத்தினோம் என்ற போதிலும் ஒரு விதத்திலும் நாம் இஸ்லாமிய வரை யறைகளை மீறி நடந்தது கிடையாது.

வெள்ளிக்கிழமை என்பதால் ஜும்ஆத் தொழுகையையும் மிகவும் சிறப்பாகவே நிறைவேற்றினோம். எம்முடன் வந்த எமது கல்லூரி ஆசிரியர்கள் சகல விதத்திலும் எம்மை நன்றாகவே கவனித்துக் கொண் டார்கள். பகல் போசனத்தையும் நன்கு சுவை யாகவே பெற்றுக்கொண்டோம். எமது நண்பர் அக்ரம் கூட வழமை போலவே இறுதிவரை சாப்பாட்டை முறை யாகவே சாப்பிட்டதைக் கண்டோம். அதன் பின்னர் திருப்தியான மன நிலையில் எமது பயணத்தைத் தொடர்ந்தோம். அனை வரும் சந்தோஷமான மனதுடன் சிரித்துக் கொண்டே முன்னேறினோம்.

இருந்த போதிலும் உங்களது மகன் அக்ரம் ஒரு வித இனம் புரியாத மகிழ்ச்சி யில், மிகவும் சந்தோஷத்துடன் சிரித்த நிலையிலே இருந்ததை இப்போது நாம் நினைத்துப் பார்க்கிறோம். அந்த நேரத்தில் உடனடியாக அவர் சாய்வாக வருவதைக் கண்ட நாங்கள் இது ஒரு தமாஷுக்குத் தான் என்று நினைத்தாலுங் கூட, விழாமல் பிடித்துக்கொண்டோம். சிரித்த நிலையி லேயே அவருக்கு மயக்கம் ஏற்பட்டுள்ளது என்றே முதலில் நாம் நினைத்தோம். அது மயக்கமல்ல மரணமே ஏற்பட்டுள்ளது என பின்னர்தான் நாம் தெரிந்து கொண்டோம்'' என கலங்கிய கண்களுடன் சொன்னார்கள்.

இந்த நேரத்தில் உனது நண்பர்களின தும், ஆசிரியர்களினதும் நிலைப்பாட்டை வார்த்தைகளில் வடித்திட முடியாதாம். கவலையும் அழுகையும் மேலோங்க செய் வதறியாது திகைத்ததாய்ச் சொன்னார்கள். அவர்களின் திகைப்புக்கும், கவலைக்கும் மத்தியில் எமது பதட்டம், பரிதவிப்பு, உணர்வற்ற நிலைமைகளும் ஒன்று சேர ஒருவாறாய் உன்னை வீடு கொண்டு வந்து சேர்த்தோம். அனைவரும் உனது ஜனாஸா வைப் பார்வையிட்டு கண்ணீர் சொரிந்த னர். எனக்கு எல்லாமே ஒரு வகையான [illegible]

எப்படியோ மகனே! பெரும் சனத்திர ளுக்கு மத்தியில் உனது இறுதிக் கடமைகள் அழகாய் நிறைவேற்றப்பட்டன. அனை வரது வாயும் துஆவை முணு முணுத்தது. அல்ஹம்துலில்லாஹ்.

அன்பு மகனே! உண்மையில் உனது பிரிவு ஈடுசெய்ய முடியாத ஒரு வெற்றி டத்தை எமக்குத் தந்திருக்கிறது. எனினும் ஒரு மரணம் பல சேதிகளை, உண்மை களை எமக்காக விட்டுச் செல்கிறது என் பதை இப்போது தான் பூரணமாக உணர் கிறேன்.

மரணம் என்பது சொல்லி விட்டு வரக் கூடிய ஒரு விருந்தாளியுமல்ல. Invitation தந்து அழைக்கக்கூடிய ஒரு அழைப்பாளி யுமல்ல. அதற்கு காலம், நேரம், வயது, வரம்பு என எதுவுமே எம்மால் சொல்ல முடியாது. அனைத்தும் இறைவன் விதித்த கோட்டின் வழியேதான் நடைபெறுகின்றன என்று எத்தனை, எத்தனையோ நாம் கேள்விப்பட்டுத்தான் இருக்கின்றோம். ஆனாலும் எமது வீட்டிற்குள்ளே என்று வரும் வரை அதனது உணர்வு எமக்குக் குறைவாகவே உள்ளது மகனே. அல்லாஹுதஆலா எம்மைப் பொருந்திக்கொள்வா னாக!

மேலும் உலகின் மிகப்பெரிய உண்மை களைக் கூட மறுக்கின்ற மனிதன், மறுக்காத ஒரு உண்மை இருக்குமாயின் அது மரணம் மட்டுமேதான். இன்னும் மகனே! எந்த ஒன்றும் எமது அருகில் இருக்கும்போது அதனது பெறுமதி எமக்குத் தெரிவதே யில்லை அவ்வாறுதான் மகனே! இப் போது என்னைச் சுற்றி எல்லாமே இருந் தாலும் நீ இல்லாத போது, நீ பாடும் அந்தத் தாய்ப்பாடல் (நான் வயதில் வளர்ந்தால் கூட மடி ஊஞ்சல் வேண்டும் ஆட, மற்றது உனைப் போலொரு தாய் தான் இருக்க என்ன வேண்டும் வாழ்வில் ஜெயிக்க...) வரிகளைக்கூட நான் திரும்பத் திரும்பக் கேட்க ஆசைப்படுகிறேன். அது போலவே நீ படிக்கும் மரணத்தை ஞாபகப் படுத்தக் கூடிய

"Oh! mark the words that I do say.

who knows? Tomorrow could be your day? என்ற பாடல் வரிகள், ஓதல்கள், நகைச்சுவைகள் என்பன எனது காதில் ரீங்காரமிட்டுக் கொண்டே இருக்கின்றன.

அந்த ஒவ்வொரு பொழுதிலும் உனக்காக இறைவனிடம் பிராத்திப்பதற்கு எனது நா மறப்பதில்லை மகனே!

எனது பிரியம் மிகுந்த மகனே அக்ரம்! உனது மரணத்தின் போது நான் கண்ட, கற்ற விடயங்கள் பல அவற்றுள் சில:

இறைவனின் இணையற்ற இரக்கமும், அழகிய முடிவுரைகளும்.

பெற்றோரின் உச்சகட்ட பிள்ளைப் பாசமும், உள்ளத்தின் உண்மையான அழுகையும்.

சகோதரர்களின் எல்லையற்ற பாசமும், அளவு கடந்த அழுகையும்.

உம்மும்மாவின் பேரப்பிள்ளைப் பாசத் தின் அழுகையும் அப்பா, பூவாப்பா வாப்பும்மா ஆகியோரும் இருந்திருந்தால் என்ற ஆதங்கமும்.

uncleமார், Auntyமார் அவர்களது பிள் ளைகள் என இரு பக்கத்தாரினதும் இரத்த உறவின் ஆழமான பிணைப்புகளும், உணர்வுபூர்வமான அழுகையும்.

நண்பர்களினதும், அவர்களது பெற் றோர்களினதும் களங்கமற்ற நட்பும், துயர் மிகுந்த அழுகையும் வெளிப்பாடுகளும்.

பாடசாலை ஆசிரிய, ஆசிரியர்களின் ஆசியுரைகளும், கவலையான கண்ணீரும்.

நெருக்கமான உறவுகளின் உருக்கமான உரையாடல்கள்.

பக்கத்து வீட்டாரின் பரஸ்பர ஒத்துழைப் புகளும், ஆறுதல் வார்த்தைகளும்.

பெரியவர்களினதும், உடன் பிறவாத அன்பார்ந்த சகோதர, சகோதரிகளினதும் இதமான பேச்சுக்களும், அறிவுரைகளும்.

ஊர்மக்களினது உன்னதமான சம்பாஷ னைகளும், நல்ல ஞாபகமூட்டல்களும்.

இது தவிர எந்த ஒரு மையத்து வீட் டிற்கும் உடனடியாய் விஜயம் செய்து சேவை செய்யும்

Helping Hands அங்கத்தவரின் அற்புத மான சேவைகள்.

பள்ளிவாசல் சார்ந்தோரின் புனிதமான பணிகள்.

பழைய, புதிய பாடசாலை மாணவ, மாணவிகளின் உணர்வுபூர்வமான பிரிந் துரைகள்.

இப்படி எத்தனை, எத்தனையோ அவ தானிக்கக் கூடியதாயும், கேட்கக்கூடியதா யும் இருந்தன. அனைவருக்கும், அனைத் திற்கும் எமது இதயபூர்வமான நன்றி களும், நல்லாசிகளும் என்றென்றும் உரித் தாகட்டும்.

என்னருமை மைந்தனே அக்ரம்! உல கில் எந்தவொரு மனிதனாலும், புத்தகத் தினாலும் கற்றுத்தர முடியாத பல கற்றல் களை, அனுபவங்களை இறைவன் ஒரு மரணத்தின் மூலம் விரிவுரை செய்கிறான். அதிலும் அந்த மரணம் மிக மிக நெருங் கிய உறவு என்றால் அதில் நாம் படிக் கின்ற, படித்த பாடங்கள் சொல்லிலடங் காதவை. எனவே, என்றுமே நாமும், குடும் பமும் உனக்காகப் பிராத்திக்கின்றோம்.

ஈடு இணையற்ற ரப்பே! பெற்றோரா கிய எமது திருப்தியை சகல விதத்திலும் பெற்ற எமது அன்புக் குழந்தை அக்ரமிற்கு நீயும் உனது திருப்தியையும், கருணையை யும் காட்டி விடுவாயாக!! சுவனத்தில் மேலான சுவர்க்கமான ''ஜன்னத்துல் பிர்தௌஸ்'' ஐயும் கொடுத்து விடுவாயாக!! எம்மையும் மறுமையில் எமது பிள்ளை அக்ரம் உடனேயே சேர்த்து விடுவாயாக!!

இப்படிக்கு என்றென்றும்
உனது அன்புத்தாய்

Sua'dha Huwalid Ajward

இஸ்ரவேல்... (09ம் பக்கத் தொடர்)

பாலைவனத்திற்கு இயற்கையாய் இயைபாக்கமடைந்த இயற்கைக் காடுகளை அழித்தும், மத்திய கிழக்கின் வெப்பத்திற் கும் நெருப்பிற்கும் தாக்குப் பிடிக்கக் கூடிய ஒலிவ் மரங்களை அடுயோடு பிடுங்கியும், அந்த இடங்களில் பைன் மரங்களையும் நாட்டியது. இதன் காரணமாக கார்மல் மலைக் குன்றின் தென் பகுதியிலிருந்த பகுதிக்கு இஸ்ரவேலர்கள் சின்ன சுவிட்சர் லாந்து எனப் பெயரிட்டனர்.

அங்கே தற்போது 670 இன மரங்கள் காணப்படுகின்றன. இந்த சின்ன சுவிட்சர் லாந்து, உல்லாச புரியாக மாற்றப்பட் டுள்ளது. அதற்காக பல்வேறு இடங்கள் உருவாக்கப்பட்டுள்ளன.

இதன் காரணமாக பைன் மரங்களும், காடுகளும் மத்திய கிழக்கின் பாலைவன காலநிலைக்கு இயைபாக்கமடையவில் லை. யூதேநி கணக்கெடுப்பின் படி 10 இற்கு 6 தாவரங்கள் செத்துவிட்டிருந்தன. எஞ்சிய தாவரங்களும், அந்த மரங்களி லிருந்த றெசின், ரேப்பன்ரைன் காரண மாகவும், மத்திய கிழக்கு பாலைவனத்தின் அதிக வெப்பநிலை காரணமாகவும், தீயை உண்டாக்கக் கூடிய மூலாதாரமாகவே தொழிற்பட்டனவன்றி பாதுகாப்பான உயிர்ப்புள்ள காடாக மாறவில்லை. இதன் காரணமாக அபாயகரமான ஒரு வலயமாக இக்காடுகள் மாறின. இந்த கார்மல் மலை யில் 2010 ஆம் ஆண்டு ஏற்பட்ட தீ விபத்தில் 42 பேர் உயிரிழந்திருந்தனர்.

உண்மையிலேயே, இஸ்ரவேலிடம், அணுஆயுதங்கள் இருந்தும், உலகின் பயங்கர இராணுவம் இருந்தும், மொசாட் புலனாய்வு சேவை இருந்தும், அதற்கு ஆதரவு தெரிவிக்கக் கூடிய நாடுகள் உலகம் பூராக இருந்தும், இஸ்ரவேல் ஒரு பாதுகாப்பற்ற நாடாக மாறியுள்ளது.

இதன் காரணமாக மற்ற நாடுகளிலி ருந்து தனிமைப்பட்டுப் போகும் ஒரு அம்சமும் காணப்படுகின்றது. மத்திய கிழக்கின் பலஸ்தீனத்திற்கு சீயோனிசம், இஸ்ரேலியர்கள், இஸ்ரவேல் நாடு மட்டு மல்ல பைன் மரங்களும் அந்நிய ஆக்கிர மிக்கும் இனங்கள்தான்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஊடக அடக்குமுறையும்... (03ம் பக்கத் தொடர்)

அந்தக் கட்டத்தில் கூட இந்த அரசியல்வாதிகள் தங்கள் இனவாத அரசியலின் பின் விளைவுகளைப் பற்றி கணக்கெடுப்பு நடத்தினார்களா?. இல்லை அவர்கள் அதைப் பற்றிக் கவலைப்படவில்லை.

மாறாக அநேகமாக அனைத்து அரசாங்கங்களும் தங்கள் கண்களை தேர்தல்களில் மட்டுமே உறுதியாகச் செலுத்தினார்கள், ஒன்றில் அதிகாரத்தை வெல்வதற்கு அல்லது அதிகாரத்தில் நீடித்து இருப்பதற்கு, வாக்குகளை பிடிப்பதற்கு மிகவும் பயனுள்ள உத்தியாக தொடர்ந்து பிடிவாதமாக பெரும்பான்மை சமூகத்தை கெஞ்சி வந்தார்கள்.

இந்த துரதிஷ்டமான நிலை பின் விளைவுகளைப் பற்றி உணராமல் தொடர்ந்து கொண்டே யிருந்தது. 1970ல் பிரதம மந்திரி சிறி மாவோ பண்டாரநாயக்கா சோல்பரி அரசியலமைப்பில் இருந்த பிரிவு 29 ஏ யினை தனது குடியரசு அரசியலமைப்பில் நீக்கியதுடன் பௌத்தத்தை அரச மதமாக மாற்றினார். இது அனைத்து தமிழ் அரசியற் கட்சிகளையும் தமிழர் ஐக்கிய விடுதலை முன்னணி (ரி.யு.எல்.எப்) என்ற ஒரு குடையின் கீழ் கொண்டுவந்ததுடன் அது சம உரிமை கோரிக்கையையும் முன் வைத்தது.

இதற்கு ஜனாதிபதி ஜெயவர்தனாவின் 1978 ஆம் ஆண்டின் கொடூரமான அரசியலமைப்பும் சோக்கப்பட்டது. அது ஜனநாயக முறையில் உருவாக்கப்பட்ட சக்திவாய்ந்த சர்வாதிகாரி ஒருவரை உருவாக்கியதுடன் சிறுபான்மையினரை குரலற்றவர்களாகவும் மற்றும் நாதியற்றவர்களாகவும் மாற்றியது. 1983 இல் அவரது கட்சியின் குண்டர்கள் மிகத் திறமையாக திட்டமிடப்பட்ட ஒரு தமிழர் விரோத திட்டத் தின்கீழ் தமிழர்களைத் தாக்கிக் கொன்றார்கள் தவிரவும் அவர்கள் உடமைகளையும் தீக்கிரையாக்கினார்கள்.

இதன் விளைவாக தமிழர்களின் போர்க் குணம் எழுச்சி பெற்றது. பின்னர் இந்தியாவால் அதற்கு பயிற்சி, ஆயுதம், மற்றும் நிதி என்பன வழங்கப்பட்டது. அது மிகவும் அபாயகரமான பயங்கரவாதிகளைத் தோற்றுவித்தது. அவர்கள் கிட்டத்தட்ட இந்த தீவு முழவதையுமே முடங்கச் செய்தார்கள். தவிரவும் இலங்கைத் தமிழர்களைக் கொண்ட சக்தி வாய்ந்த புலம்பெயர் சமூகம் ஒன்று உருவாவதற்கும் வழி அமைந்தது.

எங்கும் மரணம் மற்றும் அழிவே நிகழ்ந்தது, பொருளாதாரம் முடங்கியது, மற்றும் மக்கள் அச்சத்துடனேயே வாழ்ந்தார்கள். நிலமை அப்படி மோசமாக இருந்தது. வீட்டுப் பெண்கள் வேலைக்குச் சென்ற கணவன் அல்லது பாடசாலைக்குச் சென்ற பிள்ளைகள் உயிருடன் வீடு திரும்புவார்களா என்பது நிச்சயமில்லாத ஒரு நிலையில் வாழவேண்டியிருந்தது. அந்த நாட்களில்தான் மக்கள் மிகவும் முக்கியமான வேலைகளுக்காக மட்டுமே வெளியில் சென்றார்கள் ஏனென்றால் எப்போது அல்லது எங்கே ஒரு குண்டு வெடிக்கப் போகிறது என்பது அவர்களுக்கு தெரியாமலிருந்தது.

மக்கள் பாதிப்படைந்த அதேவேளை அரசியல்வாதிகள் மற்றும் அவர்களின் அடியாட்கள் ஆயுதங்களை கொள்வனவு செய்வதில் தரகு வடிவில் கொள்ளையடித்து கொழுத்த பணம் சம்பாதித்தார்கள். இந்த கொடிய பேரழிவால் உதவியற்ற மக்கள் துன்பப்பட்டபோதும் இரண்டு பிரதான கட்சிகளின் அரசியல்வாதிகளும் செல்வத்தால் செழித்தோங்கினார்கள்.

இந்த இனப்போராட்டம் அனைத்து வகையான வீரர்களையும் தீவுக்குள் கொண்டு வந்தது. எடுத்துக் காட்டாக இந்தியா தீவின் அரசியலுக்குள் நுழைந்தது. இந்திய பிரதம மந்திரி ராஜிவ் காந்தி ஜனாதிபதி ஜெயவர்தனாவின் கழுத்தைப் பிடித்து கட்டாயப்படுத்தி அரசியலமைப்புக்கு 13 ஆவது திருத்தத்தை கொண்டு வந்தார். அதைத் தொடர்ந்து வந்த வருடங்களில் உள்ளூர் அரசியலில் இருந்த இந்தியாவின் தலையீடும் ஆதிக்கமும் ஸ்ரீலங்கா அரசியல்வாதிகள் அடிக்கடி புது தில்லிக்கு விஜயம் செய்து இங்குள்ள நிலமைகளை விளக்குவதும் ஒருவேளை உள்ளூர் அரசியல் பிரச்சினைகளுக்காக அவர்களின் ஆசீர்வாதத்தை பெறுவதுமான ஒரு கேலிக்கூத்தான நிகழ்வு இடம் பெற்று வந்தது.

அனைத்து சமூகங்களையும் சேர்ந்த மிகவும் ஏமாற்றத்துக்கு உள்ளான மக்கள் தீவினை விட்டு வெளியேறி சமாதானத்தை தேடி உலகெங்கிலுமுள்ள நாடுகளுக்குச் சென்று விட்டார்கள். சிங்கள ஏகாதிபத்தியம் மற்றும் தமிழ் இனவாதம் மற்றும் போர்க்குணம் என்பன தம்முள் அழுந்தி நிற்கின்றன. முஸ்லிம் சமூகத்துக்கு பங்கிட அதன் சொந்த துயரங்கள் உள்ளன. அவர்களின் மனக் குறைகள் சுதந்திரத்தின் பின்னர் வந்த கிட்டத்தட்ட அனைத்து அரசாங்கங்களின் செவிட்டுக் காதுகளில் ஏறவேயில்லை.

கிழக்கினைச் சேர்ந்த ஒரு பிரிவு முஸ்லிம்கள் ஒரு தனியான முஸ்லிம் கட்சியினை உருவாக்கியது, அது முஸ்லிம் சமூகத்தை சிங்களவர் மற்றும் தமிழர்களிடமிருந்து தனிமைப்படுத்தியது. ராஜபக்ஷ அரசாங்கம் முஸ்லிம்கள் மீது பகைமை பாராட்டியதால் போர் முடிந்த பின்பும் அவர்களின் இடர்கள் தொடர்ந்தன.

வரலாற்று பெருமை வாய்ந்த சந்தர்ப்பம் ஒன்று, மஹிந்த ராஜபக்ஷ ஆட்சியின் கீழ் இடம்பெற்ற இனவாத அரசியல், முன்மாதிரியில்லாத குற்றச்செயல்கள், ஊழல், விரயம் போன்றவற்றால் அந்த ஆட்சி கிட்டத்தட்ட சீர்குலைந்தால் மீண்டும் ஒருமுறை வீணாகிப் போனது. அந்த ஆட்சி முஸ்லிம்களுக்கு எதிராக வன்முறையை கட்டவிழ்த்து விட்டது, அளுத்கம, பேருவல, மற்றும் தர்கா நகர் போன்ற இடங்களில் திட்டமிட்டு மேற்கொள்ளப்பட்ட நிகழ்ச்சி காரணமாக மசூதிகள், சமயப் பாடசாலைகள், வியாபார நிறுவனங்கள் என்பனவற்றின் மீது 350க்கும் மேற்பட்ட தாக்குதல்கள் நடத்தப்பட்டன.

அத்தகைய ஒரு சூழ்நிலையில்தான் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவும் மற்றும் பிரதமர் ரணில் விக்கிரமசிங்காவும் தாங்கள் குற்றச்செயல்கள், ஊழல் என்பனவற்றை ஒழித்து நல்லாட்சிக்கும் இன நல்லிணக்கத்துக்கும் வழியேற்படுத்துவோம் என்கிற கோஷத்துடன் வந்தார்கள்.

பதவியேற்று கிட்டத்தட்ட இரண்டு வருடங்கள் கடந்து விட்டபோதிலும் இன்று நாங்கள் எங்கே நிற்கிறோம்? மீண்டும் ஒருமுறை இனவாத அரசியல், பரந்துபட்ட ஊழல்,அராஜகம், ஜனநாயத்தில் அரிப்பு, வீணான செலவுகள், ஊதாரித்தனம் மற்றும் ஆடம்பரம் பற்றி குற்றச்சாட்டுகள் எழுந்துள்ளன.

இரண்டு கட்சிகளின் தவறான நிர்வாகம் காரணமாக இன்று இந்த தீவு உயிர்கொல்லி வீரர்களான இந்தியா, சீனா, இஸ்ராயேல், அமெரிக்கா, பிரித்தானியா ஏன் ரஷ்யாவும் கூட, போன்றவர்களின் விளையாட்டு மைதானமாக மாறியுள்ளது, அவர்கள் தங்கள் சொந்த வடிவமைப்புகளை இங்கு செயல்படுத்த தீவிரமாக உள்ளார்கள்.

இந்த சூழ்நிலையை, பத்தி எழுத்தாளர் லெஸ்லி டீ சில்வா தனது சமீபத்தைய கட்டுரை ஒன்றில் ''எங்களது மோசடித்தனமான ஆட்சி - உண்மையில் திருடர்களால் ஆளப்படுகிறது'' என விபரித்துள்ளார்.

இந்த சூழ்நிலையில் நாங்கள் திரும்பவும் இதே கட்சிகளுக்கா வாக்களிக்கப் போகிறோம்? நாட்டைக் காப்பாற்றவும் மற்றும் கண்ணியத்தை திரும்ப நிலைநாட்டவும் மூன்றாவது அரசியல் சக்தி ஒன்றைப் பற்றி சிந்திப்பதற்கான காலம் கனிந்து வருகிறது அல்லவா.

ஆத்திரமூட்டுபவர்.... (01ம் பக்கத் தொடர்)

வெறுப்பு மற்றும் குரோத செயற்பாடுகளுக்காக மக்களை தூண்டுகின்ற குழுக்களின் செயற்பாடுகள் தொடர்பில் சிவில் சமூக மற்றும் மதத் தலைவர்களால் முன்னெடுக்கப்படுகின்ற மிகவும் முற்போக்கான செயற்பாடுகளை வரவேற்கின்றோம். குறுகிய இனவாத கருத்துக்களைப் பரப்புவதற்கு முயற்சித்த இருவர் கைதுசெய்யப்பட்டுள்ளமையையும் வரவேற்கின்றோம்.

இவ்வாறான செயற்பாடுகளுடன் தொடர்புபட்ட நபர்களின் சமூக, அரசியல் மத பின்புலங்களை கவனத்தில் கொள்ளாது சட்ட நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று சம்பந்தப்பட்ட அதிகாரிகளைக் கேட்டுக் கொள்வதாகவும் முன்னாள் ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்க கோரிக்கை விடுத்துள்ளார்.

இதேவேளை, இலங்கையில் அனைத்து மத அனுஷ்டானங்களுக்கும் அரசின் ஒத்துழைப்பு வழங்கப்படுகிறது. ஆனால் இனவாதம், தீவிரவாதத்துக்கு இங்கு இடமில்லை என பிரதமர் ரணில் விக்கிரமசிங்க தெரிவித்துள்ளார்.

பூதங்களை.... (01ம் பக்கத் தொடர்)

அண்மையில் ஜனாதிபதி மற்றும் பிரதமர் ஆகியோருடன் இடம் பெற்ற சந்திப்பின் போது முஸ்லிம்களுக்கு எதிரான இத்தகைய விடயங்கள் கலந்துரையாடியுள்ளோம்.

இவற்றின் பின்னால் இருந்து செயற்படுத்துகின்ற சக்திகள் யார்? அவர்களது பின்புலம் என்ன? என்பவை தொடர்பில் புலனாய்வுப் பிரிவினர் மிகவும் விரிவான அறிக்கையொன்றை சமர்ப்பித்திருந்தனர்.

அக்குழுக்கள் யார் என இனம் காணப்பட்டுள்ளன. எல்லாவற்றையும் வெளிப்படுத்த முடியாத சூழலும் இருக்கிறது. இப்போதைய நிலவரத்தில் தூரநோக்கு, பக்குவம், சாணக்கியம் போன்றவற்றுடன் தீர்வுகளைத் தேட வேண்டியுள்ளது. அதற்கு முன்னோடியாக எமக்குள் தெளிவான கலந்துரையாடலும் ஒற்றுமையும் அவசியமாகும்.

வழிகாட்டல்களை ஜம்மியத்துல் உலமா, ஷூறா சபை உள்ளிட்ட சிவில் அமைப்புகளும் புத்திஜீவிகளும் மேற்கொண்டு வருகின்றனர். முஸ்லிம் அரசியல் தலைமைகளை ஒன்றிணைத்து செயற்பட வைப்பதற்காக அவர்கள் காத்திரமான நடவடிக்கைகளை மேற்கொண்டுள்ளனர்.

அன்று அஷ்ரப் எனும் ஆளுமை மீது கொண்டிருந்த காழ்ப்புணர்வு காரணமாக அவரை ஒடுக்குவதற்கே முனைப்புக் காட்டப்பட்டது. இன்று முழுமையாக ஒட்டுமொத்த முஸ்லிம் சமூகத்தின் மீது நடத்தப்படுகின்ற பாய்ச்சலாக அது பரிணாம மாற்றம் பெறுகின்ற நிலைக்கு வந்துள்ளது.

மேலும் கடந்த கால படிப்பினைகளை வைத்து, தூர நோக்கு சிந்தனையுடன் மிகவும் பக்குவமாக பிரச்சினைகளை அணுக வேண்டியுள்ளது என சிறிலங்கா முஸ்லிம் காங்கிரஸ் தலைவரும் நகர திட்டமிடல், நீர் வழங்கல் அமைச்சருமான ரவூப் ஹக்கீம் தெரிவித்தார்.

இஸ்ரேலின்... (09ம் பக்கத் தொடர்)

மேலும் வெறித்தனம், தேக்க நிலையை விட்டும் விடுபட்டவர் என்பதன் அடையாளமாகும். இது எல்லா விடயங்களிலும் பொருந்தி வரக்கூடியதே.

கடந்த 23 அன்று இஸ்ரேல் ஆக்கிரமித்திருந்த பகுதிகளில் காட்டுத் தீ பரவத் துவங்கியது தொட்டு தம் மகிழ்ச்சியை வெளிப்படுத்தும் 'இஸ்ரேல்' எரிகிறது என்ற அரபு வாசகம் அடங்கிய ஹேஷ் டெக்குகள் ட்விட்டரில் மூன்று இலட்சத்துக்கும் அதிகளவில் பகிரப்பட்டிருந்தன. அதன் போது இஸ்ரேலிய அரசின் உத்தியோகபூர்வ அரபு மொழி ட்விட்டர் கணக்கில் இவ் வாறு தமது செய்தியைப் பகிர்ந்தி ருந்தமை குறிப்பிடத்தக்கது:

இஸ்ரேலுக்கு தீமை நாடுவோர் ஒவ்வொருவருக்கும்- ''விசுவாசம் கொண்டோரே! ஒரு சமூகத்தார் பிறிதொரு சமூகத்தாரைப் பரிகாசம் செய்ய வேண்டாம். ஏனெனில் (பரிகசிக்கப்படு வோர்) அவர்களைவிட மேலான வர்களாக இருக்கலாம்...'' (அல்ஹுஜுராத்:11)

இந்தத் தூதுதை சுமந்து மறுமை நாள் வரைக்கும் அல்லாஹ் அளித்த பிரதிநிதித்துத்தை சுமக்கப் போகும் இந்த உம்மத்தின் பார்வை எப்போதும் விசாலமாகவே இருக்கும்.

அபாயா ... 01ம் பக்கத் தொடர்)

முதலமைச்சர் ஹாபிஸ் நஸீர் அஹமட் அரசிடம் வேண்டுகோள் விடுத்திருந்தார். இதனை அடுத்து 216 தமிழ் மொழி மூல ஆசிரியர்கள் கிழக்கு மாகாண பாடசாலைகளுக்கு நியமனம் பெற்றிருந்தனர். இவர்களில் 169 பேர் முஸ்லிம்கள் என கூறப்படுகின்றது. இவ்வாறு நியமனம் பெற்ற முஸ்லிம் ஆசிரியர்களில் ஒரு பகுதியினர் தமிழ் பாடசாலைகளுக்கும் இம் முறை நியமனம் பெற்றுள்ளனர்

இதன்படி கிழக்கு மாகாண தமிழ் பாடசாலைகளுக்கு புதிதாக நியமனம் பெற்றுள்ள முஸ்லிம் ஆசிரியைகள் 'அபாயா' உடை அணிந்து செல்வது தொடர்பாக சர்ச்சை எழுந்துள்ளது. ''முஸ்லிம் ஆசிரியைகள் அபாயா உடை அணிந்து பாடசாலைக்கு வரக் கூடாது. சேலை அணிந்தே வர வேண்டும்'' என அதிகாரிகளினால் நிர்ப்பந்திக்கப்படுவதாக கிழக்கு மாகாண சபை உறுப்பினரான ஷிப்லி பாஃரூக் தெரிவித்தார்.

மட்டக்களப்பு மாவட்ட தமிழ் பாடசாலைகளில் நியமனம் பெற்றவர்களிடமிருந்தே அபாயா உடை தொடர்பான முறைப்பாடு தன்னிடம் பதிவாகியிருப்பதாக ஷிப்லி பாஃரூக் தெரிவித்துள்ளார்.

தென்மாகாண தமிழ்மொழி ஆசிரியர் நியமனத்தின் போதும், முஸ்லிம் ஆசிரியர்கள் வந்தால் தமது கலாச்சாரம் பாதிக்கப்படும் எனக் கூறி முஸ்லிம் ஆசிரியர்களை தமிழ்ப் பாடசாலைகள் புறமொதுக்கியதாகவும் தெரிய வருகிறது.

இதேபோல கொழும்பில் நியமனம் பெற்ற ஆசிரியைகளும் அபாயாவை களைவதற்கு நிர்ப்பந்திக்கப்பட்டுள்ளனர். கொழும்பிலுள்ள தமிழ் மொழி மூல பிரபல பாடசாலைகள் பலதிலும் அபாயாவை கழற்றி விட்டு சேலை அணிந்து வருமாறு ஆசிரியர்கள் கோரப்பட்டுள்ளனர்.

மக்களை... (07ம் பக்கத் தொடர்)

இவ்விடயம் பாராளுமன்றில் முன் வைக்கப்பட வேண்டும். மூன்றில் இரண்டு பெரும்பான்மை பலத்தில் அது வெற்றிகொள்ளப்பட வேண்டும். பெரும்பான்மைச் சிங்கள மக்களின் ஆதரவு கிடைத்தாலேயே அவ்விடயம் சாத்தியப்படும். அதன் பின்னரே வடக்கு கிழக்கு இணைவு தீர்மாணிக்கப்படுகின்றது. எனவே நடைபெறாத ஒரு விடயத்திற்காக நாம் முண்டியடித்துக் கொள்ள வேண்டியதில்லை.

நடைபெறாத ஒரு விடயம் பற்றி நாம் ஏன் பேச வேண்டும். அவ்விடயம் பாராளுமன்றத்திற்குக் கொண்டுவரப்பட்டால் பேசலாம். இனப்பிரச்சினைக்கான தீர்வில் இன்னும் முடிவுகள் பெறப்படாத நிலையில் வடகிழக்கு இணைப்பு என்பது இலகுவான விடயமல்ல. பெரும்பான்மை சமூகத்தின் ஆசீர்வாதத்துடனேயே இவ் விடயம் அணுகப்பட வேண்டும்.

- **இது தொடர்பில் தமிழரசுக் கட்சியுடன் பேச்சுவார்த்தைகள் ஏதும் இடம்பெற்றனவா?**

தமிழரசுக் கட்சியுடன் எமக்கு நீண்ட கால உறவுள்ளது. வடக்கிலும் கிழக்கிலும் முஸ்லிம்களும் தமிழர்கள் ஒற்றுமையாக வாழ்ந்து வருகிறார்கள். அங்கு தமிழ் முஸ்லிம்களே பெரும்பான்மை. ஒரு மொழி பேசுகிறவர்கள் என்ற வகையில் எமக்குள் புரிந்துணர்வு இருக்க வேண்டும். அவர்களுடைய கருத்துக்கள் தொடர்பில் எமது தலைமைகள் பேச்சுவார்த்தைகள் மேற்கொண்டு வருகிறார்கள்.

தமிழர் அரசியல்:... (01ம் பக்கத் தொடர்)

மலையகத்தில் போராட்டம் ஆரம்பித்திருக்க வேண்டும். அது ஆயுத போராட்டமாக அல்லாமல் காத்திரமான அகிம்சை போராட்டமாக உருவெடுத்திருந்தால் இன்று மலையக மக்கள் பல வெற்றிகளைப் பெற்றிருக்க முடியும்.

வட கிழக்கு போராட்ட ரீதியாக தோல்வி அடைந்திருந்தாலும் அந்தப் போராட்டத்தின் ஊடாக இன்று அவர்கள் பல வெற்றிகளைப் பெற்று வருகின்றார்கள். எனவே மலையக மக்களுடைய பிரச்சினைகளும் சர்வதேச மயப்படுத்தப்பட வேண்டுமானால் நாம் தமிழ் தேசிய கூட்டமைப்போடு இணைந்து செயற்படுவது காலத்தின் கட்டாயமாகும்.'' என்றார்

''எதிர்காலத்தில் மலையக மக்களின் பிரச்சினைகளை தமிழ்த் தேசிய கூட்டமைப்பும் தமிழர்களின் பிரச்சினைகளைத் தமிழ் முற்போக்கு கூட்டணியும் பேசுவதற்கான நிலைமை உருவாக வேண்டும்.'' என்றும் தனது உரையில் இராஜாங்க அமைச்சர் வே. இராதகிருஸ்ணன் வலியுறுத்திக் கூறினார்.

இதேவேளை அமைச்சர் அமீர் அலி ஊடகமொன்றுக்கு அண்மையில் வழங்கிய பேட்டியொன்றின் போது, முஸ்லிம் கட்சிகளும் தலைமைகளும் எப்போதும் ஒரே நிலைப்பாட்டிலேயே செயற்பட வேண்டும் என்பது சாத்தியமாகாத விடயமாகவே தொடரும் என்று கூறியுள்ளார்.

இன, மதவாதம்... (01ம் பக்கத் தொடர்)

அதிபர் ஒருவரின் தலைமையில் இயங்கும் என்றும் அறிவிக்கப்பட்டுள்ளது. இலங்கையில், இனவாத மற்றும் மதவாதக் கருத்துக்கள் மீண்டும் தீவிரமடைந்து வரும் நிலையில், அதற்கு எதிராக அரசாங்கமும் பொலிஸாரும் செயற்படுவதில்லை என்ற விசனமும் கவலைகளும் வெளியிடப்பட்டு வருகின்றன.

இந்நிலையில், முரண்பாடுகளை தூண்டும் நோக்கில் செயற்படும் நபர்களுக்கு எதிராக கடும் நடவடிக்கை எடுக்குமாறு, ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவினால், பொலிஸ் மா அதிபருக்கு உத்தரவிடப்பட்டுள்ளது. இதற்கிணங்கவே, இந்த விசேட பொலிஸ் பிரிவு உருவாக்கப்பட்டுள்ளது.

இன மற்றும் மதங்களுக்கிடையிலான முரண்பாடுகளைத் தூண்டி, நாட்டில் மீண்டும் இன வன்முறையொன்றை ஏற்படுத்துவதற்கான சதித்திட்டமொன்று முன்னெடுக்கப்பட்டுள்ளதாக, புலனாய்வுத் துறையினர், ஜனாதிபதியிடம் எச்சரிக்கை விடுத்த நிலையிலேயே, இந்த உத்தரவை ஜனாதிபதி பிறப்பித்துள்ளமை குறிப்பிடத்தக்கது.

மீள்பார்வை

உள்நாட்டு - வெளிநாட்டு புதிய சந்தா விபரம்

மீள்பார்வை தனிப் பிரதி	ரூபா 40.00	இந்தியா		மத்திய கிழக்கு நாடுகள்	4000.00	ஐக்கிய இராச்சியம்	5500.00
13 இதழ்கள்	ரூபா 650.00	தனிப் பிரதி	ரூபா 100.00	மலேசியா	4000.00	அமெரிக்கா	6500.00
26 இதழ்கள்	ரூபா 1300.00	ஒரு வருடம்	ரூபா 3500.00	ஐக்கிய அறபு இராச்சியம்	4000.00	அவுஸ்திரேலியா	4700.00
						சீனா	4600.00

வங்கியில் பணம் செலுத்திவிட்டு, அதன் பிரதியையும் உங்களது பெயர், முகவரியையும் எமக்கு அனுப்பி வையுங்கள்:

MMC 49, Sri Mahinda Darma Mw, Dematagoda, Colombo 09. Hotline: 0112 691258 People's Bank A/c: 056100153078164 (Branch: Sri Sangaraja Mawatha)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

றவூப் ஸெய்ன் எழுதிய சமகால இலங்கை முஸ்லிம்கள்

நூல் வெளியீட்டு விழாவிலிருந்து....

நூல் அறிமுகத்திலிருந்து....

எம்.பி.எம். பிர்தௌஸ் (நளீமி) -
தவிசாளர், பிஸ்மி குழுமம்.

நாம் பெருமைப்பட்டுக் கொள்வதற்கோ அல்லது புலகாங்கிதம் அடைவதற்கோ இப்போது நம்மிடம் எதுவுமே இல்லை. நம்மை பற்றி பக்கசார்பற்ற சுய விசாரணைக்குரிய ஒரு கால கட்டத்தில் நாம் வாழ்ந்து கொண்டிருக்கின்றோம்.

நம்மைச் சுற்றி நடக்கின்ற ஒவ்வொரு நிகழ்வும் மிகவும் அபாயகரமானவையாக நடக்கின்றன. எமது மௌனங்களை கலைத்து செயற்பாட்டுத் தளத்தை நோக்கி பொறுப்பு வாய்ந்தவர்கள் செயற்படத் தாமதிக்கின்ற ஒவ்வொரு நிமிடமும் நம்முடைய எதிர்கால பரம்பரைக்கு நிச்சயம் பதில் சொல்ல வேண்டிய கடமையும் பொறுப்பும் உள்ளவர்களாக இருக்கின்றோம்.

இந்த நாட்டின் அரசியல் பின்புலமும் சர்வதேச அரசியல் பின்புலமும் ஏனைய அரசியல் நகர்வுகளும் மிகவும் அபாயகரமான ஒரு சூழலை நோக்கி நகர்ந்து கொண்டிருக்கின்ற வேளையில், இந்தப் புள்ளியிலே எங்களை நிறுத்தி ஒரு மீள் வாசிப்பு செய்கின்ற எங்களுடைய வரலாற்றை ஒருமுறை மீட்டிப் பார்க்கின்ற எம் அனைவரையும் ஒரு புள்ளியில் அமர்ந்திருந்து கருத்தாடல் செய்கின்ற ஒரு வேலைக்கான தொடக்க புள்ளியை சகோதரர் றவூப் ஸெய்ன் அவர்கள் இந்த புத்தகத்திற்கூடாக நமக்கு முன்னே நகர்த்தியிருக்கின்றார்.

சமகால இலங்கை முஸ்லிம் என்ற நூலினூடாக முஸ்லிம் சமூகவியல், பொருளாதாரம், கல்வி, அரசியல், வரலாறு, நிறுவனங்கள், புலமைத்துவம், சமூகப் பிரச்சினைகள் குறித்த ஓர் ஆய்வுக்கான முற்கோடை சகோதரர் றவூப் ஸெய்ன் அவர்கள் வரைந்திருக்கின்றார்கள்.

இந்த நாட்டிலேயே அடுத்த பரம்பரைக்கு நகர்த்தவேண்டியதொரு சொத்தாக எம் எல்லோரினதும் கரங்களிலும் இருக்க வேண்டிய ஒரு நூல் என்று நான் கருதுகின்றேன். அது மாத்திரமல்ல, இந்த நூல் சகோதரர் றவூப் ஸெய்ன் அவர்கள் 40 ஆவது வயதிலே 40 ஆவது நூலாக ஒரு பெறுமதியான ஆவணத்தை வெளியிட்டு வைக்கின்ற ஒரு வரலாற்று நிகழ்வு. இந்த நூலிலே முக்கியமான பல முன்மொழிவுகளை நூலாசிரியர் முன்வைத்திருக்கின்றார். அந்த முன்மொழிவுகள் கண்டிப்பாக சமூகத் தளத்திலே கலந்துரையாடலுக்குப்படுத்த வேண்டியவைகளாகும்.

அதேபோன்று நூலாசிரியர் இந்த நூலிலே மிக முக்கியமாக மூன்று விடயங்களை குறிப்பிடுகின்றார். ஒன்று, இலங்கைச் சூழலிலே ஆய்வு முயற்சிகளை கூட்டுச் செயற்பாட்டுத் தளமாக உருவாக்க வேண்டும் என்ற கருத்தை முன்வைக்கின்றார். இரண்டாவது, இவ்வாறான ஆய்வு முயற்சிகளை முன்னெடுப்பதற்கு நிறுவன ஒழுங்குகள் எதுவும் முஸ்லிம் சமூகத்தில் இல்லை என்பதாகும். எனவே, ஆய்வு முயற்சிகளிலே ஈடுபட்டிருக்கின்ற ஆய்வாளர்களை ஒன்றிணைத்து அவர்களுக்கான வசதி வாய்ப்புக்களை ஏற்படுத்திக் கொடுத்து, ஒரு நிறுவன, கூட்டு ஆய்வு முயற்சிக்கான வேலைத்திட்டம் தொடங்கப்படுவதற்கான அவசியத்தையும் இந்த நூலில் அவர் குறிப்பிட்டிருக்கிறார்.

மூன்றாவதாக, முஸ்லிம் சமூகத்தில் முதன்மைப்படுத்தப்பட வேண்டிய விடயங்கள் என்ன என்பது குறித்து அறிவூட்டப்பட வேண்டிய தேவையை சுட்டிக்காட்டியிருக்கிறார். எனவே, இந்த மூன்று விடயங்கள் குறித்தும் நாம் கூடுதல் கவனம் செலுத்த கடமைப்பட்டிருக்கின்றோம்.

இறுதியாக றவூப் ஸெய்ன் அவர்களின் சார்பாக ஒரு கருத்தை இந்த இடத்தில் முன்வைக்க விரும்புகின்றேன். இந்த நூலின் இரண்டாவது அத்தியாயம் இலங்கை முஸ்லிம்களின் சனத்தொகை கட்டமைப்பைப் பற்றி பேசுகின்றது. இந்த நாட்டிலே முஸ்லிம்களின் சனத்தொகை தொடர்பாக பிழையான கருத்துக்கள் பரப்பப்பட்டிருக்கின்றன. எனவே, முடியுமானால் சிங்களப் புலமையுள்ள சகோதர்கள் இந்த கட்டுரையை உடனடியாக சிங்களத்திற்கு மொழி மாற்றம் செய்து வெளியிடப்பட முடியுமாக இருந்தால் அது சகோதரர் றவூப் ஸெய்னின் எழுத்துப் பணிக்கு இன்னுமொரு வலுச்சேர்க்கின்ற பணியாக மாறும்.

இந்தப் புத்தகத்தை வாசித்து முடிக்கின்ற போது நமது தோள்கள் மீது இறைவன் சுமத்துகின்ற பணிகளின் கனதியை நாம் நிச்சயம் உணர்வோம். அவை வெறும் எழுத்துக்கள் அல்ல. இந்த எழுத்துக்கள் ஒவ்வொன்றும் நம்முடைய அடுத்த கட்ட நகர்வுக்கான உந்துதலாக அமையும் என்பதில் எத்தகைய சந்தேகமுமில்லை.

நூல் ஏற்புரையிலிருந்து....

றவூப் ஸெய்ன்
நூலாசிரியர்

கடந்த ஐந்து கால இடைவெளியில் எழுதப்பட்ட சில ஆய்வுக் கட்டுரைகள் ஓர் ஒழுங்கிலே தொகுக்கப்பட்டு இங்கு நூலாக வெளிவந்திருக்கின்றது. உண்மையில் இந்த நூலுக்கு நான் தலைப்பிட்டிருப்பது போன்று ஓர் ஆய்வுக்கான முற்கோடே தவிர இது முழுமையான ஆய்வு என்று நான் சொல்லவில்லை. இந்த இடத்திலிருந்து நாம் தொடங்கலாம் என்பதற்கான ஒரு தொடக்கப் புள்ளி மாத்திரமே இந்த நூலாகும்.

இலங்கை முஸ்லிம்கள் குறித்து மிகக் குறைவாக அல்லது யாருமே கவனத்தில் எடுக்காத ஒரு பகுதிதான் இலங்கை முஸ்லிம்களின் பொருளாதாரம். சமகாலத்தில் இலங்கை முஸ்லிம்களின் பொருளாரம் குறிப்பாக வணிகத்துறை எந்த இடத்தில் இருக்கின்றது என்பது பற்றி ஒரு களஆய்வு கண்டிப்பாக மேற்கொள்ளப்பட வேண்டும். அந்தக் களஆய்வுக்கு முன்பாக வரலாற்றில் நாங்கள் பொருளாதர ரீதியாக எப்படியிருந்தோம் என்பது பற்றிய தகவல்கள் என்னுடைய இந்த நூலில் முஸ்லிம்களின் பொருளாதாரம் என்ற கட்டுரையிலே இடம் பெற்றிருக்கின்றது.

அதேபோன்று இலங்கை முஸ்லிம்கள் பற்றிய ஒரு முழுமையான அடிப்படையான ஓர் ஆவணமாக (Profile) இந்நூல் இருக்குமென்பது எனது நம்பிக்கை. நாம் வாழ்கின்ற இந்த யுகம் தரவுகளின் யுகம். எப்போதும் உண்மைகள் தரவுகளிலிருந்து தான் பெறப்படுகின்றன. அந்த உண்மைகள் தான் தீர்வுகளையும் முடிவுகளையும் பெற்றுக்கொள்வதற்கு உதவுகின்றன.

இந்த இடத்திலே முஸ்லிம் சமூக நிறுவனங்களிடம் நான் சொல்லும் மிக முக்கியமான விடயம் எங்களிடம் ஆகக் குறைந்த ஒரு தகவல் திரட்டு (Data Bank) இருக்க வேண்டும். அல்ஜீரிய சிந்தனையாளர் மாலிக் பின் நபி, ஆய்வும் திட்டமிடலும் ஒரு சமூகத்தினுடைய இரண்டு சிறகுகள். அந்த இரண்டும் இல்லாமல் எதிர்காலத்தை நோக்கி ஒரு சமூகம் பறக்க முடியாது என்ற கருத்தை சொல்வார்கள்.

எனவே, நாங்கள் எந்த சமூகத்தில் மாற்றத்தை ஏற்படுத்த விரும்புகின்றோமோ அந்த சமூகம் பற்றிய புள்ளிவிபரங்கள் இல்லாத நிலையிலே எதுவும் செய்ய முடியாது. அந்த பின்னணியில்தான் இந்த நூல் எழுதப்பட்டிருக்கின்றது. இதில் எல்லா தகவல்களும் தரவுகளும் உள்ள ஒரு முழுமையான ஆய்வு என்று நான் ஒரு நாளும் சொல்லமாட்டேன். இது ஒரு ஆய்வுக்கான முதற்படி மாத்திரமே.

பிரதம அதிதி உரையிலிருந்து...

கலாநிதி எம்.ஏ.எம். சுக்ரி
பணிப்பாளர், ஜாமிஆ நளீமிய்யா

இந்த நூலை படித்தபோது உண்மையில் றவூப் ஸெய்ன் அவர்கள் மிக ஆழமாக பகுப்பாய்வு செய்து பல்வேறு துறைகள் சார்ந்த ஒரு அருமையான ஓர் நூலை எழுதியிருக்கின்றார்கள் என்ற உணர்வு எனக்கு ஏற்பட்டது. றவூப் ஸெய்ன் அவர்கள் ஒரு முன்னணி ஆய்வாளர், எழுத்தாளர், பன்நூல் ஆசிரியர். பல்வேறு தலைப்புகளிலே அவர் நூல்களை வெளியிட்டிருக்கின்றார். அத்தனையும் முஸ்லிம் சமூகம் சார்ந்த, கல்வி, கலாசாரம், பண்பாடு, வரலாறு, சமூகவியல் ஆகிய தலைப்புகளை தழுவிய நூல்களாவே இருக்கின்றன. தனது 40வது வயதினிலே 40வது நூலாக இந்த பெறுமதியான நூல் வெளிவருகின்றது.

இலங்கை முஸ்லிம் சமூகத்தைப் பொறுத்தவரையில் ஆய்வாளர்கள் மிகவும் குறைவாகவே இருக்கின்றார்கள். எமது சமூகம் எப்போதும் அவசரமாக ஒன்றை சாதிக்க விரும்புகின்ற சமூகம். அமைதியாக திட்டமிட்டு, அர்ப்பணித்து, தியாகத்தை மேற்கொண்டு, உழைத்து ஒரு அறுவடையை பெறுவதை எமது சமூகம் விரும்புவதில்லை.

எனவேதான் நாங்கள் கல்வித் துறையிலேயே பின்னடைந்திருக்கின்றோம். ஆராய்ச்சியிலே பின்னடைந்திருக்கின்றோம். இது உண்மையிலே ஆரோக்கியமான ஓர் அறிகுறியல்ல. எனவே தொடர்ந்து வருகின்ற ஆய்வாளர்களுக்கு சிறந்த முன்மாதிரியாக றவூப் ஸெய்னின் இந்த நூல் திகழும் என்பது எனது நம்பிக்கை.

வாழ்க்கை எழுதும் கவிதை

• இன்ஸாப் ஸலாஹுதீன்

"இன்னும் தாதி கழுவாத
இப்பொழுதுதான் பிறந்த
குழந்தையின்
பழைய சட்டை என்று ஏதும் இல்லை
பழைய வீடு என்றும் ஏதும் இல்லை
மெல்லத் திறக்கும் கண்களால்
எந்த உலகை புதுசாக்க வந்தாய்,
செல்லக்குட்டி அதை
எப்படி ஆக்குகிறாய், என்
தங்கக்குட்டி" - தேவதச்சன்

ஒரு குழந்தையின் வரவில் இந்த உலகமே மகிழ்கிறது. பெண்மையின் மகத்தாக பொறுமையிலும் அவள் தாங்கிக் கொள்ளும் வேதனையினாலும் எல்லோரையும் சிரிக்க வைக்கிறாள். ஒரு பிரசவம் என்பது நூறு வீதமும் பெண்கள் எதிர் கொள்வது. அதிலிருக்கும் சுகமும் வேதனையும் மலைகளின் பாரத்தைத் தன்னுள் புதைத்துக் கொண்டு அவள் படும் அவஸ்தையும் பார்வைக்குப் புலப்படுவதில்லை. ஆணுக்கு அதில் என்ன பெரிய பங்கு இருந்துவிடப் போகிறது.

ஒரு பெண் கருவுற்றது முதல் அவள் இரண்டு உலகங்களைத் தன்னகத்தே சுமக்க ஆரம்பிக்கிறாள். அவளது முழு வாழ்க்கையும் எதனிடமோ ஒப்புக் கொடுக்கப் படுகின்றது. வரம்புகளும் எல்லைகளும் அவளைச் சூழ வந்து விடுகின்றன. தன் சிறகுகளை மெல்ல அவள் மடித்துக் கொள்கிறாள்.

கருவில் இருக்கும் குழந்தை எப்படி இருக்கிறது. அது எப்படிப் பிறக்கப் போகிறது? யாரைப் போல இருக்கப் போகிறது? இது போன்ற ஏராளமான கேள்விகள் கணவன் மனைவிக்கிடையில் வந்து போகத்தான் செய்கின்றன. பெண் குழந்தையைச் சுமக்கிறாள். ஆண் எதிர் பார்ப்புக்களைச் சுமக்கிறான்.

பிரசவத்திற்கான காலம் நெருங்க நெருங்க பதட்டமும் பயமும் அதிகரிக்கின்றது. எமக்கான ஒரு வாரிசை எதிர்பார்க்கும் தருணம் அது. நம் இறந்த கர்லத்தையும் நிகழ்காலத்தையும் குழைத்துச் செய்யப் போகும் ஒரு கலவை அது. ஒரு குழந்தை உருவாகும் முறையே ஆச்சரியமும் அற்புதமும் நிறைந்தது தானே! எத்தனை முறை நினைத்தாலும் அது எப்படிச் சாத்தியமாகிறது என்பதை அவ்வளவு சீக்கிரம் புரிந்து கொள்ள முடியாது. இறைவனின் பெருங் கொடை அது.

மனைவியைப் பிரசவத்திற்காக வைத்தியசாலையில் அனுமதித்திருந்த நாட்களில் என் இதயமெங்கும் வெறுமை பரவிக் கிடந்தது. உலகம் என் தலைக்குள் சுற்றிக் கொண்டிருந்தது. திருமணத்தின் முதற் பரிசைக் காண்பதற்காய் நான் வைத்தியசாலையில் காத்து நின்றேன். பயமும் பதட்டமும் என் கால்களினூடு இதயம் நோக்கிப் படர்ந்து கொண்டிருந்தது.

குழந்தைகள் இந்த வாழ்க்கையில் கிடைக்கும் ஒரு பாக்கியம். ஆனால் அப் பாக்கியம் இல்லாமல் பலர் இருக்கத்தான் செய்கிறார்கள். மனித வாழ்க்கையில் இறந்த காலம் ஒரு நினைவு போல இருக்கிறது. எதிர்காலம் கனவு போல இருக்கிறது. நிகழ்காலமே யதார்த்தமாக இருக்கிறது. யதார்த்தமே ஆயிரம் பாடங்களைக் கற்றுத் தருகிறது.

சுதந்திரமாகத் திரியும் எல்லோருமே திருமணம் என்ற விசாலமான வட்டத்திற்குள் உட்படத்தான் செய்கிறோம். பின்னர் இரு தொகுதி விருப்பங் களின் கூட்டுக் கலவையுடன் விட்டுக் கொடுத்தும் கொடுக்காமலும் மன்னித்தும் மறந்தும் நாம் வாழப் பழகிக் கொள்கிறோம்.

பொதுவில் நாம் திருமணம் முடித்து சில காலத்திலேயே குழந்தைகளை உருவாக்கிக் கொண்டு விடுகிறோம். ஒரு பெண் திருமணத்தின் பின்னர் சிறிது காலமே சுதந்திரமான சுகங்களை அனுபவிக்கிறாள். பின் சுமையுடன் கலந்த சுகம்தான் வாழ்க்கை முழுவதும் நீடிக்கிறது.

ஒரு பெண் கருவுற்றது முதல் அவள் குழந்தையைப் பெற்றெடுத்து, பால் கொடுத்து பராமரித்து ஆளாக்கி திருமணம் முடித்துக் கொடுப்பது வரையுள்ள தொடர் போராட்டத்தில் முக்கால் பகுதித் துயர் அவளுடையதாகவே இருக்கிறது. இது சமூகத்தில் எழுதப்படாத விதியாகவும் மாற்ற முடியாத ஒன்றாகவுமே இருந்து வருகிறது.

ஒரு குழந்தையைப் பராமரிப்பதை முற்றிலும் பெண்கள் சார்ந்ததாகவே ஆண் மனம் நோக்குகிறது. இதனால் எமது பெண்கள் சொல்ல முடியாமல் பல கசப்புகளை தாங்கிக் கொண்டுதான் வாழ்கிறார்கள்.

ஒரு குழந்தை பிறந்தது முதல் அது வளரும் ஒவ்வொரு தருணமும் தனித்த மகிழ்ச்சியைக் கொண்டது. அழுகை, சிரிப்பு, கண்ணசைவு என ஒவ்வொரு வயதிலும் அது எங்களை மகிழ்ச்சிப் படுத்திக் கொண்டே வளர்கின்றது. அத்தகைய தருணங்களை நாம் மனப் பெட்டிக்குள் சேமித்துக் கொள்கிறோம். சொல்லிச் சொல்லி மகிழ்கிறோம்.

ஒரு குழந்தை தன் மழலைப் புன்னகையினால் வரட்சியான வாழ்க்கையில் நீரை ஊற்றுகிறது. அர்த்தம் புரியாத வார்த்தைகள் அவர்களின் வாயிலிருந்து உதிர்கின்றன. எங்களுக்கும் உலகத்திற்குமாக குழந்தைகள் எதையோ சொல்ல நினைக்கின்றன. சூழ இருப்பவர்களை மகிழ்ச்சியின் நதியில் நிறைய வைக்கின்றன குழந்தைகள்.

குழந்தைகள் தமக்கென பிரத்தியேகமான சொற்களைக் கொண்டிருக்கின்றன. சில போது ஒரே சொல்லை அவர்கள் திரும்பத் திரும்ப பயன்படுத்துகிறார்கள். சில சொற்களை அவர்கள் திரும்பப் பயன்படுத்துவதேயில்லை. வார்த்தைகளின் குகைகளுக்குள் அவற்றை மறைத்துக் கொள்கின்றார்கள். நாளுக்கு நாள் மெல்ல மெல்ல அவர்களின் வார்த்தைகள் வளர்கின்றன.

பின்னர் எங்கள் வார்த்தைகளால் நாம் அவற்றைத் திருடி விடுகிறோம்.

நாட்கள் செல்லச் செல்ல சொற்களின் பொட்டலத்தை மெல்லப் பிரித்து சந்தர்ப்பத்திற்கேற்ப வார்த்தைகளைப் பயன்படுத்துகிறது குழந்தை. இப்படித்தான் வளர்ந்தவர்களின் உலகோடு குழந்தை தன்னை சரிசெய்து கொள்கிறது எனத் தெரிகிறது. பின் ஒரே வார்த்தைகளால் நாம் தொடர்பு கொள்கிறோம். நாம் மகத்தானது எனக் கருதும் மொழிகளை குழந்தைகளின் உலகில் திணிக்கிறோம். அது உச்சரிப்புத் தவறும் போது கடிந்து கொள்கிறோம். குழந்தைக்கும் எமக்குமான மொழி ஒரே கோட்டில் பயணிக்கத் தொடங்குகிறது. அவர்களின் மொழியையும் உணர்வுகளையும் நாம் மெல்லப் பறித்துக் கொள்கிறோம்.

இப்படியாக ஒவ்வொரு வயதிலும் நாம் எமது குழந்தைகளைக் கொண்டாடுகிறோம். அவர்களது செயல்கள் எம்மை மகிழ்ச்சிப்படுத்துகின்றன. எமது உள்ளம் அவர்களையே சுமந்து வாழத் தொடங்கிவிடுகிறது.

இருந்தாலும் குழந்தைகளைக் கொண்டாடும் உலகத்திலிருந்து நாம் மெல்ல மெல்ல விடுவிக்கும் ஒரு காலம் எல்லோருக்கும் வர்த்தான் போகிறது. நாங்களும் பெற்றோர்களிடமிருந்து எம்மை அப்படி விடுவித்துக் கொண்டவர்கள்தாம்.

குழந்தை வளர்ப்பைப் பற்றி எவ்வளவு படித்தாலும் ஒரு குழந்தையை அந்த முறையில் வளர்த்து விட முடியாது. அது முழுக்க முழுக்க நடைமுறை சார்ந்தது. குழந்தை வளர்ப்பு குறித்துப் பேசுபவர்கள் எல்லாம் என்ன நல்ல வாரிசுகளையா படைத்துப் பரிசளித்திருக்கிறார்கள்.

குழந்தைகள் வளர வளரத்தான் பிரச்சினைகள் தோன்றுகின்றன. பெற்றோரிடம் சார்ந்திருக்கும் தேவையை விடுவித்துக் கொள்ளும் போதுதான் இரு தரப்புக்குமான இடைவெளி தோன்ற ஆரம்பிக்கின்றது.

மனுஷ்யபுத்திரன் சொல்வது போல "குழந்தைகள் ஒவ்வொரு படியாக தங்களை விடுவித்துக் கொள்கிறார்கள். அவர்கள் சுயேச்சையான மனிதர்களாக மாற மாற பெற்றோர்கள் மீதான தங்கள் சாய்மானத்தை கொஞ்சம் கொஞ்சமாக விளக்குகிறார்கள். ஆனால் அன்பின் பிடிமானமும் இறுக்கமும் பரிதவிப்பும் இந்த சார்ந்திருத்தலில்தான் இருக்கிறது. அவர்கள் நம் முன்னால் அந்த சார்புகளை கொஞ்சம் கொஞ்சமாகக் கைவிடும் போது நம் மனம் பேதலிக்கிறது. கடுமையான தனிமையுணர்ச்சியை அடைகிறது."

வாழ்க்கையின் யதார்த்தம் அப்படித்தான் இருக்கின்றது. குழந்தைகளைப் பெற்றுக் கொள்கிறோம். உயிராய் பராமரிக்கிறோம். ஒரு கட்டத்தில் நாம் தனிமையின் தீவுகளில் சஞ்சரிக்கின்றோம். இருந்தும் இந்த வாழ்க்கையை உதறித் தள்ளிவிட முடியாது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கைத் பேல் விலகல்

ரியல் மட்ரிட் கழகத்தின் நட்சத்திர வீரர் கெரத் பேலுக்கு ஏற்பட்டுள்ள கணுக்கால் உபாதையினால் 2 மாதங்களுக்கு விளையாட முடியாத நிலை ஏற்பட்டுள்ளது. கடந்த செவ்வாய்க் கிழமை லண்டனில் அவருக்கு சத்திரசிகிச்சை மேற்கொள்ளப்பட்ட நிலையில் இந்த தகவலை ரியல் மட்ரிட் கழகம் வெளியிட்டுள்ளது.

கடந்த 22ஆம் திகதி ஸ்போட்டிங் லிஸ்பன் அணிக்கெதிரான போட்டியில் விளையாடும் போதே கரத் பேலுக்கு உபாதை ஏற்பட்டிருந்தது. இந்தப் போட்டியில் ரியல் மட்ரிட் கழகம் 2:1 என்ற கோல்கள் அடிப்படையில் வெற்றிபெற்றமை குறிப்பிடத்தக்கது.

இலங்கை அணிக்கு சவால்கள் காத்திருக்கின்றன

கிரஹம் போர்ட் எச்சரிக்கை

சிம்பாப்வேயில் இடம்பெற்ற முத்தரப்பு ஒரு நாள் தொடரில் சம்பியனான இலங்கை அணி கடந்த செவ்வாய்க்கிழமை நாடு திரும்பியது. இதன் போது இலங்கை அணியின் பயிற்சியாளர் கிரஹம் போர்ட், அடுத்த மாதம் தென் ஆபிரிக்காவில் இடம்பெற இருக்கின்ற கிரிக்கெட் தொடர் இலங்கை அணிக்கு சவாலாக அமையுமென எச்சரிக்கை விடுத்துள்ளார் . தென் ஆபிரிக்கா அணி தற்போது சிறந்த நிலையில் இருப்பதாகவும் அவ்வணியை வீழ்த்த இலங்கை அணி துடுப்பாட்டம், பந்துவீச்சு, களத்தடுப்பு ஆகிய மூன்றிலும் கவனம் செலுத்துவது அவசியமென்றும் அவர் மேலும் தெரிவித்தார். ஹராரேயில் இடம்பெற்ற 2 டெஸ்ட் போட்டிகளிலும் வெற்றிபெற்ற இலங்கை அணி, கடந்த ஞாயிறு இடம்பெற்ற முத்தரப்பு ஒரு நாள் தொடரின் இறுதிப் போட்டியிலும் சிம்பாவே அணியை 6 விக்கட்டுகளால் வீழ்த்தியிருந்தது. இலங்கை அணியின் தலைவர் மெதிவூஸ் மற்றும் உப தலைவர் சந்திமால் ஆகியோர் உபாதை காரணமாக குறித்த போட்டித் தொடர் களில் கலந்து கொண்டிருக்கவில்லை. இது தொடர்பில் அஞ்சலோ மெதியூஸ், நானும் சந்திமாலும் உபாதையிலிருந்து மீண்டிருக்கிறோம். டிசம்பரில் இடம்பெற உள்ள தென் ஆபிரிக்காவுடனான தொடரில் சிறப்பாக விளையாட நாம் தயாராகவே இருக்கின்றோம் எனவும் ஊடகங்களுக்கு தெரிவித்தார் .

வீரர்களுக்கு ஓய்வு தேவை

இங்கிலாந்து வீரர்களுக்கு ஓய்வு தேவைப்படுவதாக அவ்வணியின் தலைவர்அலஸ்டயர் குக் ஊடகங்களுக்குத் தெரிவித்தார். மொஹாலியில் இடம்பெற்ற 3வது டெஸ்ட் போட்டியில் இங்கிலாந்து அணியை இந்தியா 8 விக்கட்டுக்களால் வீழ்த்தி தொடரில் 2-0 என்ற அடிப்படையில் முன்னிலை வகிக்கின்றது. கடந்த 6 வாரங்களில் இங்கிலாந்து விளையாடிய 5வது டெஸ்ட் போட்டியாக இது அமைந்திருந்தமை குறிப்பிடத்தக்கது. இந்தியாவுடனான 4வது டெஸ்ட் போட்டி டிசம்பர் 8ம் திகதி தொடங்க இருக்கின்றது. இதனால் இங்கிலாந்து அணியின் சில வீரர்கள் ஓய்வெடுப் பதற்காக டுபாய் செல்லத் திட்டமிட்டுள்ளனர்.

6 வாரங்களில் 5 டெஸ்ட் போட்டிகளில் தொடர்ந்து விளையாடுவதென்பதுமிகவும் கடினமான விடயம். எமது வீரர்களுக்கு கடந்த 6 வாரங் களில் ஓய்வு கிடைத்திருக் கவில்லை. 4வது டெஸ்ட் போட்டி எதிர் வரும் 8ம் திகதியே ஆரம்பமாக இருப்பதால் வீரர்களுக்கு சிறிது ஓய்வு கிடைத்திருக்கிறது.

இது எமது வீரர்கள் உடல், உள ரீதியாக பலமடைவதற்கு உதவும் என நம்புவதாகவும் அடுத்த 2 டெஸ்ட் போட்டிகளிலும் வெற்றி பெற்று தொடரை சமப்படுத்த போராடுவோம் எனவும் இங்கி லாந்து அணியின் தலைவர் தெரிவித்தார்.

Dialog Awards 2016

வசீம் அக்ரம் பிரதம அதிதி

ஆண்டின் சிறந்த வீரர் மெதியூஸ்

மக்கள் அபிமான விருது டில்ஷானுக்கு

சிறப்பாக விளையாடிய இலங்கை கிரிக்கெட் அணி வீரர்களுக்கான டயலொக் விருது வழங்கும் நிகழ்வு கடந்த 30ஆம் திகதி இடம்பெற்றது. இந்நிகழ்வில் பிரதம அதிதியாக பாகிஸ்தான் அணியின் முன்னாள் தலைவர் வஸீம் அக்ரம் கலந்து கொண்டார். இங்கு உரையாற்றிய அவர், என்னை பொறுத்தவரை இலங்கை நாடானது மறக்க முடியாத ஒரு இடம். நாங்கள் இலங்கையை பூமியில் காணப்படும் சுவர்க்கம் என்றே அழைக்கின்றோம். இலங்கையிலுள்ள ஒவ்வொருவரினதும் முகத்திலும் சிரிப்பு காணப்படும். அவர்கள் அனைவரும் மகிழ்சியானவர்கள், நன்றாக உபசரிப்பவர்கள், நான் இலங்கை வீதியால் நடந்து செல்கின்ற போது எனது தாய் நாட்டில் இருப்பது போன்ற உணர்வைப் பெறுகிறேன் என்று தெரிவித்ததோடு இலங்கை வீரர்கள் மைதானத்தில் விளையாட்டு உணர்வுடன் செயற்படக் கூடிய கனவான்கள் என்றும் பாராட்டினார். இந்நிகழ்வில் விளையாட்டுத்துறை அமைச்சர் தயா சிறி ஜயசேகர, பிரதிய மைச்சர் ஹரீஸ், இலங்கை கிரிக்கெட் சபைத் தலைவர் , திலங்க சுமதிபால உட்பட முன்னாள் வீரர்கள் பலரும் கலந்து கொண்டனர்.

விருதுகள் விபரம்:

- ஆண்டின் சிறந்த ஒருநாள் சகல துறை வீரர் - மெதியூஸ்.
- ஆண்டின் சிறந்த ஒருநாள் பந்து வீச்சாளர் - லசித் மலிங்க.
- ஆண்டின் சிறந்த ஒருநாள் துடுப்பாட்ட வீரர் - குமார் சங்கக்கார.
- ஆண்டின் சிறந்த டெஸ்ட் சகல துறை வீரர் - மெதியூஸ்
- ஆண்டின் சிறந்த டெஸ்ட் பந்து வீச்சாளர் - ரங்கன ஹேரத்
- ஆண்டின் சிறந்த டெஸ்ட் துடுப்பாட்ட வீரர் - தினேஷ் சந்திமால்
- வளந்து வரும் வீரர் - குசல் மென்டிஸ்
- மக்கள் அபிமானம் வென்ற வீரர் - டில்ஷான் (493,196 வாக்குகள்)
- ஆண்டின் சிறந்த கிரிக்கெட் வீரர் - அஞ்சலோ மெதியூஸ்.

ஒருநாள் தரவரிசை:

நடைபெற்று முடிந்த முத்தரப்பு ஒரு நாள் போட்டித் தொடரில் வெற்றி பெற்றதைத் தொடர்ந்து இலங்கை அணி 101 புள்ளிகளோடு 6வது இடத்திற்கு முன்னேறியுள்ளது. அவுஸ்திரேலியா, தென்ஆபிரிக்கா, நியூஸிலாந்து ஆகிய அணிகள் முறையே முதலாம், இரண்டாம், மூன்றாம் இடங்களை பிடித்துள்ளன. துடுப்பாட்ட வீரர்களுக்கான ஒரு நாள் தரவரிசையில் தனஞ்சய டி சில்வா 48வது இடத்தையும் பந்து வீச்சாளர்களுக்கான தர வரிசையில் சுரங்க லக்மல் 15ஆவது இடத்தையும் பிடித்துள்ளார்.

மீள்பார்வையின் 20வது ஆண்டு நிறைவு விழாவின் போது மீள்பார்வை கலண்டர்களை முதற் பிரதியாக பெற்றுக்கொண்ட பிரமுகர்கள்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Published by Colombo Media (Pvt) Ltd, 39, Sri Mahinda Dharma Mawatha, Colombo 09.